367

ஜகன்மோகினி

ஆசிரியை :
வை. மு. கோதைநாயகி அம்மாள்

367

18 OCT 1939
MADRAS

கானல் நீர்

[illegible]ஸின் தவ ப்ரஸாதம் ?

பன்றிக் குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் ? தின்னும்.

மனிதர்களின் வாழ்க்கையிலும் அனேக பூகம்பங்கள் தோன்றிப் பலவித மாறுதல்களைச் செய்து விடுமல்லவா ?

இத்தனை வயதான பிறகு உங்களுக்கேன் இந்த ஸினிமா மோகம் ?

குற்றத்திற்கும் ஒரு எல்லையுண்டு. மன்னிப்பதற்கும் ஒரு வரம்பு உண்டு.

மாமா ! அசல் மன்மதக்குஞ்சுபோலேதானே இருக்கிறேன் ?

இது போன்ற அருமையான விஷயங்களை உள்ளே படித்து இன்புறுங்கள்.

1815

ஆகஸ்டு 1939

கபட உலகம்

அணா 2

இவ் வருடத்தின் இணையற்ற படம்

எனப் பார்த்தவர்களால் புகழப்பட்டிகிறது

P. B. ரங்காச்சாரி, C. V. V. பந்துலு, N. S. கிருஷ்ணன், T. A. மதுரம், R. B. லக்ஷ்மிதேவி, K. R. ஆதிலக்ஷ்மி

நடித்த

'ஆனந்தாஸ்ரமம்'

கீழ்க்கண்ட இடங்களில் மிக்க வெற்றியுடன் ஓடிக்கொண்டிருக்கிறது

கோயம்புத்தூர்	—	எடிசன்ஸ் தியேட்டர்	2-வது வாரம்
புதுக்கோட்டை	—	பிரஹதாம்பாள் டாக்கீஸ்	2-வது வாரம்
பெங்களூர்	—	ஆப்பேரா	21-7-39 முதல்
வேலூர்	—	ராக்ஸி	21-7-39 முதல்

விரைவில் எதிர்பாருங்கள் :

நாகப்பட்டணம்	—	யூனிவர்சல் டாக்கீஸ்
மதுரை	—	சிட்டி சினிமா
திருநெல்வேலி	—	ராயல் டாக்கீஸ்
சேலம்	—	சென்ட்ரல் டாக்கீஸ்

கைவசம் :

1. கிராதா - அர்ஜுனா
தமிழ்
சேலம், கோவை, திருச்சி, மலபார், மைசூர் ஸ்டேட்

2. கிருஷ்ண ஜராசந்தா
தெலுங்கு
சென்னை, தமிழ்நாடு, மைசூர் ஸ்டேட்

சேலம் ஸ்ரீ ரங்கர் பிலிம்ஸ் குகை, சேலம்.

பூச்சி போன்ற
சின்னப் பொண்ணு
மைலார்டு
என்னம்மா மைலார்டு
காயப்படுத்தும் மைலார்டு

என்று

அதிர்ஷ்டம்

என்ற தமிழ் படத்தில்

வாதி தரப்பு வக்கீல்
ஐயா கூறுகிறர்

இதை

29-7-39 முதல் கெபிட்டியில்

தினசரி 3 காக்ஷிகள்
2-15, 6, 9-30-மணிக்கு

கண்டு களியுங்கள்

(மயூரா பிலிம்ஸ் வெளியீடு)

ஜகஜ்ஜோதி நடனம் ! கர்ணாமிர்த கானம் ! !

கிராத-அர்ஜுனா

(அர்ஜுனன் தவம்)

[கிடைத்தற்கரிய பாசுபதாஸ்திரமானாலு மென்ன ?

நிஜ பக்தியால் ஆகாத தொன்று மில்லை.

காதல் வழிதான் கரடுமுரடென்பார்.

ஊர்வசியின் காதல் உண்மைக் காதல்தான் ;

ஆயினும் அர்ஜுனன் அதைத் திரஸ்கரித்தான்.

வில் விஜயன், வீரகாண்டீபன், அர்ஜுனன் ஊர்வசியின் சாபத்திற்கு இலக்கானான்—?]

கே. சுப்புலக்ஷ்மி (திருக்காரவாசல்) — ஊர்வசி

எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி — அர்ஜுனன்

டி. என். இராமசாமி பிள்ளை — சிவன்-கிராதன்

கே. பவானி — நாரதர்

விவரங்களுக்கு :

வீனஸ் பிக்சர்ஸ்

ராயப்பேட்டை :: :: சென்னை.

"சாரதி" யின்

ரயத்பிட்டா

[தெலுங்கு பேசும் படம்]

27—8—39'-ல்

எல்லா ஊர்களிலும் வெளிவருகிறது

டைரெக்ஷன் :

ஜி. ராமபிரும்மம்



தயாரித்தவர்கள் :

சாரதி பிலிம்ஸ் லிமிடெட்.,

சென்னை.

டிஸ்ட்ரிபியூட்டர்ஸ் :

சரஸ்வதி டாகீஸ் லிமிடெட்.,

பெஜவாடா.

அகக் கதவா ? **ஆலயக் கதவா ?**

தற்காலம் நம் தென்னிந்தியாவில் எங்கு பார்த்தாலும் ஹரிஜனங்களின் ஆலயப்பிரவேச விஷயமான வார்த்தைகளே சப்திக்கின்றன.

ஹரிஜனங்களை மமதை பிடித்த ஜாதி ஹிந்துக்கள் எத்தனை விதங்களில் துன்புறுத்தி உயிரையும் போக்கத் துணிந்திருக்கிறார்கள் என்ற அதி உருக்கமான விஷயத்தையும், ஹரிஜனங்களுக்காகத் தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தஞ்செய்துழைக்கும் சதிபதிகளின் அபரிமிதமான அன்பின் பெருக்கையும் பற்றி வெகு எளிய முறையில் தெளிவாக எழுதியுள்ள,

மகிழ்ச்சி உதயம்

என்ற நாவலைப் படித்து முதலில் உங்கள் இதயக் கோயிலை அவர்களுக்குத் திறவுங்கள். பிறகு பகவானின் திருக்கோயில் தானாகவே ஆளின்றித் திறந்துகொள்ளும்.

அணா 10. சந்தாநேயர்களுக்கு அணா 8.

உருத்த இதயம்

இதைப் படிக்கும்போது உங்கள் இதயமும், மனமும், கண்களும் உங்கள் கட்டுக்கடங்காதென்பது திண்ணம். ஒவ்வொரு வரியிலும் உங்களைப் பரவசமுறச் செய்யும் சக்தி வாய்ந்த நாவல் இது.

விலை அணா நான்கே தான்.

18 OCT 1939
MADRAS

ஸ்ரீ ராமஜெயம்.

ஜகன்மோகினி

ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

—திருவள்ளுவர்.

ஜகன்மோ கினியென்னுஞ் சஞ்சிகையைக் காக்க
ஜகன்மோ கினி ! மனத்தைச் சார்ந்து.

—ஸ்ரீ வீரராகவ கவி.

மலர் 16	பிரமாதி ஸு ஆடி மீ ஆகஸ்டு 1939	இதழ் 8

திருமால் துதி

தேனாறு கோதைத் திருமாமகள் சேருமார்பன்
பூநாறு பாதம் புகழ்கின்றவர் நாளும்பொல்லா
ஊனாறு கின்றவொழியா வுடனீங்கி யோங்கும்
வானாறு சென்று மகிழ்தூங்குவர் வைகுந்தத்தே ! 1

பானாறு தீஞ்சொற் பனிமாமலர்ப் பாவைமார்வன்
கானாறு பாதங் கருதித்தொழு கின்றமாந்தர்
ஊனாறு காயமுற நீங்கியிவ் வுலகுநீங்கி
வானாறு சென்று மகிழ்வெய்துவர் வைகுந்தத்தே! 2

பண்தங்கு மென்மொழிப் பாவை நல்லாய்ச்சியர் மாமுலையின்
கண்தங்கு நேமிக் கருமுகில் பாதங்கருத் துவைப்பார்
விண்தங்கு நுண்ணிடை மெல்லியல் வாழ்திரு மார்பனருள்
எண்தங்க கில்லா விரும்பதம் எய்துவர் ஏந்திழையே ! 3

—திரு. ராகவாசாரியர்.

பொதுச் செய்திகள்

தமிழ் நாட்டில் 100 ஆலயங்கள் திறக்கப்பட்டன

இன்றுவரை ஹரிஜனங்கள் பிரவேசிக்க திறந்து விடப்பட்டிருக்கும் ஆலயங்களின் விவரம் வருமாறு :—

மதுரை ஜில்லா :—மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவில், கூடல் அழகர் கோவில், அழகர்கோவில், கல்லழகர் கோவில், திருமோகூர் கோவில்.

திருநெல்வேலி ஜில்லா :—குற்றாலம் ஸ்ரீ குற்றாலலிங்கேஸ்வரர் கோவில், தென்காசி ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவில்.

திருச்சி ஜில்லா :—பூவளூர் ஸ்ரீ வரதராஜஸ்வாமி கோவில்.

தஞ்சை ஜில்லா :—தஞ்சாவூர் ஸ்ரீ பிரகதீஸ்வரர் கோவில் உள்பட, ராஜா சாகிப் அவர்கள் ஆதினத்தில் உள்ள 90 கோவில்கள்.

செங்கற்பட்டு ஜில்லா :—பூந்தமல்லி திருக்கச்சி நம்பி கோவில்.

நீலகிரி ஜில்லா :—உதகை ஸ்ரீ விநாயகர் கோவில்.

இலங்கைக்கு இனி தொழிலாளரை உதவப் போவதில்லை

இலங்கைக்கு விரோதமாக பழிக்குப் பழி வாங்க இந்திய சர்க்கார் அத்தீவுக்குத் தொழிலாளர்கள் அனுப்பப் படுவதை நிறுத்த உத்தரவு பிறப்பித்து விட்டது. அந்த உத்தரவு உடனே அமுலுக்குவரும். இந்திய தொழிலாளரை நீக்கி, தாய் நாட்டுக்கு அனுப்புவது சம்பந்தமாகத் தங்கள் நோக்கத்தை இலங்கை சர்க்கார் மாற்றிக்கொள்ளாதவரையில், வர்த்தக பேச்சு நடத்தப் போவதில்லை யென்று இந்திய சர்க்கார் ஏற்கெனவேயே இலங்கைக்குத் தெரிவித்து விட்டது.

போலந்துக்கு உதவி

போலந்துடன் இரண்டுமுக்கியமானவிஷயங்களைப்பற்றிச் சம்பாஷணைகள் நடந்து வருவதாக, நிதி மந்திரி ஸர் ஜான் ஸைமன் காமன்ஸ் சபையின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறினார்.

1. போலிஷ் சர்க்கார் தங்கள் தற்காப்புக்குவேண்டிய தளவாடங்களைப் பிரிட்டனிலிருந்து 80 லக்ஷம் பவுன் வரை கடனாக வாங்கிக்கொள்ள வசதிகள்.

2. பிரிட்டிஷ், பிரெஞ்சுக்காரர்கள் சேர்ந்து ரொக்கமாக, போலந்துக்குக் கடன் கொடுப்பது.

எந்த நிபந்தனைகளின் பேரில் கடனைக் கொடுப்பதென்பதைப்பற்றி ஒப்பந்த மேற்படவில்லையென்றும், எனவே இது சம்பந்தமான மசோதா விடுமுறைக்குமுன் பார்லிமெண்டில் வருவது துர்லபமென்றும் ஸர். ஜான் தெரிவித்தார்.

183035

“ பல வருஷப் பயனை வீணாக்காதீர்கள் ”

சென்னையில் ஜவஹர்லால் நேரு கர்ஜனை

இந்தியாவில் எவ்வளவோ வித்தியாசங்கள் இருப்பதுபோல் தோன்றுகின்றன. இருந்தாலும் ஒரு அடிப்படையான விஷயத்தில் எல்லா இந்தியர்களின் ஹிருதயங்களிலும் ஒரே கருத்துத் தான் இருக்கிறது. இந்தியா தன் அடிமைத் தளைகளையெல்லாம் களைந்தெறிந்து, தனக்குரிய மகோன்னத ஸ்தானத்தைப் பெறவேண்டு மென்பதில் எல்லோரும் ஏகோபித்த அபிப்பிராய முடையவர்களா யிருக்கிறார்கள். நான் இந்தியா வெங்கும் சுற்றி யலைந்துகொண்டிருக்கிறேன். எங்கு சென்றாலும் இந்த அடிப்படையான ஒற்றுமையைக் கண்டிருக்கிறேன்.

*　　*　　*　　*　　*

நாம் இன்னம் அடிமை நாட்டினராகவே இருந்தாலும், பலம் பொருந்திய ஒரு சமுதாயத்தினரா யிருக்கிறோம். அத்துடன் நமக்குப் பலம் இருக்கிற தென்பதையும் உணர்ந்திருக்கிறோம். இன்று வெளிநாடுகளில் இந்தியர்களுக்கு நல்ல கௌரவம் இருக்கிறது. தேசீயத்தில் கூட தேசம் மிகவும் அபிவிருத்தி யடைந்திருக்கிறது. பல மாகாணங்களில் காங்கிரஸ்காரர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருப்பது இதற்குக் காரணமல்ல. நமக்குக் கிடைத்திருக்கும் பலத்தின் விளைவுதான் நிர்வாகப் பொறுப்பு. ஒருபுறம் நாம் கடுமையான போராட்டத்தின் மத்தியிலிருக்கிறோம். இந்தப் போராட்டம் வேறு ரூபத்தில் நடக்குமா வென்பது ஒரு புறம் இருக்கட்டும். போராட்டம் நடந்தாக வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. போராட்டம் நடந்துகொண்டுதான் இருக்கிறது. நாம் இப்போது நிர்வாகப்பொறுப்பை ஏற்று நடத்துகிறோ மென்றாலும் எதிரிகளுடன் ஒத்துழைக்கிறோம் என்ற மனப் பான்மையிலல்ல. ஆகவே, எதிரிகள் என்ற உணர்ச்சியுடனேயே, தேசீயத்துக்கும், ஏகாதிபத்தியத்துக்கும் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த இரண்டும் ஒருநாளும் ஒத்துழைக்க முடியாது. சம அந்தஸ்துள்ளவர்கள்தான் ஒத்துழைக்க முடியும். ஆகவே, நம் போராட்டம் இன்னும் நடந்துகொண்டுதான் இருக்கிறதென்பதை மறந்து விடக்கூடாது.

*　　*　　*　　*　　*

கிளர்ச்சி மனப்பான்மை இருக்க வேண்டியதுதான். அத்துடன் அடக்கமும் தெரிந்திருக்க வேண்டும். இப்போதைய காங்கிரஸ நிலைமையில் இந்த இரண்டையும் நாம் ஒன்றுசேர்த்துக்கொண்டு போகாவிட்டால், இந்த நிலைமையால் பலன் பெற்றவர்களாக மாட்டோம்.

*　　*　　*　　*　　*

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை எதிர்த்து வெற்றிகரமாகப் போராடுவதற்கான காலம் இப்போது நம்மிடம் இருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆனால், நமக்குள்ளேயே பலஹீனம் இருக்கிறது. பொது விரோதியை எதிர்ப்பதற்குப் பதிலாக நமது சக்திகளை யெல்லாம் நமக்குள்

சண்டை போட்டுக் கொள்வதிலேயே வியர்த்தமாக்குகிறோம். ஒரு தேசம் விழிப்படைந்து வளர்ச்சி யடையும்போது முரண்பாடுகள் வளருவது இயற்கையே. ஆனால், அந்த முரண்பாடுகள், நமது தேசத்தின் லக்ஷியத்திற்குக் கெடுதலான முறையில் வளர்ந்தால், அது ஒரு துரதிர்ஷ்டமே.

நான் மதில்மேல் பூனை போல் உட்கார்ந்து கொண்டிருப்பதாகக் குற்றம் சாட்டி சென்ற ஆறு மாதங்களாக எனக்குக் கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. என் சொந்த சமாசாரத்தைப்பற்றி நானே பேசுவது கஷ்டமான காரியம். சென்ற ஆறு, ஏழு மாதங்களாக, காங்கிரஸுக்குள் பிளவு மனப்பான்மையும், அவநம்பிக்கையும் ஒருவர் மீதொருவர் குற்றம் சாட்டுவதும், வளர்ந்துகொண்டு வந்திருக்கிறது. காங்கிரஸ் போன்ற ஒரு பெரிய ஸ்தாபனத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்கத்தான் செய்யும். எந்தப்பெரிய ஸ்தாபனத்திலும் நம்மை நாமே சோதனை செய்துகொள்வதற்கு உரிமை இருக்க வேண்டியதே. சர்வாதிகார தோரணையான ஸ்தாபனங்களை நாம் விரும்பவில்லை. கண்ணை மூடிக்கொண்டு எல்லாவற்றையும் செய்வதற்குப் பதிலாக, நன்றாக பரிசீலனை செய்யும் உணர்ச்சி இருக்க வேண்டும். ஆனால் இப்போது நான் பார்ப்பது இந்தப் பரிசீலனை மனப்பான்மையல்ல. அவநம்பிக்கையும், விரோதமும்தான் திரை மறைவில் இருக்கும் உணர்ச்சிகள். இந்த உணச்சிகளை நம் எதிரிகள் விஷயத்தில் தான் காட்டவேண்டும். அதை விடுத்து, காங்கிரஸுக்குள்ளேயே இந்த உணர்ச்சிகளை விருத்தி செய்துகொண்டு போனால் நாம் ஒன்றும் செய்ய முடியாது.

* * * * *

இந்தச் சமயத்தில் காங்கிரஸிலுள்ள பிளவு மனப்பான்மையை மிகைப்படுத்துவதோ, பலப்படுத்துவதோ பெரிய குற்றம். ஒற்றுமை என்ற பெயரின் கீழ், தவறான காரியங்களுக்கும் நாம் உடன்படவேண்டும் என்று நான் சொல்லவில்லை. அழகான வார்த்தைகளில் நாம் மயங்கிவிடக் கூடாது. சோஷலிஸ்ட் சுலோகங்களைச் சொல்லித்தான் ஹிட்லரும், முசோலினியும் ஆதிக்கம் பெற்றார்கள். பாமர மக்களைத் திருப்புவதற்குச் சுலோகங்களும், கோஷங்களும் வேண்டியதுதான்.

ஆனால், தவறாகவும் இதை உபயோகிக்கப்படக்கூடும். இந்தியா சம்பந்தப்பட்டவரையில் எனக்கு ஒரு விஷயத்தைப்பற்றிப் பயமா யிருக்கிறது. இந்தக் கோஷங்கள் அவைகளின் கருத்துக்கு மாறான வழிகளில் உபயோகிக்கப்படுகின்றன. சரியாக அர்த்தம் தெரிந்து கொள்ளாமல் அதை உபயோகிக்கிறார்கள். நமது வாலிபர்களில் பலர் அதில் மூழ்கியிருக்கிறார்கள். நாம் ஜாக்கிரதையாக இராவிட்டால், அவர்கள் தவறான பாதையில் சென்று நமது ஸ்தாபனத்தைப் பலஹீனப்படுத்தி விடுவார்கள்.

* * * * *

பதவி ஏற்றுக் கொண்டதால், நமக்குப் பல நன்மைகள் ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. காங்கிரஸ் மந்திரிகள் ஜனங்களுக்குப் பல சௌகரியங்கள் செய்திருக்கிறார்கள். அத்துடன் காங்கிரஸ் பதவி ஏற்றதின் பலனாக ஜனங்களிடையே நல்ல விழிப்பேற்பட்டது.

'கிளர்ச்சி என்பது என்ன? நிர்வாகப் பொறுப்பு என்பது என்ன?' என்று ஜனங்கள் தெரிந்துகொண்டு அநுபவம் பெறுவதற்கு இது மிகவும் உபயோகமானது. இந்தப் பயிற்சி மிகவும் அவசியமானது. இப் பயிற்சி இல்லாவிட்டால், நாம் சிதறிப்போய்விடுவோம். பதவி ஏற்றதால் ஏற்பட்ட நன்மை இது.

* * * * *

காங்கிரஸிலுள்ள மெஜாரிடியின் விருப்பத்திற்கு மாறாக நான் ஏதாவது செய்தால், நான் நல்லெண்ணத்துடன் செய்திருந்தாலும், எனக்குத் தண்டனை கொடுக்க வேண்டியதுதான். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடுவதற்குக் காங்கிரஸைத் தவிர வேறு எந்த ஆயுதமும் கிடையாது. குழப்பத்தையும் அராஜகத்தையும் தடுப்பதற்குக் காங்கிரஸைத் தவிர இந்தியாவில் வேறு எந்த சக்தியும் இல்லை. காங்கிரஸ—ம் சில சமயங்களில் தோல்வியடையக்கூடும். ஆனால் சீக்கிரத்தில் காங்கிரஸ், நிலைமையைச் சமாளித்து விடும். ஆகையால், பல வருஷங்கள் கஷ்டப்பட்டு நாம் தயார் செய்திருக்கும் ஆயுதத்தை மொட்டையாக்கக் கூடிய எதையும் செய்யுமுன், நாம் ஆயிரம் தடவை யோசிக்க வேண்டும்."



"ரயத் பிட்டா"வில் ஸ்ரீமதி சூர்யகுமாரி.

மதிப்புரை

சூறாவளி

வாரப் பத்திரிகை. ஆசிரியர்: க. நா. சுப்ரமண்யம். துணை ஆசிரியர் : கி. ரா. வருடச் சந்தா : ரூ. 6—0—0. தனிப்பிரதி விலை : 2 அணா. விலாஸம் : 187, மவுண்ட்ரோட், சென்னை.

*சென்னையில் புதியதாகத் தோன்றியுள்ள பல பத்திரிகைகளில் **சூறாவளி**யும் ஒன்று. இது, ஞாயிறுதோறும் வெளிவரும் வாரப்பத்திரிகை. பத்திரிகை உலகில் புதியதொரு முறையைப் புகுத்தி, அரசியல் அறிவோடு பொது விஷயங்களையும் தகுந்த முறையில் அவ்வவ் விஷயங்களில் தேர்ந்த அனுபவம் பெற்றுள்ள அறிஞர்களைக்கொண்டு கட்டுரை எழுதச்செய்து, உயர்ந்த முறையில் வெளியிட முன் வந்திருப்பது போற்றத் தக்கதே. ஆர்ட் பேபரில் ஸினிமாப் பிரியர்களுக்கு வாரந்தோறும் நல்ல விருந்து உண்டு. தமிழ் அன்பர்கள் சூறாவளியை வாங்கி, அவர்களுக்கு ஊக்கம் அளிப்பார்களென நம்புகிறோம்.*

ஜனநாயகத்தை விட்டவர்களுக்கு உதவியா?

இந்தியா ஒருகாலும் ஒத்துழைக்காது

"ஜப்பானுடன் புதிய ஏற்பாட்டைச் செய்துகொண்டிருப்பதாக சேம்பர்லேன் கூறுகிறார். 'திருப்தி செய்விப்பது' என்ற தோரணையில் சுதந்திரப் பற்றுள்ள மக்களின் நியாயத்தையெல்லாம் காற்று வாக்கில் விட்டு அவர்களைக் காட்டிக்கொடுக்கும் அவரது பழையகொள்கையில் ஒருபகுதியே. சேம்பர்லேனும் ஹாலிபாக்ஸும் சற்று மனம் விட்டுப் பேசியதிலிருந்து, பிரிட்டிஷ்கொள்கை மாறிவிட்டதாக சிலர் நினைத்தனர். ஆனால், மூனிச்சின் நிழல் பிரிட்டிஷ் கொள்கையைத் தொடர்ந்து வந்து பாஸிஸத்தைப் பரப்புகிறது.

* * * *

நம்முடைய கடமை தெளிவாயிருக்கிறது. பாஸிஸ்ட் அனுதாபமுள்ள இந்தப் பிரிட்டிஷ் சர்க்காரின் கொள்கைக்கும் நமது உள் நாட்டு வெளி நாட்டுக் கொள்கைக்கும் கொஞ்சமும் சம்பந்தமிருக்க முடியாது. சேம்பர்லேன் என்ன சொன்ன போதிலும், சீனாவையும் விடுதலைக்காகப் போரிடும் எல்லா மக்களையும் நாம் ஆதரிக்கிறோம். யுத்தம் வந்தால் ஜனநாயகத்தைப் பன்முறை காட்டிக்கொடுத்த இந்த ஏகாதிபத்திய சர்க்காருக்கு நாம் உதவி யளிப்பது மனதிலும் நினைக்க முடியாது.

ஜனநாயக வல்லரசுகள் பாஸிஸத்தை எதிர்ப்பதாகக் கூறுவதெல்லாம் வெறும் சோம்பேறிப் பேச்சு. பிரிட்டிஷ் சர்க்கார் இப்பொழுது ஜன நாயகத்தை ஆதரிப்பதாகவோ, அல்லது இனி ஆதரிப்பார்களென்றோ, குருடர்களும் அறிவிலிகளுந்தான் கூறுவார்கள். ஆகையால், நம்மீது எந்த யுத்தத்தையாவது திணிக்க நடைபெறும் முயற்சிகளை எதிர்க்கத் தயாராயிருக்க வேண்டும். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் ஒத்துழைக்க மறுத்துவிட வேண்டும்.

— ஸ்ரீ. ஜவஹர்லால் நேரு.

காந்தீயம் என்ருல் என்ன ?

காந்திய மென்பது நமது நாடு இழந்த கலாசாரத்தையும், சிறப்பையும், நசித்துப்போன—இன்னும் நசித்து போய்க்கொண்டிருக்கிற—கைத்தொழில் களையும் புதிப்பிப்பதே ஆகும்.

150 வருஷ அந்நிய ஆட்சியானது நமது மனதின் போக்கையே மாற்றி விட்டது. நாம் நம்முடைய சொந்த கலாசாரத்தை மறந்துவிட்டு, சில்லரை விஷயங்களில்கூட அந்நியரைக் காப்பியடிக்கத் தொடங்கிவிட்டோம். போட்டி போடும் சுபாவம் நமக்குக் கிடையாது. அதைக்கூட நாம் மேல் நாட்டாரிடமிருந்து காப்பியடித்து உத்யோகத்துக்குப் போட்டிப் பரீட்சை யொன்று ஏற்படுத்தத் தொடங்கிவிட்டோம். சாமான்களைப் போட்டி போடும் முறையில் உற்பத்திசெய்வதையும் மேல்நாட்டாரிடமிருந்து கற்றுக் கொண்டுவிட்டோம். ஆகவே, நம்மைச் சரீர சம்பந்தப்பட்டமட்டிலல்ல, நமது மனதையும் அவர்கள் அடிமைப்படுத்தி விட்டார்கள். இந்த அடி மைத்தனத்திலிருந்து நம்மை மீட்கவே காந்திஜீ அவதாரமாயிருக்கிருர்.

காந்திஜீயின் தலைமையின் விசேஷம் இதுதான். அதாவது மற்றத் தலைவர்கள் "போங்கள், காரியத்தைச் சாதித்துக் கொண்டு வாருங்கள்" என்று சொல்லுவார்கள். ஆனல், காந்திஜீயோ "வாருங்கள் : காரியத்தை சாதித்துக்கொண்டு வருவோம்" என்று சொல்லுவார். இதுதான் காந்தி ஜீக்கும் மற்றுமுள்ளோருக்குமுள்ள வித்யாசம். மத சம்பந்தமாகவும், சமூக சம்பந்தமாகவும், அரசியல் சம்பந்தமாகவும் காந்திஜியின் தலைமை வேரூன்றி விட்டது.

ஆத்மாவே பின்பலம்

காந்தீயத்துக்குப் பின்பலமாக இருப்பது நம்முடைய ஆத்மாதான். இப்பொழுது நம்முடைய ஆத்மா மேல்நாட்டாரிடமிருக்கிறது. நம்மு டைய இந்த ஆத்மாவை நாம்மறுபடியும் மேல்நாட்டாரிடமிருந்து திரும்பப் பெற்றுவிட்டால், நாம்விரும்பும் ஸ்வராஜ்யம் கிடைத்துவிடும். இதற்கு சத்ய மும் அஹிம்சையுமே இன்றியமையாதது. இதுதான் காந்தீயத்தின் சாரம்.

கதரும் காந்தீயமும்

அந்நியநாட்டுத் துணிதான் நமது அடிமைத்தனத்துக்குக் காரணமென் பதை முதன்முதலில் தெரிந்துகொண்டது காந்திஜிதான். துணி சம்பந் தப்பட்டமட்டிலல்ல. எல்லாத் துறைகளிலுமே மேல் நாட்டின் ஆதிக்க மேற்பட்டது. மேல்நாட்டார்தான் நமது ஆக்ரக புருஷர்கள் என்று எண்ணத் தொடங்கிவிட்டோம். நிறத்தில்கூட அவர்களே மேல் என்று நினைக்கத் தொடங்கிவிட்டோம். நமது பையன்களுக்கு விவாகம் செய்து விக்க விரும்பினலும், பெண் சிவப்பாயிருக்கிருளா என்று பார்க்கிரேம். இந்த அடிமைமனப்பான்மை காந்திஜியின் மனதைப் புண்படுத்தியது. அந்நிய நாட்டுத் துணியால் ஏற்படும் பொருளாதார நஷ்டமோ நமக்கெல்லோருக் கும் தெரிந்ததுதான். இதையெல்லாம் உணர்ந்தே காந்திஜி முதன் முதல் கதர் இயக்கத்தை ஆரம்பித்தார். கம்சன், தனது சகோதரிக்குப் பிறந்த ஒவ்வொரு குழந்தையையும் கண்டு பயப்பட்டதுபோல், காந்திஜீயின் இந்தக் கதர் இயக்கத்தைக் கண்டு மேல்நாட்டார் நடுநடுங்கத் தொடங்கிவிட்டனர்.

இயந்திரம் நமது அடிமை

மேல் நாட்டார் இயந்திரத்தை தங்கள் யஜமானன் என்று கருதுகின் றனர். காந்தியம் அதை நமது அடிமை அல்லது வேலைக்காரன் என்று

கருதுகிறது. பணக்காரனை மேலும் மேலும் பணக்காரனாகவும், ஏழையை இன்னும் ஏழையாகவும் ஆக்குவதை காந்தீயம் ஆதரிக்காது. எல்லோருக்கும் சமமான வசதியளிக்கவேண்டுமென்பதே காந்தீயம். நமது நாட்டில் நசிந்து போன கைத்தொழிலை மீட்டினால்தான் அந்த நிலைமை ஏற்படும். அதற்காகவே காந்தீயம் பாடுபடுகிறது.

துரதிர்ஷ்டவசமாக நமது கலாசாலைப்படிப்பு நம்மையெப்பொழுதும் தன்னைப்பற்றியே நினைத்துக்கொண்டிருக்கும் சுயநல எண்ணத்தை வளர்த்துவிட்டது. நமது நாட்டின் கலையும் கைத்தொழிலும் அழிந்துவிட்டது.

காந்தீய அபேதவாதம்

சமூகத்திலுள்ள ஏற்றத் தாழ்வு போய், ஒவ்வொரு மனிதனுக்கும் போதிய அளவு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க வீடும் கிடைக்கவேண்டு மென்பதே காந்தீய அபேதவாதமாகும். சுருக்கமாய்ச் சொல்லுங்கால், நமது கைத்தொழிலைப் பெருக்கவும், விவசாயத்தை நடத்தவும், ஒரு பொது கூட்டுறவு ஸ்தாபனமேற்பட வேண்டும். எனது சொந்த அபிப்பிராயம் இதுதான். அதாவது அபேதவாதம் செழித்தோங்கி வளர நமது நாடே மிகவும் பக்குவமானது. காந்தீயத்தின் பிரகாரம் தாய்மொழிக்குத்தான் பிராதான்யம் கொடுக்கவேண்டும். கலாசாலைகளில் அந்நியநாட்டு பாஷையை கற்றுக்கொள்ள விரும்பினால் அதை தனிப்பாடமாகத்தான் கற்றுக்கொள்ள வேண்டும். ஜனங்களுக்கு இப்பொழுது நியாயம் வழங்குவதென்றால், கச்சேரிகளில் அதிகச் செலவும், தொந்தரவு மேற்படுகிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும்.

"லக்ஷியம்தான் குறி, அதை அடைவதற்கு அனுஷ்டிக்கும்முறை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம்" என்ற வாதத்தை காந்தீயம் ஏற்றுக் கொள்ளாது. நமது லக்ஷியத்தை சாதிப்பதற்கு அனுஷ்டிக்கப்படும் முறையையும் புனிதமாகவே இருக்கவேண்டும் என்பது காந்தீயத்தின் சாரமான கொள்கை. இம்மாதிரியான ஒரு புனிதமான சகாப்தத்தை இவ்வுலகத்தில் ஆரம்பித்து வைக்க, ஐந்து மகத்தான மதங்கள் தோன்றிய நமது நாடே முற்றிலும் லாயக்குள்ளது.

காந்தீயம் தோற்கலாம் அல்லது ஜயிக்கலாம். ஆனால் காந்தீயத்தை அனுஷ்டிக்கும் சத்யாக்ரஹிகளுக்குத் தோல்வி யென்பது கிடையாது. தோல்வி யென்று சொல்லப்படும் ஒவ்வொரு படியும் வரப்போகும் மகத்தான வெற்றிக்கு அஸ்திவாரமாக இருக்கும். தன் கடமையைச் செய்து கொண்டு போவதே சத்யாக்ரஹியின் கடமை.

—டாக்டர் பட்டாபி சீதாராமய்யா.

* * * *

லார்ட் ஸின்ஹா

காலஞ்சென்ற லார்ட் ஸின்ஹாவின் மூத்த குமாரன் என்ற ஹோதாவில் பிரபுக்கள் சபையில் ஸ்தானம் வகிக்க, இப்போதைய லார்ட் ஸின்ஹாவுக்கு உரிமையுண்டு என்று பிரபுக்கள் சபையின் உரிமைக் கமிட்டியார் கருதுவதாக, பிரபுக்கள் சபையின் அக்ராஸனர் (லார்ட் சான்ஸலர்) தீர்ப்பளித்தார்.

மகாத்மாவின் மணிவாக்கு

ஆலயப் பிரவேசம்

மதுரையில் மகத்தான வெற்றி

தீண்டாமையை எதிர்த்தும், ஹரிஜனங்களுக்கு ஆலயப்பிரவேச உரிமையை வற்புறுத்தியும் நடந்துவரும் இயக்கத்தில், இது ஒரு மகத்தான சம்பவம். திருவாங்கூர் மகாராஜாவின் ஆலயப்பிரவேச பிரகடனம் மிகவும் பெரிய காரியம் தான். ஆனால், அது மகாராஜாவின் சித்தம். அவருக்குப் புத்திசாலியான ஒரு திவானும் இருந்தார். மகாராஜா, மகாராணி, திவான் மூவருமாகச் சேர்ந்து அந்த மாறுதலைச் செய்தார்கள். ஆனால், பிரசித்தி பெற்ற மதுரைக் கோவில் திறக்கப் பட்டது, அதைவிடப் பெரிய சம்பவம். ஏனெனில், பொதுஜனங்களின் உறுதியினால் இந்தச் சம்பவம் நேர்ந்திருக்கிறது. மீனாக்ஷி ஆலயத்திற்குச் செல்பவர்களுக்கு முற்றிலும் மனமாறுதல் ஏற்பட்டிருக்கிற தென்பதையே இது காட்டுகிறது. பொதுஜன அபிப்பிராயத்தை உருவாக்குவதற்கு ஸ்ரீ. வைத்தியநாத ஐயரும் அவருடைய சகபாடிகளும், இடைவிடாமல் செய்த முயற்சிகளை மனமாரப் பாராட்டவேண்டும்.

அவசரம் வேண்டாம்

இதைத் தொடர்ந்து தெற்கேயுள்ள இதர கோவில்களும் திறக்கப் படுமென்று நம்புவோமாக. இதில் ஒன்றும் அவசரப்படக் கூடாது. கோவிலுக்குச்செல்பவர்களின் அபிப்பிராயத்திற்கு ரொம்ப மதிப்புண்டு. முடிவான வார்த்தை அவர்களுடையதாகத்தான் இருக்கவேண்டும். ஊழியர்கள் ஒவ்வொரு லாபத்தையும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்து, பாதகம் ஏற்படாதவாறு பார்த்துக்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கோவிலையும் திறக்கும் போதும், அதற்கு உள்ளேயும் வெளியேயும், இன்னும் அதிக பரிசுத்தம் இருக்கவேண்டும். அத்தகைய கோவில்களின் புனிதம் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது. இது முற்றிலும் மத சம்பந்தமான ஒரு காரியம். இதை அரசியலுக்காக உபயோகித்துக்கொள்ளக்கூடாது. ஆலயப்பிரவேசத்தின் உட்கருத்து என்ன வென்பதை ஹரிஜன்களும் உணரும்படி செய்யவேண்டும்''

மாகாணப் போட்டி வேண்டாம்

நல்ல ஆரோக்கியமான முறையில் மாகாண உணர்ச்சி ஏற்படலாம். அது ஏற்படத்தான் செய்யும். மாகாணத்துக்கு மாகாணம் சில வித்தியாசங்கள் இல்லாவிடில், தனி மாகாணங்கள் இருப்பது அர்த்தமற்ற விஷய

மாகும். ஆனால், இந்த வித்தியாசம் ஆரோக்கியமானதாக இருக்கவேண்டும். பரஸ்பரம் தீமைக்குக் காரணமாக இருக்கக்கூடாது. நமது மாகாண உணர்ச்சி குறுகிய மனப்பான்மை யுள்ளதாகவும் பிற மாகாணங்களிடம் வேற்றுமைப்புத்தி காட்டுவதாகவு மிருக்கலாகாது. மாகாண உணர்ச்சியின் போக்கு, தேசம் முழுதின் க்ஷேமத்துக்கும் பொருத்தமானதாக இருக்கவேண்டும்; மாகாணங்கள் என்பன, தேசத்தின் பகுதியே யன்றோ; பல உபநதிகள் சேர்ந்து ஒரு பெரிய ஆறு ஏற்படுவதுபோல, பல மாகாணங்களும் சம்மேளித்து ஒரு தேசமாகிறது. உபநதிகள் முக்கிய நதியைப் பெரிதாக்குகின்றன. உபநதிகளின் பலமும் தூய்மையும் பெரிய நதியின் கம்பீரத்தை அதிகப்படுத்தும். மாகாணங்களின் நிலைமை இவ்வாறே அமைய வேண்டும். மாகாணங்கள் செய்யும் எந்தக் காரியமும் தேசத்தின் பெருமையை அதிகப்படுத்துவதாக அமைதல்வேண்டும்.

கவி ரவீந்திரநாத் தாகூரின் எழுத்துக்கள் வங்காளத்துக்குப் பெருமை யளிக்கின்றன வென்றால், அதே சமயத்தில் அவை இந்தியா முழுதுக்கும் பெருமை யளிக்கின்றன. அவருடைய கவிதையின் செல்வாக்கு இந்தியா முழுவதிலும் வியாபிக்கவில்லையா? தாதாபாய் நௌரோஜியின் வாழ்க்கை பார்ஸி சமூகத்தினருக்குமட்டும்தான் சொந்தமா? பம்பாய்க்காக மட்டும் தான் அவர் வாழ்ந்தாரா? இல்லை. அவரது வாழ்க்கையின் பெருமை இந்தியா முழுவதற்கும் சொந்தம். இந்தியா முழுதுக்குமாகவே அவர் வாழ்ந்தார்.

உலகப் பிரஜைகள் என்ற மனப்பான்மை

இந்தியாவைப் பரஸ்பரம் சம்பந்தமற்ற தனித்தொகுதிகளாகப் பிரிவு படுத்தும் எந்தமுயற்சியையும் எதிர்த்தே தீரவேண்டும். சுதந்திரமுள்ள ஒரு சக்திவாய்ந்த நாடாக முதிர்ந்து உலகத்தின் முன்னேற்றத்துக்கு இந்தத் தேசம் மட்டுமே செய்யக்கூடிய பெரும்சேவை செய்யவேண்டு மென்பது தான் நமது லக்ஷியம். நமது தேசபக்தியும் தேசிய உணர்ச்சியும் எந்தச் சமயத்திலும் பிறரை ஒதுக்கும் வேற்றுமை யுணர்ச்சியைக் கொண்டதல்ல. வேறெந்த நாட்டுக்கும் தீங்கு விளைவிக்கும் முறையில் நம் க்ஷேமத்தைச் சாதித்துக்கொள்ள நாம் விரும்பவில்லை.

''நாங்கள் எல்லோரும் இந்திய பிரஜைகள்; அதே சமயத்தில் நாங்கள் உலகத்துப் பிரஜைகளாகவும் வாழ்வோம்'' என்று நாம் சொல்லிக் கொள்ளுங் காலம் வரவேண்டும்; வந்தே தீரும். ஆனால், நாம் சுதந்தர இந்தியாவின் பிரஜைகளாக இருக்கும் கலையில் தேர்ச்சி பெற்றாலொழிய அந்தக் காலம் வராது. விஷத்தன்மை வாய்ந்த மாகாண வேற்றுமை யுணர்ச்சியை நாம் வளர்த்தால் தேசிய பிரஜா உணர்ச்சியை நாம் பூர்ணமாகப் பெற முடியாது. சரியான தேசிய வாழ்வு ஒவ்வொருவனின் தனி வாழ்விலிருந்தே ஆரம்பிக்கவேண்டும். நான் பலமுள்ளவனாகவும், சுதந்திரமுள்ளவனாகவும் இருக்க விரும்புவது நான் மட்டுமல்லாமல் என் பக்கத்திலுள்ள மற்றவர்களும் என் சக்தியின் பயனையும் என் சுதந்திரத்தின் பயனையும் பெறவேண்டும் என்பதற்காகத்தான். நாம் தனி மனிதர் என்ற ஹோதாவிலும் சரி, குறிப்பிட்ட ஒரு மாகாணத்தைச் சேர்ந்தவர் என்ற ஹோதாவிலும் சரி, நம்மிடமுள்ள சிறந்த அம்சங்களைத் தாய் நாட்டிற்குக் காணிக்கையாக வைக்கவேண்டும்.

சமஸ்தானாதிபதிகளுக்கு ஐந்து நிபந்தனைகள்

பெரிய சமஸ்தானமாயிருந்தாலும், சிறிய சமஸ்தான்மாயிருந்தாலும் அவர்கள் குறைந்த பக்ஷம் கொடுக்கவேண்டியதைச் சொல்லுகிறேன். 1. பூர்ண பிரஜா உரிமைகள் கொடுக்கவேண்டும். நேர்முகமாகவோ, மறைமுகமாகவோ பலாத்கார பிரசாரத்திற்காக உபயோகித்துக் கொள்ளாமலிருக்கும் வரையில், பூர்ண பிரஜா உரிமைகள் இருக்கவேண்டும். பத்திரிகை சுதந்திரமும் இதில் அடங்கியதே. பலாத்கார பிரசாரம் செய்யாத பத்திரிகைகளை வர வழைக்க உரிமை இருக்க வேண்டும். 2. சமஸ்தான பிரஜைகள் சங்கம் அமைத்து, பொறுப்பாட்சிப் பிரசாரம் செய்ய உரிமை வேண்டும். 3. இந்தியாவிலுள்ள யாரும் அவர்களுடைய நடவடிக்கைகள், சமஸ்தானங்களைக் கவிழ்க்கும் முறையில் இல்லாதவரையில், எந்த தங்கு தடையுமில்லாமல், சமஸ்தானங்களுக்குள் வர சுதந்தரம் இருக்கவேண்டும். 4. சமஸ்தானாதிபதிகளின் சொந்த செலவுகளுக்காக எடுத்துக்கொள்ளப் படும் பணம் ஒரு அளவுக்குட்பட்டதாக இருக்க வேண்டும். சமஸ்தானத்தின் வருமானம் வருஷத்துக்கு 10, அல்லது 15 லக்ஷத்துக்கு மேற்படாமல் இருந்தால் சமஸ்தானாதிபதியின் சொந்த செலவு பத்தில் ஒரு பாகத்துக்கு மேல் போகக்கூடாது. வருமானம் எவ்வளவா யிருந்தபோதிலும் சொந்த செலவுகளுக்காக 3 லக்ஷத்துக்குமேல் கொடுக்கவேகூடாது. அரண்மனைச் செலவு, மோட்டார்கள், குதிரைகள், விருந்தினர்கள் முதலிய சகல செலவுகளும் இதற்குள்தான். பொதுக்காரியம் சம்பந்தமான செலவுகளாயிருந்தால், அதை ஸ்பஷ்டமாகக் குறிப்பிட்டுவிடவேண்டும்.

நீதி வழங்குதல்

5. சுதந்தரமானதும், நிரந்தரமானதுமான நீதி இலாகா இருக்க வேண்டும். அந்த இலாகாவில் ஒன்றும் தலையீடு இருக்கக்கூடாது. பக்ஷபாதமற்ற ஒரேமாதிரியான நியாயம் வழங்கப்படுவதற்கு சௌகரியமாக, சமஸ்தான கோர்ட்டுகளின் தீர்ப்புக்கு மேல், சமஸ்தானம் எந்த மாகாண எல்லைக்குள் இருக்கிறதோ, அந்த மாகாணத்தின் ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ள உரிமை இருக்கவேண்டும். 'ஹைக்கோர்ட் சம்பந்தமான சட்டத்தைமாற்றாமல், இது சாத்தியமில்லாமலிருக்கலாம். ஆனால், சமஸ்தானங்கள் சம்மதித்தால் இதைச் சுலபமாக மாற்றிவிட முடியுமென்றே எனக்குத் தோன்றுகிறது.

அரசியல் சீர்திருத்தங்களைப்பற்றி நான் வேண்டுமென்றே குறிப்பிடாமல் விட்டிருக்கிறேன். இது அந்தந்த சமஸ்தானத்திலுள்ள நிலைமையைப் பொறுத்திருக்கும். பொதுஜன அபிப்பிராயம் வலுவாக இருந்தால் சமஸ்தானாதிபதி அதற்கு இணங்கித்தான் ஆகவேண்டுமென்று நினைக்கிறேன்.

ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் உரிமை

ஹைக்கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளும் உரிமை வேண்டும் என்று நான் கேட்பதுதான் வாதத்திற்கிடமா யிருக்கக்கூடும். ஆனால், இப்படி ஏதாவது செய்யப்பட்டாலொழிய சமஸ்தானங்களில் கலப்பற்ற நீதி வழங்கப்படுமென்று உத்தரவாதம்கொடுக்கமுடியாது. பிரிட்டிஷார் மிகுந்த பொறுமையுடன் வளர்த்து வந்திருக்கும் ஸ்தாபனம் இது (ஹைக்கோர்ட்) ஒன்றுதான். ஹைக்கோர்ட்டுக்குப்போவதில் மிகுந்த பொருட்செலவும், காலதாமதமும் ஏற்படுகின்றனவென்பது உண்மையே. ஏழைகளுக்கு அது கிடைக்காது. ஹைக்கோர்ட்டுக்குப் போவதற்குள் பல கஷ்டங்கள் இருக்

கின்றன. பல சமயங்களில் அயோக்கியர்களும் ஜெபித்துவிடுகிறார்கள். எவ்வளவோ குறைகளிருந்தபோதிலும், சில சமயங்களில் சமஸ்தானங்களில் நீதி இலாகா நிர்வாகத்துக்குக் கையாளாக நடப்பதைத் தடுப்பதற்கு, ஹைக்கோர்ட்டுகளைத் தவிர, வேறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இதைத் தவிர வேறு எதுவுமே இல்லையென்று நான் சொல்லவில்லை. வேறு நல்ல தடை ஒன்று கிடைக்குமானால், எனக்கு ஆக்ஷேபனை இல்லை.

நீடித்து வாழவேண்டுமானால்

ஒரு விஷயம் எனக்குத் தெளிவாயிருக்கிறது. பலாத்காரமில்லாமல், சமஸ்தானாதிபதிகளிடமிருந்து ஜனங்களுக்கு அதிகாரம் மாறவேண்டுமானால், சமஸ்தானாதிபதிகளும், அப்படியே, நீடித்து வாழவேண்டுமானால், அவர்கள் மாறுபட்ட நிலைமைக்கேற்றாற்போல், தங்களைச் சரிப்படுத்திக் கொள்ளவேண்டும். சமஸ்தானாதிபதிகள் தாமாகவே தம் அதிகாரத்தை விட்டுக்கொடுத்துவிட்டு ஜனங்களின் உண்மையான டிரஸ்டிகளாயிருக்க வேண்டுமென்பது என் யோசனை. இதில் பலருக்கு நம்பிக்கையில்லை. இது வீண் கனவென்றும், மனித சுபாவத்துக்கு முரணானதென்றும் சொல்கிறார்கள். ஆனால், அது அனுபவ சாத்தியமானதுதானென்று நான் நம்பும் வரையில் அதைச் சொல்லிக்கொண்டுதான் இருக்கவேண்டும்.

அஹிம்ஸைதான் பரிகாரம்

உலகம் துரிதமாகச் சென்றுகொண்டிருக்கிறது. ஒன்று தன்னையே அழித்துக் கொள்ளவேண்டும்; அல்லது எல்லாக் குறைகளுக்கும், அஹிம்ஸா முறையில் ஒரு பரிகாரம் கிடைக்கவேண்டும். நம்மை பயமுறுத்திக்கொண்டிருக்கும் உலக யுத்தம் உண்டு. அந்த விபரீதத்திலிருந்து, கொஞ்சம் பேர்கள் மிஞ்சியிருப்பதால், அந்த யுத்தம் நாம் விரும்பும் பரிகாரத்தை இன்னும் சமீபத்தில் கொண்டு வரும். இந்த விபரீதத்திலிருந்து தப்புவதற்கு அஹிம்ஸை ஒன்றுதான் பரிகாரம் என்பதை உணருபவர்கள், எந்தப் பிரச்னைக்கும் இந்த அஹிம்ஸை முறையையே பிரயோகிப்பார்கள். அஹிம்ஸை என்பது எல்லா இடங்களுக்கும் எந்தச் சமயத்திலும் பொருத்தமாய் இருக்கக்கூடிய ஒரு சட்டம். அதைப் புறக்கணிப்பது நிச்சயம் அழிவைத் தேடுவதாகும். சமஸ்தானப் பிரஜைகளுக்கு எதிர்த்து நிற்க வலுவில்லை. கிருஸ்தியாக்கள், முஸ்லீம்கள், தாழ்த்தப்பட்ட வகுப்பினர், தம் பிரஜைகள் முதலியவர்களைச் சேர்த்துக்கொள்வதென்ற யோசனையினால், சமஸ்தானாதிபதிகள் இந்தப் பிரச்னையைத் தீர்த்து விடப்போவதில்லை.

அந்தச் சேர்க்கை, அதன் பளுவே தாங்கமுடியாமல் முறிந்துவிடும். அது தானாகவே பற்றிக்கொள்ளக்கூடிய ஒரு சேர்க்கை. யாரை எதிர்த்து இப்படிச் சேருவது? சமஸ்தானாதிபதிகள் உள்பட எல்லோருக்கும் பிரதிநிதித்வம் வகிக்கும் காங்கிரஸை எதிர்த்தா? காங்கிரஸின் சுத்த தேசீயத் தன்மை போய்விட்டால் அது தானாகவே இறந்துவிடும். சென்ற ஐம்பது வருஷங்களாக, சுத்த தேசீய ஸ்தாபனம் என்றபெயரைக் காங்கிரஸ் விடாமல் காப்பாற்றி வந்திருக்கிறது.

காங்கிரஸ் எப்படி வேண்டுமானாலும் மாறலாம். ஆனால், நான் குறுகிவிட்ட பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு அடுத்தபடியாக, ஆட்சி நடத்தப் போவது அதுதான். பிரிட்டிஷ் அரசியல் வாதிகளுக்கு இது தெரியும். அதனுடைய மாறுதலையோ, அழிவையோ, அவர்கள் எதிர்க்க விரும்பவில்லை.

அலக்ஷியம் செய்யாதீர்

சமஸ்தானதிபதிகள் கொஞ்ச காலத்துக்கு காங்கிரஸை அலக்ஷியம் செய்யலாம். ஆனல், எப்போதுமே அப்படி முடியாது. காங்கிரஸில் இருப்பவர்களெல்லாம் பனியாக்கள்தானே. நாம் வலுவாக இரண்டு அடி அடித்தால், எல்லோரும் ஓடிவிடுவார்கள் என்று சிலர் சொன்னர்களாம். சட்டமறுப்புப் போராட்டங்களில் கலந்துகொண்ட லக்ஷக்கணக்கான வர்கள் பனியாக்கள் அல்ல. அவர்கள் அடிக்கு அடி திருப்பிக்கொடுக்க வேண்டுமென விரும்பினர்களென்று நான் சொல்லவில்லை. பலர் திருப்பிக் கொடுத்திருக்க முடியும். ஆனல், அவர்கள் பலாத்காரத்தைத் திரஸ்கரித்து விட்டார்கள். இன்னும் கடுமையான அடிகளால் பல காங்கிரஸ்காரர்களின் மண்டைகள் உடைபட்டன. காங்கிரஸிலிருப்பவர்க ளெல்லாம் வெறும் கோழைகளல்லவென்றே நான் சொல்லுகிறேன்.

அஹிம்ஸையும், கோழைத்தனமும் ஒன்ருேடொன்று சேராது. பூர்ண ஆயுதபாணியாயுள்ள ஒரு மனிதன் மனதிற்குள் பயந்தாங் கொள்ளியாக இருக்கமுடியும். ஆயுதம் வைத்துக்கொண்டிருப்பது கோழைத் தனத்தைக் காட்டாவிட்டாலும், பயத்தைக் காட்டுகிறது. ஆனல், கலப்பற்ற பயமின்மை இருந்தாலொழிய உண்மையான அஹிம்ஸை இருப்பதென்பது அசாத்தியம்.

ஒரு எச்சரிக்கை

காங்கிரஸுக்குத் தேசத்திலுள்ள சக்தியைப்பற்றி அலக்ஷியமாயிருக்க வேண்டாமென்று சமஸ்தானதிபதிகளை மன்றுடிக் கேட்டு கொள்ளு கிறேன். இன்னமும் காங்கிரஸினுடைய கொள்கை, அஹிம்ஸையாகத் தான் இருக்கிறது. நானும், என்னுடைய சகபாடிகளில் சிலரும், அஹிம் ஸைக்காக, எங்களால் சாத்தியமான எல்லா முயற்சிகளையும் செய்கிருேம். சமஸ்தானதிபதிகளின் நன்மைக்காகவும் அவர்களை ஈன்றெடுத்த நன்மைக் காகவும் கேட்டுக்கொள்கிறேன். சமஸ்தானதிபதிகள் அஹிம்ஸைக்குத் தங்கள் ஆதரவை அளிக்கவேண்டும். காங்கிரஸில் அஹிம்ஸை அபாயகா மான நிலைமையில் இருக்கிறது. ஒன்று அதில் அஹிம்ஸை இன்னம் அதிக விருத்தியாகும்; அல்லது சீக்கிரத்தில் ஒரு பலாத்கார ஸ்தாபனமாக ஆகி விடும். இதனல், அது உடனே பலாத்கார செய்கைகளில் இறங்கிவிடுமென்று அர்த்தமில்லை. அதற்கு தயார் செய்துகொள்ளும். அதில் கோழைகளுக்கு இடமிராது. அப்படிக் கோழைகள் இருந்தால், இப்போது அதற்குள்ள சக்தி போய்விடும். ஒவ்வொரு இந்தியனும், உயர்ந்தவர்களானலும், தாழ்ந்த வர்களானலும் (காங்கிரஸுக்கு உயர்ந்தவர்கள், தாழ்ந்தவர்கள் என்று கிடையாது) ஏதாவது ஒரு வழியாக முடிவு செய்தாகவேண்டும்."

"ஒரு உண்மையான குதா கித் மத்காருக்குக் கத்தியும் தேவையில்லை; துப்பாக்கியும் தேவையில்லை. கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட உயிர் பிரயாணி களுக்குத் தொண்டு செய்து அவர்களின் அன்பைப் பெறுவதுதான் நம் முடைய ஆயுதம். பிறரை நாம் இகழ வேண்டாம். ஏனெனில், குதா கித் மத்காரர்களுக்கு இது சோபை கொடுக்காது. பலாத்காரத்தை மனதில் கொள்வது அவர்களுக்கு அழகல்ல.

—ஸ்ரீ. கபார்கான்.

"காந்திஜியின்றிக் காங்கிரஸ் தனித்து நிற்க முடியுமா?"

மகாத்மாஜியைப்பற்றிக் கவி தாகூர் கட்டுரை

"இந்தப் பெரிய இந்திய தேசத்திலே மக்களுடைய மனமானது பாலைவனத்தைப்போல் உலர்ந்திருந்த காலமுமுண்டு. அது வெகு காலத்திற்கு முன் இருந்த நிலைமையல்ல. சமீபகாலத்திற்கு முன் அப்பேர்ப்பட்ட நிலைமை ஏற்பட்டிருந்தது. இந்தியாவில் பஞ்சமும் தரித்திரமும் அடுத்தடுத்து வந்து மக்களைத் தரித்திரமாக்கியது. அப்பேர்ப்பட்ட தருணத்திலே காங்கிரஸ் மகாசபையானது ஆக்கம்பெற்று செல்வாக்கு வாய்ந்ததாயிற்று."

உலர்ந்துபோன ஒரு மரத்திலே பெருங்கிளையொன்றில் ஜீவன் உண்டாகி துளிரும், பூவும் விட்டு சமர்த்தியாகப் பலன் தரக்கூடிய நிலைமையை அடைந்தாற்போல் காங்கிரஸ் மகாசபை வளர்ந்தது. திடீரென்று மிக அதிசயமாகத் தோன்றிய அச் சபையானது மக்கள் மனதிலே உற்சாகத்தை ஊட்டிற்று. மக்கள் மனோபாவத்தில் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. படிப்படியாக ஜனங்களின் கருத்திலே நற்காலம் பிறக்கப்போகிறதென்னும் நம்பிக்கை சுரந்தது. பயந்து பயந்து வாழ்ந்த வாழ்க்கையை மக்கள் மறக்கத் தொடங்கினார்கள். தங்களைக் கட்டிப் பிணைத்திருக்கும் அடிமைத் தளைகளை அறுத்தெறிய தைரியங்கொண்டனர்.

மாறுதலின் பயன்

அப்பேர்ப்பட்ட புதிய ஆவேசம் தோன்றுவதற்கு முன் எக் காரியங்களைச் சாதிக்கவே முடியாதவையென்று கருதினார்களோ அக் காரியங்களெல்லாம் வெகு சுலபமாக சாதிக்கக்கூடியவை என்று ஜனங்களுக்கு உணர்ச்சி ஏற்பட்டது. மனதினாலே அசைய வைக்கக்கூட சக்தியில்லாமலும், தைரியமில்லாமலும் இருந்தவர்களுக்குப் புதிய ஊக்கமும் தைரியமும் ஏற்பட்டது.

இப்பேர்ப்பட்ட பிரம்மாண்டமான அதிசய மாறுதல்கள் மக்கள் மனதிலே மூண்டெழ காரணம் என்ன? இந்தியாவின் அவதார புருஷனைத் தோன்றிய அந்தத் தனி மனிதரிடம் ஜனங்கள் பக்தி வைத்ததனாலேதான். காங்கிரஸை ஆவேசமுறச் செய்த கர்த்தாவின் துணையின்றித் தானாகவே நிற்கக்கூடிய நிலைமை காங்கிரஸுக்கு இன்னும் வரவில்லை யென்பதை நான் அறிவேன். காங்கிரஸை வந்தி நிற்கும் அக் கர்த்தா சாதாரண மனிதரல்ல. ஓர் பெரிய மகா புருஷர் என்பதையும் நான் அறிவேன்.

அவசரம் வேண்டாம்

காங்கிரஸ் வளர வளர தேசத்தில் அரசியல் நிலைமையும் வளர்ந்து கொண்டே வந்திருக்கிறது. தற்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமைக்கு ஏற்றவாறு காங்கிரஸ் வேலை திட்டத்தை மாற்றி அமைக்கும் நோக்கத்துடன் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்துவிடக்கூடாது. அவ்வாறு அவசரப்படுவதனால் இவ்வளவு காலமாகச் சிரமப்பட்டு கட்டி அமைத்த அஸ்திவாரத்திற்கே ஆபத்து நேரினும் நேரும்.

காங்கிரஸின் கட்டுப்பாடும் அமைப்பும் சிதையாமல், தீவிர வாதத்தைக் காங்கிரஸுக்குள் புகுத்துவதற்குப் போதிய திறமையடைந்த தலைவர் ஒருவர் எங்கே இருக்கிறார்? நான் அறிந்தவரையில் ஒருவரையும் காணோம்.

அப்பேர்ப்பட்ட சமயத்தில் மாறுதல் செய்ய முனைவது முதலுக்கே ஆபத்தைத் தேடிக்கொள்வதாகும். ஆகவே தான், தேசத்திலுள்ள சர்வ கட்சியினரும் ஒன்றுபட்டு, தேசத்தின் பொதுலட்சியத்திற்காக நடத்தவேண்டிய போராட்டத்தைக் காந்திஜீயின் தலைமையிலேயே நடத்த வேண்டுமென்று நான் கருதுகிறேன்.

நந்திபோல் எச்சரிக்கிறேன்

இந்த தேசத்தில் மக்கள் ஸ்மரணையற்று விழுந்துகிடந்தனர். அப்பேர்ப்பட்டவர்களின் உடல்களிலே ஜீவசக்தியை ஊட்டி ஜனங்கள் தங்களிடையே இவ்வளவு சக்தி இருக்கிறதென்று அறிய உணர்ச்சியைக் கொடுத்து, வீரனுக்கு உகந்த அஹிம்சா போர்க் கருவியையும் கொடுத்தவர் யார்? மகாத்மாஜி அல்லவா?

இந்திய மக்களுக்கு மகாத்மாஜி இன்னும் சம்பூர்ணமாகப் பயிற்சி அளித்தாகவில்லை. அவர் ஆரம்பித்திருக்கும் அஹிம்சா முறையில் இன்னும் மக்களுக்கு அளிக்கவேண்டிய பயிற்சி எதேஷ்டமாக இருக்கிறது. சிவபெருமான் ஆசிரமத்திற்குள்ளே தவம் செய்துகொண்டிருந்தபோது நந்திகேஸ்வரர் வாயிலில் நின்று மூக்கில் விரல் வைத்து, 'சத்தமிடாதீர்கள்' என்று சமிக்ஞை காட்டுவதுபோலவே, நானும் இந்திய மக்களுக்கு எச்சரிக்கை செய்கிறேன். சிவபெருமானது கடுந்தவத்தை நடுப்பாதியிலே கலைத்தால் என்ன ஆகும்? உலகத்தைத் தீய்த்து பஸ்மமாக்கும் பிரளயாக்னியல்லவோ தோன்றும்?" என்று வங்கக் கவியரசர் ஸ்ரீ ரவீந்திரநாத் தாகூர் 'மாடர்ன்ரேவ்யூ' மாசிகையில் எழுதியிருக்கிறார்.

"கிராதா—அர்ஜுனா"வில்



மேனகா (ஜி. பி. விஜயம்)
ஊர்வசி (கே. சுப்புலக்ஷ்மி)

நீதி சந்திரிகை

தனக்குரிய நன்னிலையிற் சார்ந்தொழுக வல்லோன்
மனத்துயரம் நீங்கி மகிழும் : —வினைக்கடிமைப்
பட்டுப் பரிதவிக்கும் பாழாய்த் தனதுநிலை
விட்டொழியும் வீணன் விரைந்து. கச

இல்லாப் பொருளை இயையப் புனைந்துரைத்தல் ;
நல்லார்ப் பகைத்தல் : நடுநிலைமை—புல்லாமை ;
வீடாத நல்லொழுக்கம் வேண்டாமை : இந்நான்கும்
கூடா ஒழுக்கத்தார் கோள். கரு

குற்றங்கள் பாரார் : குணமறியார் : நற்கவிஞர்
சொற்றுனுங் கொள்ளார் : சொலவறியார் : —கற்றவரைக்
கண்டால் இகழ்ந்திடுவர் : காசினியில் மூர்க்கருடைத்
தண்டாக் குணங்களிவை தாம். கசு

மானம் அழியும் : மதிகலங்கும் : மாண்புடைய
தானம் தவறும் : தனிஅறத்திற்(கு)—ஊனம் :
மனைக்கொடிக்கும் வெம்பகையாம் : மாணுப் பிறர்இல்
தனைக்கொள்ளும் பேதையர்க்குத் தான். கஎ

கற்பும் அழியும் : கருதார் இகழ்ந்திடுவர் :
பொற்பும் அழியும் : புகழ்நீங்கும் : —அற்புடைய
தன்னுயகனைத் தவிர்த்துப் பிறர் மேவின்
என்னுகுங் கற்புடையாட்(கு) இங்கு. கஅ

பூமணத்திற் செல்லும் பொறிவண்டு : சூகரந்தான்
தீமணத்துப் பவ்வீயிற் சேருமே ! —பாமணத்தில்
ஆழ்வோரும் அன்னவரை ஆதரிப்பர் : அஃதற்ற
கீழோரும் ஆதரிப்பர் கீழ். கக

தெய்வம் இகழேல் : சிறியோர் இனம்சேரல் :
பொய்வம்பு பேசல் : புறங்கூறல் :—செய்தொழிலில்
தந்தலைவன் சொல்இகழ்தல் : தானம்இடை விலக்கல் :
பொன்றவிலா வெந்நரகில் போம். உ0

—திரு. ராகவாசாரியர்.

14

லீலா அந்தக் குருட்டுப் பிச்சைக்காரனுடைய பரிதாபத்தைக் கண்டு சகிக்க முடியாது தவிக்கையில், அம்மனிதனின் வாழ்க்கையையே பாழ்ப்படுத்திய கிராதகன் தன்னைப்பெற்ற பிதாதான் என்றதை யறிந்ததும் அவளுடைய இதயமே பிளந்துவிடும்போலாகி விட்டது. "இத்தகைய கொடும்பாவியின் வயிற்றிலா நாம் பிறந்தோம்?" என்று நினைக்கும்போது இந்தப் பிச்சைக்காரனின் குடும்பம் அழிந்த சாபம் அப்படியே அவளை விழுங்க வருவது போன்ற பயங்கர உணர்ச்சி அவளை வதைத்தது.

தெருக்கோடியில் தன்னைப் பாட்டுப் பாடிக்கொண்டு வரும் ரத்னசாமியின் கோஷ்டியைக் காணவே லீலாவின் மனங் கூசியது. "இந்த மனிதனின் கண்ணையும் போக்கி, கண்ணுக்குக் கண்ணான மக்கள் மனைவியரையும் இழக்கச் செய்த பாதகம் போதாமல், இவனைப் பார்த்தால் இன்னும் என்ன செய்துவிடுவானோ! என்ன விபத்து நேருமோ! ஏற்கனவே இன்று பாட்டியை அடித்துத் துரத்தியிருக்கும் கோபத்துடன் இம்மனிதனுக்கு ஒருவிதமான ஆபத்தும் நேராதிருக்க வேண்டுமே! என்ன செய்வது? எமபடர்களைப்போன்ற துஷ்டர்களுங் கூட வருகிறார்களே!" என்று சில விநாடிகள் தவித்தாள்.

ரத்தினசாமி நெருங்கிவரும் குரலைக் கேட்ட உடனே லீலா நடுக்கவுடன் பிச்சைக்காரனை நோக்கி, "அப்பா! கிழவா! எனக்குக் கடவுள் மனத்தில் எத்தனை ஈவு இரக்கம் பச்சாதாபம் முதலியன கொடுத்திருக்கிறாரோ, அதற்கு நேர்மாறாக என் பெற்றோருக்குக் கூறத்திறமற்ற கடின சித்தத்தையும், வரண்ட இதயத்தையும் கொடுத்திருக்கிறார். என் பிதா அதோ தெருக்கோடியில் வருகிறார். அவர் கண்ணுக்குப்படாமல் நீ இப்பவே போய்விடு. சாப்பாட்டைக் கையில் எடுத்துக்கொள்ளு. இந்தா கிழவா! நீ புறக்கடைப் பக்கமாய்ச் சென்றுவிட்டால், ஒருவிதமான சந்தேகமும் வராது. எழுந்திரு" என்று கெஞ்சிய குரலில் கூறினாள்.

குருடனுக்கும் மனது இளகியது. "குழந்தாய்! மகாபாவியான என் பசியை ஆற்றியதுமல்லாது என் மனப்புண்ணை யறிந்து வருந்தும் உனக்கு என்னுல் துன்பம் வேண்டாம். இதோ நீ சொல்கிறபடியே போய் விடுகிறேன். குழந்தாய்! உன்னை நேரில் பார்க்கும் பாக்யம் செய்யாத பாவியாக விருப்பினும் உனது மதுரம் போன்ற குரலும் அமுதம் போன்ற வார்த்தைகளும் என்னைப் புனிதமாக்குகின்றன. மறுபடியும் உன்னைச் சந்திக்க எனக்குப் பாக்யம் கிட்டுமோ கிட்டாதோ? எனது துரதிருஷ்டம் எப்படி இருக்குமோ!" என்று கண்ணீர் பெருகக் கூறினன்.

லீலா கொம்பைப் பிடித்து அவனை நடத்தி யழைத்துச் சென்றபடியே "தாதா! இனி தாதா வென்றே உன்னை நான் கூப்பிடுகிறேன். நீ கோபிக்கமாட்டாயே!" என்ருள். கிழவனின் இதயத்தில் எழுந்த ஆனந்தப் பூரிப்பை அவனுல் தாங்க முடியவில்லை. அந்த வேகம் கண்ணீராய்ப் பெருகியது. "குழந்தாய்! உண்மையில் என்னுடைய நிலைமை—வறுமை வேஷம்—என்னைக் கிழவனுக்கிவிட்டதேயன்றி, ரத்தினசாமியும் நானும் ஒரே வயதுக்காரர்கள்தான். என்கதி இம்மாதிரியாகும்போது ரத்தினசாமிக்கு ஒரு அழகிய பெண் குழந்தை இருந்தது. அதற்குச் சுமார் நாலைந்து வயது இருக்கும்.

அப்போது மகாபாவியாகிய எனக்கும் ஒரு ஆண் குழந்தை 7 வயதிலிருந்தது. நானும் அவனும் சீட்டாடி, குடித்து வெறி பிடித்துத் திரிந்த காலத்தில், என் மனைவி அடிக்கடி, "இந்த ரெண்டு குழந்தைகளையும் தம்பதிகளாக்கிவிட்டால், சம்பந்திகள் இருவருக்கும் மரியாதைச் சீர்வகைகள் நிறைய மதுபானமும், சிகரெட்டும், சீட்டுக் கட்டுகளும், அபினியும் வைத்துவிடலாம்" என்று பரிகஸித்தும் வயிறு எரிந்தும் கூறுவாள். (இந்த வார்த்தையைக் கேட்கும்போது லீலாவின் மனது பதறுகிறது.)

குழந்தாய்! அந்தப் பையன் உயிருடன் இருந்தால் நானும் உலகத்தவர்களைப்போல் ஒழுங்காய் இருந்தால் இத்தனை நாளைக்குள் பாட்டனுராகி இருக்கமாட்டேனு? அந்தப் பாக்கியங்களெல்லாம் சூன்யமாகிவிட்ட இந்த அந்தகனுக்கு நீயாவது அன்பு மயமாய்

தாதாவென்று அழைக்கும்போது கோபம் வேறு வரவேண்டுமா? என்னுடைய பிறவி அந்தகாரத்தில் மூழ்கி சூன்யத்தில் ஐக்கியமாகி விட்டது என்று நான் தீர்மானித்திருந்த தருணத்தில் உன் கர்ண மிருதம் போன்ற குரலில் 'தாதா' என்று அழைத்ததானது அழிந்து விட்ட வாழ்க்கைக் குகையில் ஒரு சிறிது வெளிச்சம் தோன்றுவது போலிருக்கிறது. அப்படியே கூப்பிடு என் தாயே!" என்று மனங் குழைந்து கண்ணீர் பெருகக் கூறினன்.

இதைக்கேட்டதும் லீலாவின் சங்கடத்தைக் கூறத் திறமில்லை. தான் தான் அந்தக் குழந்தை லீலா என்றும், தன் பிதாதான் கண்ணைக்கெடுத்த கொடும்பாவி என்றும் எப்படித்தான் கூறுவது. அதை நினைக்கும்போது அவள் தேகமே பற்றி எரிவதுபோன்ற உணர்ச்சி உண்டாகி பெருமூச்சாக மாறியது.

அதை மெல்ல சமாளித்துக்கொண்டு, "தாதா! உலகம் என்றும் ஒரேமாதிரி இருக்காதல்லவா? நீ கண்ணுடன் இருந்த காலையில் கண்ட விசித்திரங்கள் இன்று எத்தனையோ தலைகீழாய் மாறியிருக்கலாம். அன்று நீ பாலைவனமாகக் கண்ட இடம் இன்று பெருந் தோப்பாக இருக்கலாம். தோப்புகளாக இருந்த இடம் பாலை வனமாயும் மாறியிருக்கலாம். பூகம்பம் உலகத்தில் தோன்றும் இடங்களையெல்லாம் மாற்றுவதுபோல் மனிதர்களின் வாழ்க்கையிலும் அனேக பூகம்பங்கள் தோன்றிப் பலவித மாறுதல்களைச் செய்துவிடு மல்லவா? அதுபோல் உன் வாழ்க்கையிலும் சந்தோஷமும் சாந்தியும் பிறக்க கடவுள் அருள் புரிவார். அந்தக் கடவுளைமட்டும் மறக்காதே! இந்த ஊர்க்கோடியில் கங்காதரீச்வரன்கோவில் இருக்கிறது பாரு. அங்கு பிரதி வெள்ளிக்கிழமை மாலையும் நீ வந்திரு. நான் ஸ்வாமி தரிசனத்திற்கு வருவேன். உன்னைப் பார்க்கிறேன். கவலைப் படாதே!" என்று தைரியங் கூறி, அவனைப் புறக்கடை வழியாக வெளியில் அனுப்பிவிட்டாள்.

கிழவன் நெகிழ்ந்த மனத்துடன், 'குழந்தாய்! நான் போய்வரட்டுமா? ஆண்டவன் உனக்குச் சர்வ மங்களத்தையும், சகல ஐச்வர்யத்தையுங் கொடுத்துக் காக்கவேண்டும்" என்று கூறும்போது அவனது குரல் துக்கத்தினல் கம்மியது. கண்களில் மீண்டும் நீர்

துளித்தது. கிழவனுடன் கூடவந்த பிச்சைக்காரியும் கிழவனின் கோலைப் பிடித்துக்கொண்டு, லீலாவிடம் சொல்லிக்கொண்டு நடந்தாள்.

லீலாவும் பிச்சைக்காரனுக்கு விடைகொடுத்தனுப்பிவிட்டு, அவன் செல்லும் திக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் நடக்கும்போது கால்களில் கல்லும் கட்டையும் இடரும்போதும், எதிரிலுள்ள மரம் செடிகளில் முட்டிக்கொள்ளும்போதும் "ஹா!... கொஞ்சம் நில்லு அம்மா!" என்று தவித்தவாறு கூறிச் சமாளித்துக் கொண்டு செல்வதைப் பார்க்கப் பார்க்க லீலாவின் இதயம் இரு பிளவாகப் பிளந்துவிடும்போலாகிவிட்டது.

அந்தோ! பாழும் சீட்டாட்டத்தின் வெறிபிடித்த மோகத்தி னாலும் அம்மோக வேகத்தின் கோபத் தீயினாலுமன்றோ இம் மனி தனின் கதி இவ்வாறு ஆகியது. 'கோபம், பாபம், சண்டாளம்' என்று பாட்டி அடிக்கடி சொல்லிவந்த வாக்கியத்தின் உண்மை நிதர்சன மாகிவிட்டது. என் பிதாவின் கண்மூடித்தனமான ஆத்திரத் தீயி னால் ஒரு மனிதனின் வாழ்க்கையே எரிந்து சாம்பலாகிவிட்டதே.

ஹா! அம்மனிதன் ஒவ்வொரு நிமிடமும் தவிக்கும் தவிப்பு முற்றும் செந்தணல்போன்று பிதாவின் குடும்பத்தை எரித்துவிடு மல்லவா! உம். கண்ணொளியே பெறாத மனிதனுயின் அது ஒரு மாதிரியான ஏக்கம். பார்வை இருந்து உலகத்தின் எழிலைக் கண்ணா ரக் கண்டு களித்த பிறகு அந்தகனாகித் தவிக்கும்போது மனம் என்னபாடு படும்! எத்தகைய சங்கடத்தை யடையும்? ஹா! சோதனை! சோதனை! ஈசா! உன் சோதனையின் விபரீதந்தான் என் னவோ!" என்று பிரமிப்பும் விசனமும் அடைந்த நிலைமையில் அவ் விடத்திலேயே நின்றுவிட்டாள்.

ரத்தினசாமியும் அவன் சகாக்களும் ஸிகரெட்டின் புகை ஆகாயத்தில் கிளம்ப ஊதிக்கொண்டு நடு நடுவில் விசிலடித்துப் பாடியவாறு முன்கட்டுக் கூடத்திற்கு வந்து அட்டகாஸமாய் உட் கார்ந்தார்கள். "சுந்தரீ! சுந்தரீ!" என்றான் ரத்தினம். சமையல் காரன் "சுந்தரி முதலியவர்கள் பீச்சுக்குப் போயிருக்கிறார்கள்" என்று கூறினான்.

ரத்தினம் விசிலடித்துக்கொண்டே பின்பக்கம் வந்தான். லீலா புறக்கடைப்பக்கம் ஓர் மரத்தடியில் தன்னை மறந்து நிற்பதைப் பார்த்ததும் ஓசை செய்யாமல் அவள் பின்னால் சென்று, "ஓகோ! நீ அம்மாவுடன் பேச்சுக்குப் போகவில்லையா? உன் சொந்த ப்ரவர்த்தகம் அதிகமாகிவிட்டதா! ஆமாம். நீ யொரு ஜமீந்தாரிணி யம்மாளாகப் போகிறாயோ இல்லையோ! அதான் இத்தனை குஷியாக்கும். இங்கு மரத்தடியில் தன்னந்தனியே என்ன யோசிக்கிறாய்? உள்ளே வா!" என்று லீலாவின் முதுகைத் தட்டினான்.

மெய்ம்மறந்த நிலைமையில் நின்றிருந்த லீலாவின் முதுகில் கை பட்டதும், ரத்தினத்தின் வார்த்தைகள் கேட்டதும் திடுக்கிட்டுத் தூக்கிவாரிப்போட்டது. சடக்கென்று குருடனின் பரிதாபகரமான பிம்பம் அவர்கள் எதிரில் தோன்றியது. அடுத்த விநாடியே ரத்தினத்தின் தோற்றம் வெகு பயங்கரமாயும் கொலை பாதகப் பிசாசு போன்றும் மனத்தில் தோன்றி விட்டதால், பெத்த பிதாவாயினும் அவன் கரங்கள் அவள் முதுகில் நெருப்புப் படுவது போன்ற வேதனையையுண்டாக்கின. முகத்தைக் கவிழ்த்தபடியே லஜ்ஜை நிறைந்த இயற்கையான குணத்துடன் சடக்கென்று விலகி நின்றாள்.

ரத் :—லீலா! நான் என்ன அந்நியனா? இப்படி மிரண்டு போய் நிற்கிறாயே! நீ ஏன் பேச்சுக்குப் போகவில்லை?

லீலா :—எனக்குத் தலைவலி; அதனால் நான் போகவில்லை.

ரத் :—லீலா! உன்னைப் பார்த்தால் தலைவலிக்காரியைப் போல் இல்லையே; உன் தாயாருடன்கூடப் போகாமல் வீணாக அந்தக் கிழட்டுக் கட்டையை எண்ணி அழுது கொண்டிருப்பதாக உன் முகத்தோற்றம் காட்டுகிறது. சனியன் இனி அந்தப் பேச்சை எடுக்காதே. எனக்கும் மனம் மிகவும் களைத்திருக்கிறது. நீ இப்படி வந்து நல்ல அருமையான பாட்டுக்கள் நாலு பாடு. வா!...என்று கையைப் பிடித்து இழுத்தான்.

லீலா, கையைத் திமிரிக்கொண்டு, "என்னைத் தொந்தரவு செய்ய வேண்டாம். தலைவலியும் வாந்தியும் சகிக்க முடியவில்லை. என்னால் பாட முடியாது. வீணாக உபத்திரவிப்பதில் பலனில்லை.

பாட்டி எங்கு போயிருக்கிறாள்? நடந்த உண்மை என்ன என்பதை நீங்களாவது ஒளிக்காது சொல்லுங்கள். நான் உங்கள் இஷ்டப்படியே ச்ரமத்தையும் பாராது பாடுகிறேன்" என்றாள்.

ரத்:—ஓஹோ! கண்டிஷன் போடுகிறாயா! உன் பாட்டியிருக்கும் இடத்தைச் சொன்னால் போதுமா! அல்லது அழைத்துக் கொண்டுபோய்க் காட்டட்டுமா!

லீலா:—'ஹா! சமீபத்திலேயே இருக்கிறாளா! அப்படியானால் நான் போய் அழைத்து வருகிறேன்' என்று தன் உள்ளத்தி லுள்ள அன்பு முற்றும் திறந்து காட்டுவதுபோல் கூறினாள்.

ரத்:—சரி, லீலா! பொழுது அஸ்தமித்து விட்டது. ஆகையால் நீ தனியாய்ச் செல்வது சரியில்லை. ஏதோ நடந்தது நடந்து விட்டது. அதை மன்னிக்க வேண்டும் என்று நானும் அவள் காலில் விழுந்து சேவித்து அழைக்கிறேன். நீயும் கூட வந்து அழைத்துக்கொண்டு வந்து விடு. இந்த பழந்துணியை எடுத்து விட்டு நல்லதாக ஒன்று கட்டிக்கொண்டு வா.—என்றான்.

பாட்டியை அழைத்து வரப்போகிற ஆசையில் லீலா ஐந்து நிமிடத்தில் நல்ல புடவை யுடுத்திக்கொண்டு தயாராகிவிட்டாள். இதற்குள் ரத்தினசாமி கூடத்தில் இருப்பவர்களிடம் ஏதோ சொல்லிவிட்டு, அவர்களை ரகஸ்யமாக அனுப்பிவிட்டுத் தான் மட்டும் ஆயத்தமா யிருந்தான்.

லீலா வந்ததும் வெகு வினயத்துடன், அவளை யழைத்துக் கொண்டு ஒரு கோச் வண்டியில் சென்றான். வண்டி சில தெருக்களைத் தாண்டி ஒரு பெரிய தோட்டத்திற்குள் புகுந்து அதன் மத்தியிலுள்ள பங்களாவின் வாசலில் நின்றது. பாட்டியைப் பார்க்கப்போகும் சந்தோஷத்தில் லீலா ஒரு துள்ளு துள்ளிக் குதித்தவாறு வண்டியை விட்டிறங்கி, "எம்பா! இங்கு நமக்கு யார் இருக்கிறார்கள்? பாட்டி என் இங்கு வந்தாள்?" என்று கேட்டாள்.

ரத்:—உன்னுடைய பாட்டிக்குச் சிநேகிதர்கள் கொள்ளை பேர் இருக்கிறார்களம்மா! அதில் இவர்களும் ஒருத்தர். உள்ளே வாம்மா; கர்நாடகமாய் 'பாட்டி பாட்டி' என்று கூவாமல் நாக

ரிகமாய் வா'' என்று கூறிக்கொண்டே ரத்தினம் முதலில் நடந்தான். லீலா பின்னுலேயே வந்தாள்.

அந்தப் பங்களாவின் அற்புதமான அலங்காரத்தின் விநோதத்தைக் கூறவே திறமன்று. லீலாவுக்கு இவைகளெல்லாம் ஓர் அதிசயமாகத் தோன்றின. எனினும் தன் பாட்டியைப் பார்க்க விருக்கும் ஆவலை விட இதில் அவள் மோகம் அதிகம் செல்லவில்லை. முன் பக்கத்து ஹாலுக்குள் நுழைந்தாள்.

ஒரு சோபாவில் ஒய்யாரமாய் வாயில் பிடித்த பீடியுடன், வீரபத்திரன் போன்ற முருக்கி விட்ட கருக்கு மீசையுடன் ஒருவன் உட்காந்திருப்பதைப் பார்த்ததும் லீலாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது.

ரத்தினசாமி அந்த மனிதனுக்குப் பல்லை இளித்துக் கும்பிடு போட்டபடியே "குட் நைட் சார்! இவள்தான் என் மகள் லீலாவதி'' என்று கூறுவதைக் கேட்டதும் லீலாவுக்கு ஒரு மாதிரியான பயமும் பீதியும் உண்டாயிற்று. அவள் சற்று மிரண்டபடியே அப்படியும் இப்படியும் திரும்பிப் பார்க்கையில், ரத்தினத்தின் சகாக்கள் விசிலடித்துக்கொண்டு அங்கு வருவதைப் பார்த்ததுதான் தாமதம், உடனே அவளுடைய நடுக்கல் அதிகரித்து விட்டது. அதே சமயம் அங்கு உட்கார்ந்திருந்த ஆசாமி, "கமான் லீலா! இப்படி உட்காரு'' என்று தான் உட்கார்ந்திருந்த சோபாவைக் காட்டினன்.

இதைப் பார்த்ததும் லீலாவின் இதயத்தில் பகீரென்று நெருப்பைக் கொட்டியது போலாகிவிட்டது. கூண்டுக்குள் அகப்பட்ட பறவையைப்போல் அவள் மிரள மிரள விழித்தபடியே நடுக்கத்துடன் இடிந்து போய் தகப்பனரின் முகத்தைப் பார்த்து, "பாட்டி எங்கே?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள். ரத்தினம் அதற்குப் பதிலே பேசாமல், அங்கே வரும் சோதாக்களை 'ஹல்லோ! மை டியர் ப்ரதர்ஸ்!' என்று வரவேற்கும் குஷியில் ஈடுபட்டு விட்டதை நோக்கியதும் லீலாவின் சந்தேகமும் பீதியும் பின்னும் அதிகரித்து, அவளைச் சித்திரவதை செய்துவிட்டன.

15

கடவுளே கதி என்று விடப்பட்ட தங்கம்மாள் நடைத் திண்ணையில் படுத்துக்கிடக்கும்போதுதான், அவளுடைய பழய ஞாபகங்கள் ஒன்றன்பின் ஒன்ருக உண்டாயின. ரத்தினம் அடித்துத் துரத்திய பின்னர் சினிமாக் கூட்டத்தில் அவமானமும் அடியும் பெற்ற சகலமும் தெரிந்ததும் அவள் மனம் துடித்தது. தன் பேத்தியின் நெஞ்சழுத்தமும், அண்ணன் மனைவி, மகள் இருவரின் துணிச்சலும் அவர்கள் கூறிய வார்த்தைகளும் பளிச் பளிச்சென்று காதில் ஒலித்து இதயத்தைக் குத்தின.

அந்த ஸினிமாக்காரனுடன் இரு பெண்களும் நடந்துகொண்ட மாதிரியும், ஒழுங்கீனமும் கிழவியின் வயிற்றைக் கலக்கின. "ஐயோ! காலக் கொடுமையே! இத்தனை பெரிய என் குடும்பத்தின் மரத்திலிருந்து ஒரு கிளையாகிய பெண்ணின் வம்சத்தில் முன்பு தோன்றிய இழிவு போதாமல் பின்னும் இத்தகைய கோராமையா வந்து லபிக்கவேண்டும்?" என்று தனக்குள் எண்ணிப் பெருமூச்சு விட்டபடியே படுத்திருந்தாள்.

அக்கம் பக்கத்திலிருந்த கிழவிகளின் உதவியால் தங்கம்மாளுக்கு இரண்டு மூன்று தினத்திற்குள் உடம்பு குணமாகிக் கொண்டு வந்தது. தன் கதியையும் விதியையும் நினைக்க நினைக்க தங்கம்மாளின் மனம் புண்ணுகித் தவித்தது. தான் எத்தனையோ அருமையாகப் பெற்று அவர்களின் நன்மைக்காக அல்லும் பகலும் ஆயிரம் பாடு பட்டு வளர்த்த மக்களால் தன் பிற்காலத்தில் பெரிய மகிழ்ச்சி யடையலாம், பதப்படலாம், பேரானந்தமடையலாம், நம்மைக் கைவிடமாட்டார்கள் என்றெல்லாம் எண்ணி மனப்பால் குடித்ததற்கு நேர் மாருக என்னைக் கண்டாலே ஒரு உதவாக்கரைப்பண்டத்தையும், அழுக பதார்த்தத்தையும், துஷ்டப்பூச்சிகளையும் கண்டால் வெறுத்து ஒதுக்குவது போல் ஒருவருக்கும் பிடிக்காது வெறுக்கும்படியாய் என் விதி யமைந்ததே!

எல்லாம் இரவலா?

ஸ்ரீ. D. கோவிந்தன்.

“அம்மையார் கிழவிக்கு அலங்காரம் செய்வதென்றால், அரை ஞாண் கயிறு முதற்கொண்டு இரவல் வாங்கவேண்டும்” என்பது பண்டையகாலம்முதல் தொன்றுதொட்டுவரும் ஓர் பழமொழி யாகும். சில ஏழைக் குடும்பங்களில் ஆசையின் காரணமாய் அலங்காரத்தின் நிமித்தம் பிறருடைய பொருளை இரவல் வாங்கி யணிந்து ஆசை தீர்ப்பதன் மூலம் அப் பழமொழி மறையாது உலாவிக் கொண்டிருக்கின்றது.

ஆனால், தற்காலமோ நவநாகரிகக் கடலில் மூழ்கிக்கொண்டு வருவதால், முன்போல் அதிகமாக நகைகளிடம் ஆசை இல்லாது மறைந்து கொண்டு வருகிறது. முற்காலத்தில், ஒரு அம்மாளின் கையிலுள்ள தங்கக்காப்பு கொலுசு முதலியன 20, 30 சவரன் கள் இருக்கும். இக்காலத்தில் 20 சவரன் உண்டானால், ஈர்க்குச்சி போலும், ஊகுமுள்ளு போலுமான ஆபரணங்கள் பல தேகம் நிறைந்து விடுகின்றன. பின்னும் சிலரோ நாகரிகத்தின் வேகத் தில் நகை யணிவதையே அநாகரிகமென்று நீக்கி விட்டார்கள். இந் நிலைமையில் மேற்குறித்த பழமொழி கொஞ்சங் கொஞ்சமாக மறையத் தொடங்கியது எனலாம்.

ஆனால், பரமகாருண்ய குணம் பொருந்திய சில சினிமாக் காரர்கள், பண்டைய பழமொழியைக் கைவிட மனமின்றி தாமே ஸ்வீகரித்துக்கொண்டு, தமது தொழிலில் அனேக விதங்களில் இரவல் வாங்கும் மூலம் அந்தப் பழமொழிக்கு மறைவு கொடுக் காது பாதுகாத்து வருகிறார்கள்.

சில படங்களைப் பார்க்கும்போது, “அட ராமா! கடவுள் சொந்தமான சரக்கு எதுவும் கொடுக்கவில்லையென்றால் விலை கொடுத்தாவது வாங்கக் கூடாதா? இப்படி எல்லாம் இரவலிலா நடக்க வேண்டும்?” என்று ரஸிகர்கள் நினைத்துப் பெருமூச்சு விடு கிறார்கள். ஹிந்தி, இங்கிலீஷ், மராட்டி முதலிய உயர்ந்த படங் களிலிருந்து கருத்துக்களையும், காக்ஷிகளையும் சளைக்காது இரவல் வாங்கி விடுகிறார்கள். பாட்டுக்களோ, எல்லாம் ஹிந்தி மெட்டுக் களின் இரவல்கள். கதையோ, பல அருமையான நாவல்களி லிருந்து கத்தரித்து மொட்டந் தலைக்கும் முழங் காலுக்குமாக முடிபோட்டு பெயரளவில் ஒரு கத்திரிக்கோல் படமாக்கி விடுகிறார்கள்.

பாட்டுக்கள், காக்ஷிகள், கதைகள், கருத்துக்கள் முதலிய வற்றில் இரவல் வாங்குவது போதாமல், நடிகைகளுக்குள்ள பெயரை மறைத்து அவர்களுக்குச் சில ப்ரபலமானவர்களின் பெயரையும் இரவல் வாங்க துணிந்து விட்டதுதான் தற்போது

வேடிக்கையிலும் வேடிக்கையாக விருக்கிறது. கடவுள் கொடுத்த சொந்த சரக்கு எதிலுமா இல்லாது போய் இரவலுக்கு வந்து விடும் காலம் வர வேண்டும்?

சமீபத்தில், "நாரதர்" பத்திரிகையில் "ஜேயக்கோடி" என்கிற படத்தின் விளம்பரத்திலும், "இந்து நேசன்" பத்திரிகையில் "மானஸா தேவி" என்ற பட விளம்பரத்திலும் கோதைநாயகி யம்மாள் நடிக்கிறார்கள் என்றதைப் பார்த்தவுடனே ப்ரஸித்திப் பெற்ற 'ஜகன்மோகினி' ஆசிரியரான வை. மு. கோதைநாயகி யம்மாளின் பெயரே எங்கள் எல்லோருடைய கவனத்திலும் முன்பு நின்றது. உடனே எங்களுக்கு ஆச்சரியமும் ஆத்திரமும் அதிகரித்தது.

ஏனெனில், 'சில சினிமாக் கம்பெனிகளின் ஊழல்களைப்பற்றியும், அங்கு நடக்கும் அக்கிரமங்களைப்பற்றியும், நடிக நடிகைகளின் மோசமான வாழ்க்கையைப்பற்றியும் அந்தம்மாள் தைரியமாக நாவலில் அலசி அலசி எழுதிக்கொண்டே யிருக்கையில், தானும் அந்தக் குப்பையில் காலை வைத்துவிட்டார்களா?' என்று நினைக்கும் போது எப்படி வியப்புறாமலிருக்க முடியும்?

உடனே நான் அந்தம்மாளுக்கே கடிதமெழுதினேன். இது வெறும் ஹம்பக்கான வேலை என்றும், அவர்களுக்கும் அந்த விளம்பரத்திற்கும் சம்பந்தமே இல்லை என்றும் அவர்களுடைய கணவர் எழுதியிருந்தார். இதைப்பார்த்த பிறகுதான் சினிமாக்காரர்களின் அபூர்வமான இரவல் வாங்கும் சக்தியை அறிந்தேன்.

ஒரு பெயர் ஒருவருக்குத்தான் உரிமையுள்ளது என்று நான் அசம்பாவிதமாகக் கூற வரவில்லை. ஒரே பெயருடன் பல்லாயிரம் ஜனங்களிருக்கலாம். ஆனால், பெயர் ஒன்றாயினும் ஒவ்வொருவரும் தனித்தனியானவர்கள் என்பதைக் குறிக்கும் ஊர் பெயர் அல்லது குடிப்பெயர், தகப்பன், தாய் முதலியவர்களின் பெயர் போன்ற அடையாளம் இல்லாம லிருக்கவே முடியாது. அம்மாதிரியுள்ள இனிஷலை வேண்டுமென்று விட்டு விட்டு, மக்களை வியப்புறச் செய்யும் வண்ணம் பெயரை மட்டும் போடுவது ஒருவரின் துல்லியமான தெளிந்த மனப்பான்மையைக் காட்டவில்லை.

நாங்கள் நினைத்ததுபோல் இன்னும் எத்தனை பெயர்கள் 'ஜகன்மோகினி' ஆசிரியை. வை. மு. கோதைநாயகி அம்மாள்தான் என்று எண்ணி இருப்பார்கள்? ஒரு பெயருக்குப் பிரபலமிருப்பதால், அந்தப் பெயரில் பதினாயிரம் பேர்கள் இருந்தாலும் பிரபலமான பெயர் தான் முன்னால் தோன்றும். அம்மாதிரி இனிஷலை விட்டு வீணுக்காக, பிரபலஸ்தர்களின் பெயருக்கு மாசுபடச் செய்வது சற்றும் அழகல்ல. இம்மாதிரி பெயரைப் போட்டு விட்டதனாலேயே ஜனங்கள் ஏமாந்து விடுவார்கள் என்று எண்ணி

செய்துள்ள முதலாளிகள், உண்மை வெளியாகி விட்ட பிறகு அதன் பலன் எவ்வகையில் முடியும் என்பதை யோசிக்கவேண்டும். இனியாவது, இம்மாதிரி இனிஷல் போடாது பெயரை வெளியிடாமல் அவரவர்களின் சொந்தப் பெயர்களை இனிஷலுடன் போட்டு தமது இரவல் மோகத்தை விட்டு விடுவார்களென்று எதிர்பார்க்கிறேன்.

இது விஷயமாக அந்தம்மாள் ஏதாவது எழுதுவார்களா என்று நானும் இது வரையில் பார்த்தேன். ஒன்றுமில்லை. சென்ற 15 தேதி, "இந்துநேச"னில் மட்டும் அதன் ஆசிரியர் முன் விளம்பரத்தில் கண்டதுபோல் கோதைநாயகி யம்மாள், "ஜகன்மோகினி" ஆசிரியை வை. மு. கோதைநாயகி அம்மாள் அல்ல வென்பதைத் தெளிவாக எழுதி இருந்ததைக் கண்டு சந்தோஷப்பட்டேன். இந்தக் கட்டுரையை ஆசிரியரின் பத்திரிகையிலேயே வெளியிட வேண்டுமென்ற ஆவலுடன் அவர்களுக்கே அனுப்புகிறேன்.

இதைப் போடுவார்களோ அல்லது பொறுமையின் எல்லையைப் பிடித்துக்கொண்டு பேசாமலிருந்து விடுவார்களோ! எனக்கு எப்படித் தெரியும்? நம்பிக்கையுடன் அனுப்பி விட்டு, ஆகஸ்டு முதல் தேதியை எதிர்பார்க்கிறேன்.

ஆசிரியர் குறிப்பு :—

ஸ்ரீ. D. கோவிந்தன் என்பவர் நமக்குக் கட்டுரையுடன் ஒரு கடிதமும் அனுப்பியுள்ளார். அதில், ஒரு பேரா மிக மிக விசித்திரமாக விருந்தது. அதாவது "அம்மணீ! இக்கட்டுரையை நீங்கள் உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கா விட்டால், உங்கள் பெயர் நடிகைகளின் ஜாபிதாவில் உலாவுவதை நீங்கள் வெறுக்கவில்லை என்றுதான் நான் நம்பக்கூடும்" என்று ஒரு வேடிக்கை வெடிகுண்டை வீசி எறிந்திருக்கிறார். இது அன்னாரின் மனோவேகத்தையும், நமது பத்திரிகையில் கொண்டுள்ள ஆர்வத்தையும் வெகு அழகாக எடுத்துக் காட்டுகிறது. இனிஷல் இல்லாது பெயரை வேண்டுமென்றே பிரசுரித்திருக்கும் விளம்பரங்களைப் பார்த்து என்னை நேரிலும் எத்தனையோ பேர்கள் கேட்டார்கள். எந்த உண்மைக்கும் என்றும் அழிவில்லை. அது, தானே வெளியாகும் மூலம் வெளியாகட்டு மென்றுதான் நானும் பேசாமலிருந்தேன். இன்னும் பல நண்பர்கள் தங்கள் அன்பின் முதிர்ச்சியினால், சினிமாக்காரர்களைக் குறை கூறி, ஏதேதோ கட்டுரைகள் எழுதி இருக்கிறார்கள். ஆனால், அவைகளையெல்லாம் பிரசுரிப்பது உசிதமில்லை. இந்த நண்பர் எழுதியிருக்கும் கட்டுரை அழகாயும் விஷயத்தைத் தெளிவாயும் சுருக்கமாகவும் விளக்கியிருப்பதால், இதை அவர் விருப்பப்படியே, அவர் ஏமாறுதவண்ணம் பிரசுரித்திருக்கிறேன்.

வை. மு. கோ.

நமது விளம்பர விகிதம்

ஒரு பக்கத்துக்கு ஒரு முறை ரூ.	12 0 0	கால் பக்கத்துக்கு ,, ரூ.	4 0 0
அரை பக்கத்துக்கு ,, ,,	6 8 0	உள்அட்டைக்கு ,, ,,	15 0 0

நீண்ட கால விளம்பரங்களுக்குத் தனிச்சலுகை காட்டப்படும்.

வெளிநாட்டு நேயர்களுக்கு!

6-வது இதழில் தெரிவித்தபடி, நாம் ஆங்கில மாதம் முதல் வெள்ளி யன்று (ஜூலை 7-ம் தேதியே) 7-வது இதழை அனுப்பி விட்டோம். ஆனால் சில ஊர்களுக்கு 15-ந்தேதிக்குள் கிடைக்கா திருக்கலாமாகையால் சில அன்பர்கள் சஞ்சிகை கிடைக்கவில்லை யென்று எழுதியிருக்கிறார்கள். அவர்களுக்குப் பின்னர் கிடைத் திருக்கு மென்று நம்பி நாம் மறுபடியும் அனுப்பவில்லை. இந்த 8-வ்து இதழ் வருவதற்குள்ளும் கிடைத்திராவிடில் உடனே தெரி விக்கவும்.

மானேஜர்

வீண் விளம்பரமல்ல......

வத்ஸகுமார்

ஆனால், நீங்கள் தினசரி வாழ்க்கையில் காணும் அநுபவம். முடிவு வரை ஊகிக்க முடியாத ஆச்சரியம், அடக்க இயலாத சிரிப்பு மிகுந்த சிறந்த சமூகக் கதை.

அணா 8. சந்தாநேயர்களுக்கு அணா 6

ஒரு ரூபாய்க்கு 3 நாவல்கள்

உளுத்த இதயம்
மகிழ்ச்சி உதயம்
வத்ஸகுமார்

தனி விலை ரூ. 1-6-0
முன்பண மனுப்பினால்
தபாற் செலவு இனும்

இத்தனை குழந்தைகளையும் பெற்று, சந்தோஷப்பட்ட காலத்தில் என் கதி இப்படியாகுமென்று நினைத்திருப்பேனு, எல்லாம் காலவிதி. இந்தக் கையால் நான் எத்தனை பேருக்கு எத்தனை உழைத்திருப்பேன். எவ்வளவு அனுபவத்துடன் இந்தக் குடும்பத்தில் நான் பாடுபட்டிருப்பேன். எத்தனை பெயர்கள் என்னுடைய புத்திமதிகளை விலையிலா மதிப்புடன் ஏற்றுக்கொண்டார்கள். வயிற்றில் பிறந்த மக்களுக்குத்தானு நான் கிள்ளுக்கீரையைவிடக் கேவலமாகி விட்டேன்!

உம். இப்போதல்லவா தெரிகிறது. மரகதத்தினிடம் 'நான் வந்து இருக்கிறேன்' என்று நானுக வலுவில் கடிதம் எழுதியதற்கு 'இப்போது குடும்பத்தில் கஷ்டம் அதிகமாக விருப்பதால், நீ வர வேண்டா' மென்று துணிந்து எழுதியதன் ரகஸ்யம் இந்தச் சினிமா விஷயந்தானிருக்கும் என்று வெட்ட வெளிச்சமாகிவிட்டது. நான் இருந்தால் இந்த அவக்கேட்டிற்கு ஒப்பமாட்டேன் என்கிற பயத்தினுலேயே அப்படிச் செய்திருக்கலாம். ஆஹா! என்ன கபட உலகம்! என்ன கபட நாடகம்! இத்தகைய மாய உலகத்தை நம்பி மக்கள் இப்படியா பாழாகித் தவிக்கவேண்டும்?

எத்தனையோ மேன்மையாக விருந்த என் குடும்பத்தில் குழந்தைகள் பிறந்தவுடன் அவர்களால் இக் குடும்பம் எத்தனையோ சோபிதமடைந்து பரிமளிக்கப் போகிறது என்று எல்லோரும் எண்ணி மனக்கோட்டை கட்டிய நாள் மறைவதற்குள், அதே குழந்தைகள் பெரியவர்களாகி ஒருவன் சுத்த சோதாவும், நாஸ்திகனுமாகிவிட்டான்; மற்றொருவன் மகாலோபி, கிராதகன்; மார்வாடியைவிடக் கேவலமாகக் கர்மித்தனமாய் ஏழைகளின் வயிற்றில் மண்ணைப்போட்டு வாயிலடித்துப் பணம் சம்பாதிக்கும் பாவியாகி விட்டான்.

மருமகனே கைகூசாது லஞ்சம் வாங்கிவிட்டுச் சிறையில் கிடக்கிறுன். பேத்தியோ, சினிமாக்காரியாகி விட்டாள். ஐயோ! என்னுடைய குடும்பத்தின் கிளைகளில் இப்படியா அழுக்கென்னும் பூச்சி பிடித்துக்கொண்டு எரித்து உளுக்கச்செய்ய வேண்டும்?" என்று தனக்குள் தன் ஆதிகாலத்துச் சரிதையையும் தற்காலத்து நிலைமையையும் எண்ணி மனம் புழுங்கினுள்.

கிழவியின் உடம்பு சற்றுக் குணமாகி எழுந்து தடி பிடித்து நடக்கக்கூடிய நிலைமைக்கு வந்தாள். பக்கத்து வீட்டுப் பெண்ணைக்கொண்டு மரகதத்திற்கு ஒரு கடிதம் எழுதிப்போட்டாள். கிழவி வியக்கும்படிக் கடிதமே திரும்பி வந்து விட்டதால், தன்னுடைய கடிதங்கூடத் தன் மகளுக்குப் பிடிக்கவில்லை ; அதனால் தான் திருப்பி விட்டாள் என்று அவளுக்கு வெட்ட வெளிச் சமாகத் தெரிந்து விட்டது.

"லீலாவின் நிலைமை அங்கெப்படி இருக்கிறதோ! இந்த ஜீவனிடத்தில் மனுஷி என்று மதிக்கக்கூடியவள் அவளொருத்தி தானே, அக்குழந்தை நமது விலாசம் தெரியாது என்ன தவிக்கின்றதோ! தாய் தகப்பன் என்ன கட்டுக் கதையைக்கூறி, அவளை ஏமாற்றி யிருக்கிறார்களோ! அண்ணு எந்த கதி ஆனுனே?" என்ற எண்ணமெல்லாம் கிழவியின் மனத்தின் கடலில் ஓய் விலாத அலைகளைப்போல் கொந்தளித்துக் கொண்டிருந்தன. லீலாவுக்கும் ஒரு கடிதம் எழுதினுள். ஆனுல், அதற்குப் பதிலுமில்லை ; அது திரும்பியும் வரவில்லை. எல்லாம் தன் விதி என்று கிழவி தடுமாறிக்கொண்டிருந்தாள்.

சாவித்திரியும் முத்துச்சாமியும் வந்துவிட்டார்கள். சாவித்திரியின் தாயார் இறந்துவிட்ட விசனம் ஒருபுறமிருக்க, கர்மாதி வரையில் தான் அங்கிருந்தால் இந்தக்கிழவி வீட்டில் என்ன செய்து விடுவாளோஎன்ற திகிலிருந்ததாலும், பத்தாயிரம் ரூபாய் கொடுத்த ஆசாமி ஒரு வேளை வந்து விட்டால் கிழவிக்கு விஷயம் தெரிந்து விடும் என்கிற முன்யோசனையினுலும் தாயாரின் க்ரியைகளைவிட முக்கியமான காரியத்தைக் கருதி வந்துவிட்டார்கள்.

வந்த நாள் முதலாய் தங்கம்மாளின் கிரகசாரத்திற்குக் கேட்க வேண்டுமா! "இந்தக் கிழ ப்ராணனை என் எமன் தீண்டுவான்? குடும்பத்திற்கு எத்தனையோ மேன்மையாயும் உதவியாயும் இருந்த என் தாயார்தான் அந்தப் பாழும் எமனுக்கும் வெல்லமாக இனித்தது; கொண்டுபோய் விட்டான். உதவாக்கரைப் பண்டங்கள்தான் உலகத்தில் லோல்படும். என் தாயாருக்கென்ன குறைவு? பிள்ளையுங் குட்டியும், பேரனும் பேத்தியும் பணமும் பாக்

யமும், சீரும் சிறப்பும் எந்த விதத்தில் தான் குறைவு ? அவளைப் பூஜித்து வைத்துக்கொள்ளும் நிலைமையில் அவள் இருந்ததால்தான் அவளை எமன் கொண்டு போய்விட்டான்.''

என்று வெடுக்கு வெடுக்கென, சாவித்திரி கூறும்போது தங்கம்மாளின் மனத்தில் சுருக்கென்று தைக்கும். "எனக்கு மட்டும் பிள்ளை குட்டியும், பேரனும் பேத்தியும் இல்லையா ? என்னால் எத்தனை கிளைகள் உண்டாகி இருக்கின்றன. நீங்களே என்னை விரும்பாது அலக்ஷ்யம் செய்வதாலல்லவா என் கதி இப்படி இருக்கிறது. அவர் இருந்த வரையில் என்னைப்போல் மேன்மையாக இருந்தவர்கள் உண்டா ! அப்போது என் வாழ்வு இருந்த பிரகாசமும் இப்போது இருக்கும் அந்தகாரமும் அந்தப் பகவானுக் கல்லவோ தெரியும் ?'' என்று தனக்குள் வருந்துவாள்.

தங்கம்மாளின் தேக நிலையைவிட, சாவித்திரியின் தாயார் இறந்த துக்கத்தில் அவள் அழுந்தி விட்டதால், விசனத்தில் எழுந்திருக்கவும் சக்தியற்று விட்டது. படுக்கையோடு படுக்கையாகப் படுத்து விட்டாள். தங்கம்மாள் தடுமாறித் தவிக்குந்தருணம் அவளே வீட்டு வேலைகளைச் செய்யும் வேலைக்காரிபோலானாள்.

வீட்டு வேலைகள் செய்வதில் கூட அனேகவிதம் இருக்கின்றதல்லவா ! சுதந்தரத்துடன் அதிகாரதோரணையில் செய்வது ஒன்று. கடனே என்று அரை மனதுடன் வேண்டா வெறுப்பாய் செய்வதொன்று. அகங்காரத்துடன் சாமான்களை எல்லாம் கொட்டி அழித்துப் பாழ் செய்துவிடும் விபரீத வயிற்றெரிச்சல் புத்தியுடன் செய்வ தொன்று. தான் வேலைகள் செய்து பலரிடமும் நல்ல மதிப்பும், புகழும் பெறவேண்டு மென்கிற ஆசையுடன் செய்வ தொன்று. வேலை செய்யும் மூலம் தனக்குத் தெரியாத பக்ஷணங்கள், பலகாரங்கள், பதார்த்தங்கள் முதலியவைகளைக் கற்றுக் கொள்ளலா மென்ற சுய நலத்துடன் செய்வ தொன்று. பிறரை நம்பாது தானே சகலத்தையும் செய்துகொள்ளவேண்டு மென்கிற சந்தேக புத்தியுடன் செய்வ தொன்று. சமயல் செய்யும் சாக்கில், தன் வயிற்றிற்கு வேண்டிய அளவு ரகஸ்யமாகத் தின்று விடவும், மடியில் அமுக்கிக் கொள்ளவும் அல்ப புத்தி கொண்டு செய்வ தொன்று.

இவைகள் எல்லாவற்றையும்விட எஜமானர்களிடம் பயந்து பயந்து கூலிபோலும் அடிமைபோலும் நடுங்கியவாறு, எப்படிச் செய்தால் எப்படியாகுமோ; எதைப்பற்றி என்ன கூறுவார்களோ என்கிற திகிலுடன் செய்வதொன்று, அதிலுள்ள கஷ்டங்களைக் கூறத் திறமே இல்லை. சாமான்கள் அதிகம் சேர்த்தாலும் குற்றம். "உன் கை எரிய சம்பாதித்தது என்ன மிஞ்சிவிட்டது. வாரி இறைத்துப் பாழாக்குகிறுயே, ஜாக்ரதை, சிக்கனமாகப்பண்ணு" என்பது.

சிக்கனமாகச் சேர்த்துப் பதார்த்தம் நன்ருயில்லாவிட்டால், "உங்க பாட்டன் வீட்டுச் சொத்து என்ன கொள்ளை போகிறது. எங்கள் சாமான்களைச் செய்வதில் உன் கையில் தேளா கொட்டுகிறது. இப்படி சமையல்செய்து எங்களைப் பட்டினி போட்டுக் கொல்கிருயே!" என்று கடுகடுப்பது.

நமது தங்கம்மாளின் தலைவிதியில் கடைசியில் கூறியபடியான நிபந்தனையே லபித்தது. தள்ளாத வயதில், அவளை வைத்துப் பூஜிக்கும் காலத்தில், தான் பெற்ற பிள்ளையே தன்னை அடிமைபோல் நடத்தும் சங்கடத்தை அவளால் சகிக்கவே முடியவில்லை. பெண்ணிடம் செல்வதற்கும் தனக்குச் சலுகை இல்லை. இன்னொரு மகனிடம் செல்லவேண்டுமென்று வாயெடுப்பதற்கே அருகதை இல்லை. இந்தத் தள்ளாத வயதில் அவள் எங்குதான் செல்வது? எப்படித் தான் பிழைப்பது?

தங்கம்மாள் சற்று ஆயாஸத்தினுல் படுத்திருந்தால், சாவித்ரி கடுகடுத்த முகத்துடன், "அப்பப்பப்ப! இந்தவீட்டில் மூதேவியைத் தாம்பூலம் வைத்து அழைப்பதுபோல் எந்நேரமும் படுக்கைதானு! இதென்ன படுக்கை, எழுந்திருங்கள்" என்று சீறி விழுவாள். தங்கம்மாள் ஆதிகாலத்தில் தன் மாமியார் நாத்தனுர் இடங்கூட இம்மாதிரி கடுமையான சொல்லைக் கேட்டதில்லை. அவர்களுக்கெல்லாம் எத்தனையோ உயர்வாகவே இருந்தாள். அத்தகைய மனுஷி இம்மாதிரி சிறுமைப்படுவதென்ருல், மனம் எப்படித்தான் இருக்கும்?

இந்தச் சங்கடத்தைத் தாங்காது தற்கொலை செய்துகொள்ளலாமா என்றுகூட நினைத்தாள். ஆனுல், தான் படித்த சத்விஷயங்களின் பலனும், கீதையின் உபதேசமும் அவளை அதற்குத் துணியச்

செய்யவில்லை. தான்பெற்ற மகனிடமும், தன் குலத்திற்கு விளக்கு என்றிருந்த மருமகளிடமும் அடிமை வாழ்வு வாழ்வதானது அவளால் பொறுக்கமுடியாது துடித்தாள். பேரனும் பேத்தியும் இவள் மீது இல்லாத பொல்லாத கோள்மூட்டைகளை அவிழ்த்து, அதன் மூலம் வேறு வசவு வாங்கிவைக்கத் தயங்கவில்லை.

இந்நிலைமையில் தத்தளித்துக்கொண்டிருக்கையில், ரத்தினத்தினிடமிருந்து ஒருகடிதம் வந்தது. ஒருநாளுமில்லாமல் திருநாளைப்போல் கடிதம் வந்திருப்பதைக் கண்டதும் தங்கம்மாள் வியப்பினால் ப்ரமித்தபடியே கடிதத்தைப் படிக்க வாரம்பித்தாள்.

" உனக்குப் புகுந்த வயது ஒரு குட்டிச்சுவருக்குப் புகுந்திருக்குமாயின் கழுதை ஒதுங்குவதற்கும் இன்னும் சில உபயோகத்திற்கும் பயன்படும்; அதுவுமின்றி உன் வாழ்நாள் வளர்ந்துகொண்டேவருகிறது. நீ வீட்டிலிருந்த காலத்தில் செய்த உபத்திரவம் போதாமல் குழந்தை லீலாவைப் பெற்றவர்களுக்கு அடியோடு ஆகவிடாது குட்டிச்சுவராக்கி உன்னைப்போன்று அவளையும் உதவாக்கரைப் பிண்டமாகச் செய்துவிட்டதுடன், வீட்டை விட்டுத் தொலைந்துபோன பிறகும் குழந்தையின் மனத்தைக்கெடுக்க கடிதம் வேறு எழுதி கலகஞ்செய்ய ஆரம்பித்து விட்டாயா! ஜாக்ரதை; இனிமேல் இதுபோல் ஏதாவது தண்டாபேரங்கள் செய்தால் தெரியும் சேதி. இத்தனைநாளைப்போல் லீலாவைக் கைவசம் செய்து கொண்டு பிழைத்துவந்த வித்தை இனி சாயாது. இம்மாதிரி ப்ரவர்த்தகம் அங்கும் நடக்க உனக்கு இடமில்லை. இருக்கும்வரையில் அடங்கி ஒடுங்கி காலத்தை யொழித்து விட்டுப்போ! இனி இந்தப் பக்கம் வராதே !

ரத்தினம் "

என்றிருந்ததைப் படிக்கும்போதே தங்கம்மாளின் கண்கள் மடைதிறந்து விட்டதுபோலாகிவிட்டன. " ஆகா ! பெத்தபிள்ளை, பத்துமாதம் சுமந்து பெற்று அரும்பாடு பட்டு வளர்த்தபிள்ளை. என்ன கடுமையாய், வழியில் போகிறவர்களுக்கு எழுதுவதுபோல்

எழுதியிருக்கின்றான். உம். கடவுளே! இதெல்லாம் எனக்கு ஒரு பாடம் கற்பிக்கிறாய்போலும்! என் ஆதிகாலத்து ஆவலும், இந்த அந்திய காலத்துக் கேவலமும் என் பிறவியின் சோதனையாகி விட்டது. லீலாவுக்குக் கடிதம் சேர்ந்திருக்குமாயின், அவளிட மிருந்து பதில் அன்றே வந்திருக்காதா! இது அவள் கைக்கு எட்ட விடாதபடி அந்த மகானுபாவனும் மகாராஜியும் செய்திருக்கிறார்கள். இதிலிருந்து லீலாவை ஏதோ கடுந் தண்டனை யடைந்திருப்பவள் போல் நடத்துவதாய்த் தெரிகிறது. உம். நம்மால் ஒருவருக்கும் உப காரமோ, சுகமோ இல்லாவிடினும் உபத்திரவமாவது இல்லாதிருந் தால் போதும்" என்று தனக்குள் எண்ணிப் புழுவாய்த் துடித்தாள்.

அதே தபாலில் முத்துச்சாமிக்கும் ரத்தினம் ஒரு கடிதம் எழுதியிருந்தான்.

"முத்தண்ணா!

என்னிடத்தில் இருந்தவரையில் அந்தக் கிழத்தினால் உண்டாகிய உபத்திரவத்தைச் சொல்ல முடியாது. சதா வீட்டில் ரோதனை என்பது உனக்குத்தெரிந்திருக்கலாம். கையில் தம்பிடி வேண்டுமென்றாலும் நம்மிடம் பிச்சை எடுக்கும் நிலைமையிலுள்ள அவள், வீட்டில் எங்களு டன் சண்டையிட்டுக் கொண்டு ஓடி வந்த வேகத்தில் எப்படி உன்னிடம் வந்தாளோ தெரியாது. காலணாவுக்கு லாட்டரியடிக்கும் அவளுக்குக் கவருக்கு ஒருஅணா ஏது? என் மகளுக்குக் கடித மெழுதி இன்னமும் என் குடி யைக் கெடுக்கப் பார்க்கிறாள். இனி அம்மாதிரி செய்வ தற்கு விடாதே. இனி அவளை என்னிடமும் அனுப்ப வேண்டாம். உனக்கு நான் கடிதமெழுதி யுகங்கள் பல வாகிவிடினும் இந்தக் கிழவியின் உபத்திரவத்திற்காக இப்பொழுது எழுதினேன்.

ரத்தினம்"

இதை அவன் படித்துவிட்டு மனைவிக்குக் காட்டினான். இரு வரும் சேர்ந்து முண முண வென்று வாய் கூசாது வைதுகொண் டிருந்தார்கள். அவர்கள் வைவதிலிருந்து ரத்தினம் எழுதிய விஷயத்

தையும் தங்கம்மாள் ஒருவாறு தெரிந்துகொண்டு கண்ணீர் விடும் சமயம் சாவித்திரி உரத்த குரலில், "முடியாது. இனிமேல் இந்தக் கிழத்துடன் மாரடிக்க முடியாது. இந்தச் சொல்ப தினத்திற்குள்ளேயே என்னுல் சகிக்க முடியவில்லை. இன்னும் நாள் செல்லச் செல்ல என்னுல் கூட வாழவே முடியாது. நீங்கள் உங்கம்மாவுடன் இருங்கள். நான் என் தாயார் வீட்டுக்குப் போகிறேன்" என்று சுடச் சுடச் சொல்லும் வார்த்தைகள், தங்கம்மாளின் காதில் காய்ச்சிய வேலைப் பாய்ச்சியது போல் விழுந்தன.

முத்து :—ஏண்டீ அவசரப்படுகிறுய்? எனக்குக் கூடத்தான் பிடிக்க வில்லை. உரக்கப் பேசுவதற்குக்கூட இடைஞ்சலாகத்தான் இருக்கிறது. வீட்டுக்குள் வரவிடாமல் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட எண்ணியபோதே அக்கம் பக்கம் உள்ளவர்கள் 'லபோ திபோ' என்று அடித்துக்கொண்டார்கள். இன்னும் வந்து ஒரு மாதங்கூட ஆகவில்லை. இதற்குள் எப்படி போகச்சொல்வது? 'என்ன விருந்தாலும் அவள் பெத்த தாயாரல்லவா?' என்று பின்னும் ஊரார் பேச்சுவார்களே!

இதுவரையில் கேட்பதற்குள்ளேயே தங்கம்மாளுக்கு உயிர் துடிக்க வாரம்பித்தது. "பத்து மாதம் ரத்தத்தில் ஊறி, என் ரத்தத்தைப் பாலாக உறிஞ்சி வளர்ந்த இதயமே பாசமற்ற பசையிலாப் பாலைவனம்போலாகிவிட்ட தென்றுல், அன்னியன் வீட்டுப் பெண்ணைச் சொல்வதற்கு இனி வாயேது? நான் இப்படியா ஒருவராலும் விரும்பப்படாத நிலைமையில் வந்துவிட்டேன்?

என் முதுமை என்னை இம்மாதிரி வெறுக்கச் செய்கிறதா! அன்றி, வறுமைப்பேய் இம்மாதிரி ஆட்டுகிறதா! ஏன் நான் ஒருவருக்கும் விருப்ப மில்லாத குப்பைக்குச் சமமாகிவிட்டேன். இனி, இங்கும் இருப்பதற்கு யோக்யதை இல்லை. நான் எங்கு யாரிடம் செல்வேன். ஹா! கால தேவதையே! என்னை எவ்வழியில் முடிக்கப்போகிறுய்?" என்று வருந்தினுள்.

183035

தடபுடல் டாக்கீஸ் கம்பெனி என்றதைக் கேட்டதும் மரகதம் நடு நடுங்கி இடிந்துபோய்த் தவிப்பதைக் கோபி அறியாமலில்லை. அவனுக்கும் ஆத்திரம் பொங்குகிறது. இருவரையும் கவனித்த கலாவதி ஒரு மாதிரியாக நகைத்துக்கொண்டே “அம்மா! இத்தனை வயதானபிறகு உங்களுக்கேன் இந்தச் சினிமா மோகம்! சிவனே என்று ஈசனைப் பஜித்துக்கொண்டு குடும்பத்துடன் இருக்கும் கண்ணியத்தைக் குலைத்துக் கொள்வானேன்?

இணங்காத என்னையும், என்போன்றவர்களையும் பாழ்ப்படுத்துகிறார்களே யன்றி, அவர்களுக்குப் பிடித்த மனுஷியாகிவிட்டால், எல்லாம் பிரத்யேகமாக நடக்கும் தடபுடல் கம்பெனிக்கு ஏற்றுப்போல் தடபுடல் உபசாரந்தான். ஒவ்வொரு காட்சிக்கும் ஒரு க்ளோஸப்பும், ஒவ்வொரு புதுவிதமான ஆங்கிலும் கொடுப்பதில் தயக்கமே இல்லை.

நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள். குடும்பஸ்திரீ என்று கூறிக்கொண்டு, மிஸ் கோகிலா என்ற ஒரு நடிகை வந்து சேர்ந்தாள். அடாடாடா! ஜாதியில் தேவதாசியாய்ப் பிறந்தவர்களும் பிறகு நடைமுறையில் கெட்டுக் குட்டிச்சுவராகிய பயங்கர ஸ்திரீகளுங்கூட அந்தப் பெண்ணைப்போல் வந்த அன்று முதல் பகிரங்கமாய் நடந்துகொள்ளச் சற்றும் சம்மதிக்கமாட்டார்கள்.

சினிமாத் தொழிலில் சம்பந்தப்பட்ட அத்தனை பேரிடமும் தளுக்கு மினுக்குச்செய்து அவர்களைத் தன்வலையில் இழுத்துவிட்டதால், அவளுக்கு முதல் படத்திலிருந்தே ப்ரமாதமான பெயர் உண்டாகிவிட்டது.

அம்மாதிரி பெயர் உண்டாவதற்கு அவள் செய்த அக்ரமம் ஒன்றா இரண்டா! அந்தப் படத்தில் எந்த அம்சத்திலும் முதல் ஸ்தானம் தனக்கே வரவேண்டும் என்ற பேராசைப்பேய் பிடித்துவிட்டதால், இதர நடிகைக்கோ, நடிகருக்கோ ப்ரதானத்துவம்

வராதபடிக்கெடுக்க கங்கணங்கட்டிக்கொண்டு அதற்காக படத்தை எடிட் பண்ணுகிறவரைக் கைக்குள் போட்டுக்கொண்டு விட்டாள்.

எனது பாட்டும் நடிப்பும் வெகு அழகாய் விழுந்திருந்த பாகத்தை வெட்டி எறியச் செய்து, எந்த பாகம் குரூபியா யிருந்ததோ அதை மட்டும் போட்டு, கதைக்கே துடர்ச்சி இல்லாது போகும்படிச் செய்து விட்டாள். படம் பூராவும் தன் ரூபமே பிரதானமாக வரவேண்டு மென்றது ஒன்றே அவள் விருப்பமே யன்றி மற்றவை அவளுக்கு அவச்யமில்லை. இதேபோல் அவள் இன்னொரு நடிகையின் பாகத்தை வெட்டிவிடவேண்டு மென்று கட்டாயப்படுத்தினளாம்.

"அதை எடுத்தால் கதையின் ஜீவனே போய்விடும். வீணுக என் பெயர் கெட்டுவிடும். படத்திலுள்ள இந்த குற்றத்தை ஜனங்கள் என்மீதுதான் கட்டாயம் சுமத்துவார்கள். 'எடிட் பண்ணத் தெரியாத கத்துக்குட்டி கண்ட இடமெல்லாம் வெட்டி விட்டது' என்ற பட்டம் வரும். இது மிகவும் அழகாயிருப்பதால் நான் வெட்டமாட்டேன்" என்று அந்த மனிதர் சொன்னராம்.

அதற்கந்த கோகிலா, முதலாளியை முடுக்கி விட்டு அந்த மனிதனை வேலையிலிருந்தே நீக்கிவிட்டாளாம். அம்மணீ! சினிமா உலகத்திற்குள் எத்தனை வித பயங்கரப்பேராசை பூதங்கள் இருக்கின்றன பார்த்தீர்களா! இது போன்ற சில்விஷமங்கள் ஒன்று இரண்டல்ல. பதினயிரக்கணக்கிலிருக்கின்றன.

இன்னும் ஒன்று பாருங்கள். சம்பளம் அதிகம் வாங்குகிறவர்களாகட்டும், குறைந்து வாங்குகிறவர்களாகட்டும் அல்லது அவ்வப்போது வரும் எக்ஸ்ட்ராக்களாகட்டும். டைரெக்டருக்கோ, முதலாளிகளுக்கோ பிடிக்கவில்லை என்றல் அவர்களைச் சித்திரவதை செய்வது தெரியாமல் தனுக்காகவே வதைக்க ஒரு சுலபமான வழி இருக்கிறது.

அதாவது, அவர்களுக்கு அன்று நடிப்பு வேலை இருக்கிறதோ இல்லையோ, அவர்களை எல்லாம் காலை முதல் வேஷத்தைப் போட்டுக் கொள்ளச் செய்து படமெடுக்காமலேயே நேரத்தைக் கடத்தி வாட்டுவது ஒன்று. அவரவர் வேஷத்திற்குத் தக்க உடைகளும்,

ஆபரணங்களும், தாடி மீசைகளும், கிரீடங்களும், அப்பப்பப்பப்ப! சொல்லமுடியாது. ஜிவ்ஜிவ் என்று உதட்டில் தடவியுள்ள கலரும், முகத்திலுள்ள பவுடரும் இழுக்கும். பசபசவென்று தினவு வேறு பிச்சும். தாடி மீசையின் தொந்தரவு சகிக்கமுடியாது.

இத்தனை சங்கடத்தில் சோறு தின்னமுடியாது. படுக்கமுடியாது. தத்தளித்துக் கடைசியில், "இன்று ஷூட்டிங் இல்லை; வேஷத்தைக் கலைத்துவிடுங்கள்" என்று ஆக்ஞை பிறக்கும். இது ஒருவிதம். இன்னொருவிதம்,—இத்தனை உபத்திரவத்துடன் வெளிக் காட்சி எடுக்கிறதாக இழுத்துக்கொண்டு நல்ல வெய்யிலில் நிற்க வைத்து, துத்திநாகத் தகட்டால் வெய்யிலின் பிரகாசத்தை எங்கள் மீதுவவி எரியச்செய்து, சீன்கள் எடுத்தாலும் எடுப்பார்கள். 'இல்லை; இன்று சரியாய் அமையவில்லை. நாளைதான்' என்று சொன்னாலும் சொல்லிவிடுவார்கள்.

இன்னொன்று. இரவு ஷூட்டிங்கென்று வேஷத்தைப் போட்டு விட்டு ராப்பூராவும் கண்விழிக்கச்செய்வார்கள். சிலருக்குத்தான் வேலையுண்டு. சிலர் தூங்கி வழிந்து சாமியாடிக்கொண்டே கிடந்து இரவையும் ஓட்டிவிடுவார்கள். பொழுது விடிந்துவிடும். அவசரமாக வேலையாவதாய் இருந்தால் இரவும் விழித்து மறுநாள் பகலும் கொடிய விளக்கு வெப்பத்தில் போட்டுக்கொன்று வேலை வாங்குவார்கள்.

அம்மணீ! இத்தனைவித தண்டனைகள் அந்த ஸினிமாவில் இருக்கின்றன. ஏதோ அதிர்ஷ்டமும் காலச்சக்ரத்தின் நன்மையும் கூடியிருக்குமாயின் ஆபத்தோ, சம்பத்தோ, மானமோ, அவமானமோ எல்லாவற்றையும் ஜெயித்துக்கொண்டு பெரிய நடிகை என்ற புகழுடன் முன்வரலாம். இல்லையேல் அத பாதாளத்தில் வீழ்த்தி விடவும் சிலர் தயங்கமாட்டார்கள்.

அம்மாதிரி பேமானி வாழ்க்கை வாழ என் மனம் விரும்பவில்லை. ஏதோ தமாஷாய், சந்தோஷமாய்க் காலத்தைக்கடத்தலாமென்கிற ஆசையால் அதனுள்ளிருக்கும் இத்தனை பயங்கர விபத்துக்களை யறியாது அகப்பட்டுக்கொண்டு தவித்தேன்.

அம்மணி! அப்படி உங்களுக்கு நடிக்கவேண்டுமென்ற ஆசையிருக்குமாயின், பெண்களை தக்க மரியாதையுடனும், கவுரவமான நோக்கத்துடனும் நடத்தும் கம்பெனிகளும் சில இருக்கின்றன. அதில் எனக்கு அடுத்த சான்ஸ் வரும்போது தங்களுக்கும் நான் சிபார்சு செய்கிறேன். நடித்தாலும் நல்ல பெயருடன் நடித்துவிட்டு கண்ணியமாய் வெளியே வரலாம். கண்ட கசடாவிலும் காலை வைக்காதீர்கள்'' என்று தனது அனுபவம் பூராவும் கூறினாள்.

கோபி அவளுடைய நிஷ்களங்கமான தன்மைக்கு மெச்சி வந்தனம் செய்து, பின்னர் விடைபெற்றுக்கொண்டு மரகதத்துடன் வெளியே வந்தான். "அம்மா! தடபுடல் டாக்கீஸின் பெருமை ப்ரபாவம் போதுமா! உன் மனத்திலுள்ள ஸித்தாந்தம் இனியாவது மாறியதா? அல்லது இன்னும் அப்படித்தானிருக்கிறதா? நான் சொல்வதெல்லாம் உனக்கு நாராசம்போல் இருந்தது. இப்போது அனுபவப்பட்ட நடிகையின் வாயிலாக வந்த செய்தி போதுமா? கோமளியின் பெரிய துணை இருப்பதாகப் பெருமை கூறினையே, கோமளியின் பவிஷு குலைந்தது போதுமா! சரி. இப்படியே இன்றே ரயிலேறி நாளை அந்த ஊருக்குப்போய் உனக்கு நேருக்கு நேராய் விளக்கிவிடுகிறேன் வா!'' என்று ஒருவிதமான வெறுப்புடன் கூறிக்கொண்டே சென்றான்.

மரகதத்தின் வயிற்றில் செய்யும் சங்கடத்தைக்கூறத் திறமில்லை. சவம்போல் முகம் வெளுத்து கைகால்கள் துவண்டு விட்டன. வாய்திறக்கவும் பயம் நடுக்குகிறதால் கோபியின் முகத்தையும் பார்க்கக் கூசியவாறு சென்றாள். அங்கு சென்றால் அங்கு என்னென்ன பயங்கரத்தைக் காண்போமோ! பார்வதிக்கு என்ன ஆபத்தோ! அவள் ஒரு கால் இதற்கெல்லாம் இணங்காததால் அவளை எவரேனும் அடித்துத் துன்புறுத்திக்கொன்றிருப்பார்களோ!'' என்ற பலவிதமான எண்ணங்களால் தத்தளிக்கின்றாள்.

* * * * *

தடபுடல் டாக்கீஸ் கம்பெனி வாசலில் கோபியும், மரகதமும் வந்திறங்கினார்கள். கோபி மட்டும் முதலில் உள்ளே சென்றான். அங்கிருந்த குமாஸ்தாவை நோக்கி "முதலாளி எங்கே இருக்கிறார்?'' என்று கேட்டான்.

குமாஸ் :—சார்! நீங்கள் யாரு? இந்த படத்திற்கு வேண்டிய ஆள்கள் எல்லாம் பொருக்கியாகி விட்டது. படமும் பாதி முடிந்து விட்டது. இனிமேல் ஆள் எடுப்பதில்லை என்று முதலாளி கூறி விடச்சொன்னார். நீங்கள் நடிப்பிற்காக வந்தவர்களாயின் இனி உபயோகமில்லை.

கோபி :—(தன் மனத்தில் பொங்கும் ஆத்திரத்தை எல்லாம் அடக்கிக்கொண்டு) முதலாளி எங்கே சார்! அவரைப்பார்க்க வேண்டும். நான் நடிக்கவும் வரவில்லை; ஒன்று மில்லை. அவர் எங்கே?

குமாஸ்தா :—நீங்கள் யாரு? இங்குள்ள நடிகர்களுக்காக வந்திருக்கிறீர்களா! முதலாளிக்கு உடம்பு சரி இல்லை. இப்போது பார்க்கமுடியாது.

கோபி :—ஆமாம். மிஸ் சுகுணு என்ற நடிகை எங்கே? அவளைப் பார்க்கவேண்டும். அவளுக்கு ஏதோ ஆபத்தென்று தந்தி வந்தது. அதற்காக வந்திருக்கிறோம் என்று இவன் முடிப்பதற்குள்—"ஓஹோ! அப்படியா செய்தி! அந்தம்மாள் கற்பகம் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார்கள். இங்கிருந்து 3 மைல் தூரத்தில் அந்த ஆஸ்பத்திரி இருக்கிறது. போய் பார்க்கலாம்" என்று கூறும்போது, டெலிபோன் மணி அடித்தது. உடனே குமாஸ்தா போய்விட்டான்.

கோபியும் மரகதமும் கற்பகம் ஆஸ்பத்திரிக்கு வந்தார்கள். சுகுணு படுத்திருக்கும் வார்டை விசாரித்துக்கொண்டே போகையில் எதிரில் ஒரு நர்ஸ் வந்தாள். அவளை நோக்கி, " மிஸ் சுகுணு என்ற பேஷண்டு எந்த வார்டில் படுத்திருக்கிருள்?" என்று கோபி ஆங்கிலத்தில் கேட்டான்.

அதற்கு அந்த நர்ஸ் "எந்த சுகுணு! இந்த வார்டுக்கு பக்கத்து வார்டுதான் டெலிவரி வார்டு. இங்கு இரண்டு பேர்கள் அதே பெயருடன் வந்திருக்கிறார்கள். பிரஸவித்திருக்கும் சுகுணுவா! அபார்ஷனுகியுள்ள சுகுணுவா!" என்று கேட்ட உடனேயே கோபியின் தலையில் எரிமலையே புரண்டுவிட்டது போன்ற அதிர்ச்சி யுண்டாகிவிட்டது. மரகதத்தின் நிலைமையைக் கூறவேண்டுமா! அவள் தேகமே தீப்பிடித்துக்கொண்டு எரிவதுபோலாகிவிட்டது.

இருவருடைய முகமும் மாறுபட்டதைக்கண்ட நர்ஸ் உண்மை அறியாதவளாகையால் பேஷண்டிற்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக வருத்தப்படுகிறுர்கள் என்று எண்ணிக்கொண்டு 'சார்! உங்கள் முகத்தைப் பார்த்தால் அதிக கவலைப்படுவதாகத் தெரிகிறது. அப்படி அபாயகரமான நிலைமை ஏதுமில்லை. இருவருக்கும் பிராண பயமில்லை. ஒருத்திக்கு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. மற்றொருத்தி சினிமா முதலாளியின் சொந்தக்காரர் என்று அவர் கூறினர். அவர்களுக்கு முந்தாநாள்தான் அபார்ஷனுல் பெருத்த ஆபத்து உண்டாகிவிட்டது. நாடிகூட விழுந்துவிட்டது. இப்போது தேவலை. நீங்கள் பார்க்கவந்தது இவர்களையா! அவர்களையா!" என்று சகஜமாய் விசாரித்தாள்.

கோபி என்ன பதில் சொல்வான் பாவம்! வயிறு பற்றி எரிகிறது. அபார்ஷன்காரி என்று கூற அவன் வாய் கூசிற்று. 'ப்ரஸவித்தவளையல்ல.' என்ற வார்த்தைகள் மட்டும் அவன் வாயிலிருந்து தட்டுத்தடுமாறி வந்தன. நர்ஸ் சுகுணுவின் இடத்தைக் காட்டியதும் இருவரும் அங்கு போனர்கள்.

ஒரு படுக்கையில் முகமெல்லாம் வெளுத்து ப்ரேதம்போன்ற களையுடன் சுகுணு படுத்திருந்தாள். அவள் பக்கத்தில் நாற்காலியில் சினிமா முதலாளியைச் சேர்ந்தவன் உட்கார்ந்திருந்தான். சுகுணு தேம்பித்தேம்பி அழுதுகொண்டே 'இன்னும் எங்கம்மாள் வரவில்லையே!' என்று கூறிக்கொண்டிருந்த கோரக்காக்ஷியை கோபி பார்த்ததும் அவனுடைய இதயம் இரு பிளவாக வெடித்து விடும்போலாகிவிட்டது.

கோபியின் மனேவேகம் இருந்த நிலைமையில் அப்படியே அந்த மனிதனின் முன்பு சென்று அவனை நான்கு குத்துகள் விட்டுவிடலாமா? வந்தது வரட்டும். பிறகு அனுபவித்துக் கொள்ளலாம். என்ற அபாரமான ஆவேசம் பொங்கியது. அந்த மனிதனும் சற்று தூரத்திலேயே இவர்கள் வருவதைப் பார்த்துவிட்டதும் அவனுக்கும் ஒரு வகையில் திகில் பிடித்துக் கொண்டது.

எனினும் அவனுடைய இயற்கையான கடின சித்தம் அவனை விட்டுப்போகுமா! முகத்தைச் சுளித்துப் பல்லைக் கடித்துக்

கொண்டு "எங்கள் தலைவிதி, சினிமாக் கூத்தாடிகளை மேய்ப்ப தென்றால் சாமானியமாயிருக்கிறதா! நடிகர்களுடன் பழகும் போது ஜாக்ரதையாயும், மன உறுதியுடனும் பழகாமல் பாழாகி விட்டுக் கம்பெனியின் பெயரைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கு வதற்கு இதுபோன்ற சனியன்கள் வந்துசேருகின்றன. பீடை எங்கள் மானம் போகிறது. உங்கள் பெண் பவிஷைப் பாருங்கள்" என்று மரகதத்தின் முகத்திற்கு நேரே நின்று கூறிக்கொண்டே போய்விட்டான்.

கோபியின் காதிலும் இந்த வார்த்தைகள் விழாமலில்லை. அவன் முதலில் நினைத்தபடியே அடித்துவிடவும் துணிந்தான். ஆனால் இடமோ பகிரங்க இடம். அம்மனிதனே கூறும் வார்த்தையி லிருந்து அவன், பழியை அவள்மீதே போட்டுத் தூற்றிவிடத் தயா ராயிருப்பதைக் காட்டிவிட்டான். இந்த வெட்கக்கேட்டைத் தானே பகிரங்கப்படுத்தி ஆஸ்பத்திரி முழுதும் அறிவிப்பது போலாகிவிடும் என்ற அவமானத்திற்கு அஞ்சி கண்கள் சிவக்க அம்மனிதனை நோக்கினான். அவனோ திட்டிக்கொண்டே போய் விட்டான்.

தன் தாயும், கோபியுங்கூட வருவதைப் பார்த்துவிட்டதும் பார்வதிக்குத் திடுக்கிட்டது. தேகமே அவளையறியாது ஒரு குலுக்கு குலுங்கியது. இரு கைகளையும் முகத்தில் பொத்திக் கொண்டு கோவென்று தேம்பி யழவாரம்பித்தாள். "அம்மா! அம்மா!" என்ற வார்த்தைகளுக்குமேல் அவள் வாயில் ஒன்றும் வரமுடியவில்லை. தொண்டையை அடைத்துவிட்டது.

"ஐயோ! அம்மாடீ! பார்வதீ! நான் என்ன செய்வேன்? குடிமுழுகிவிட்டதே! ப்ராணன்போகிறதே. இப்படியா நீ நாச மாய்ப் போகவேண்டும்? உன் புத்தி இம்மாதிரி அழிந்து பாழாகி விடுமென்று நான் கனவுகூடக் காணவில்லையே. கொள்ளிக் கட்டையால் தலையைச் சொறிந்துகொள்வதற்கு ஒப்ப நம் கதியாகி விட்டதே! என்னடீ அனியாயம்!" என்னடீ அக்ரமம்! என்று பெரிதாகப் பிலாக்கணம் பாடுவதுபோல் புலம்பவாரம்பித்தாள்.

கோபி என்னவோ அவள் அருகில் வந்து தங்கையின் முகத் தைப் பார்க்கவும் பிடிக்காது வெறுத்தான். அவமானமும் ஆத்திர

மும் ஒன்றுகூடி அவனைச் சித்திரவதை செய்கிறது. பல்லைக் கடித்துக்கொண்டு அவளருகில் சென்று "அம்மா! தாயும், மகளும் சேர்ந்து எதிர்பார்த்த சொர்க்கப்பதவியின் பட்டாபிஷேகம் போதுமா! இன்னும்வேண்டுமா! இம்மாதிரி மானங்கெட்டு வாழுவதைவிட இப்படியே சமுத்திரத்திற்குப் பலியாகிவிடலாம்." என்று கூறித் தலையில் அடித்துக்கொண்டான்.

பார்வதிக்கு அவன் வார்த்தைகள் புண்ணைக்கிளறுவதுபோலிருந்தன. மரகதம் பெற்றவயிறு கேட்காது, "ஐயோ! இதெல்லாம் என்ன கட்டு! காலுக்கென்ன கேடுவந்தது? உன் புத்திக்கென்ன அழிவு பிறந்துவிட்டது?" என்று கேட்டாள்.

பார்வதி புலம்பிக்கொண்டே "அம்மா! கேடு பிறந்து நான் பாழாவதற்காகத்தான் இம்மாதிரி விபரீத புத்தியுண்டாகியது. இங்குவந்து 5 மாதகாலமாய் நான் நரகத்தை சொர்க்கமாக எண்ணி நேர்மையை இழந்து வாழ்ந்ததன் பலன் இது. இனி என்ன, ஏது என்று என்னைக் கேட்காதே, கலிகாலத்துக் கடவுள் கண்மூடியல்ல. என்பதை நிதர்சனமாகக் கண்டுவிட்டேன்.

என் கதி இம்மாதிரியானதற்கு கோமளிதான் காரணம். நாலு நாளைக்கு முன்பு ஒரு ஷூட்டிங்கிற்காக நாங்கள் ஒரு ஊர் கோவிலுக்குச் சென்றோம். அங்கு ஸ்வாமி தரிசனத்திற்கு முன்பே வீதியில் நம் பாட்டியும், கோமளியின் தகப்பனாரும் தரிசனங்கொடுத்தார்கள். பாட்டி பெரிதாக அழுது ரகளை செய்தாள். கூட்டங் கூடிவிட்டதால் பெரிய கலகம் உண்டாகிவிட்டது. மாமியும் கோமளியும் மாமாவுக்குப் பயித்தியம் என்றும் அவரை விரட்டும்படியும் கூறினார்கள்.

உடனே நாங்கள் அவர்களை சற்றும் லக்ஷியம் செய்யாமல், எல்லோரும் திமிரின் ஜோரில் காரில் சென்றுவிட்டோம். போகும் வேகத்தில் இராக்காலமாகையினால் ஒரு ஏரிக்கரைமீது மேட்டில் வண்டி செல்கையில் எதிரில்வந்த மாட்டுவண்டிக்காக வண்டியை ஒதுக்கும்போது ப்ரேக்கு பிடிக்காமல் மேட்டிலிருந்து வண்டி கீழே உருண்டுவிட்டதுதான் எங்களுக்குத் தெரியும்.

நான் விழிக்கும்போது இங்கு இந்த நிலைமையில் இருக்கக்கண்டேன். பிறகு விசாரித்ததில் முதலாளிக்கு பெரிய ஆபத்தாக அடிபட்டு கால்முறிந்திருப்பதாயும் கோமளிக்கு கைஎலும்பே உடைந்து கையே போய்விட்டதாயும், மாமிக்கு மண்டையில் நல்ல பலத்த அடியால் மூளையே சிதறிவிட்டதென்றும், எனக்கு சப்பை எலும்பு பிசகி இருப்பதாயும், அதோடு இந்த விபத்தும் சேர்ந்திருப்பதாயும், ட்ரைவர் உடனே போய்விட்டதாயும் தகவல் தெரியவந்தது.

என்று பார்வதி சொல்வதைக் கேட்டதும் இத்தகைய அனியாயம் செய்த பாவிகளுக்குக் கடவுள் கைமேல் பலனைக்காட்டிவிட்டதானது கோபியின் உள்ளத்தில் சந்தோஷத்தையே கொடுத்தது. "வேணும்! வேணும்! இதுமட்டும் போதாது. இன்னமும் தக்க அபராதம் வேண்டும். தன்னிலைமைக்கு மீறி அக்ரமம் செய்ததுமட்டுமல்லாது கட்டிய கணவனை—பெத்த பிதாவை — நெஞ்சு துணிந்து பயித்தியம் என்று பலர்முன்பு கூறினால் அந்த வதை சும்மாவிடுமா?" என்று கோபி வாய்விட்டே கூறிவிட்டான்.

ஒருதரம் சொன்னாலும் பிறவியின் சகல பாபங்களையும் எரிக்கச் செய்யும் திவ்யநாமமாகிய பார்வதி என்கிற பெயரை மகா பாவியாகிய உனக்குச் சூட்டினேனே என்று என்னுள்ளம் கொதிக்கிறது.

அடீ சண்டாளீ! பாதகி! உன்னிடம் நான் வைத்திருந்த ப்ரீதியும், எதிர்பார்த்த ஒழுக்கமும், பெருமையும், கண்ணியமும் சமுத்திரத்தில் கரைத்த சர்க்கரைபோலாகிவிட்டதே. ஐயோ! என்னிதய பூர்வமாய் நான் உன்னை என்னுயிராகவும், இவ்வுலகத்தில் எனக்கு மிகவும் உயர்வான பொருளாகவும் மதித்ததற்கு உன் செய்கையின் பலனால் என் மனமே வெடித்துவிடும் போலிருக்கிறதே! என் எதிர்பார்ப்பில் நான் கண்ட பலன் இதுதானா. எத்தனைக் கெத்தனை உன்னை என்னரிய பொக்கிஷமாக எண்ணினேனோ அத்தனைக்கத்தனை நான் உன் சாவை என் மனப்பூர்வமாய்க் கோருகிறேன்.

குடும்பத்திற்கு என்றும் மறையாத இழுக்கைத்தேடி வைத்த கொடும்பாவி இனி பிழைத்தால், நல்லவர்கள் இறந்ததைவிட அதிக

மான துக்கம் ஏற்படும். வேண்டுமென்று தெரிந்து உன்னை உன் பெத்த தாயே பாழாக்கிப் படுகுழியில் தள்ளிவிட்டாள். உன்னைப் போல் இதுமாதிரி சினிமாப்பேய் பிடித்து எத்தனை பெண்கள் பாழாகித் தவிக்கிறார்கள் தெரியுமா? இந்தக் கபட உலகத்தில் நேர் வழி இருந்தும் அது கண்ணுக்குத் தெரியாது கெட்டுப்போய்க் கோணவழியில் புகுந்து அல்லாடுவதுதான் வரவர யுக தர்மமாக விருக்கிறது.

என்னால் இந்த அவமானத்தைச் சகிக்கமுடியவில்லை. நீங்களிருவரும் எப்படியாவது தொலைந்துபோங்கள். உங்கள் முகத்தில் இனி நான் விழிக்கமாட்டேன். பார்வதி இறந்தாளென்றதைச் சீக்கிரம் கேட்பேனேயானால், அதுதான் நான் தற்போது வேண்டி எதிர்பார்க்கும் நல்ல விஷயமாகும்.

அம்மா! இந்த ஒரு பெண்ணை நீ கெடுத்துக் குட்டிச்சுவராக்கியது போதும். இனி உன்னோடும் இந்தப் பாதகியோடும் எஞ்சியுள்ள என் இரு தங்கைகளையும் நான் விடப்போவதில்லை. அவர்களாவது உலகத்தில் பிறந்த பிறவியின் பயனை யறிந்துப் பிழைக்கட்டும்.

அடீ, பார்வதீ! நீ செத்தொழிந்தால் சனி தொலைந்தது என்று சந்தோஷப்படுவேன். உன் தௌர்ப்பாக்யத்தினால் பிழைத்துக் கொண்டால் இனி அந்தப் பக்கம் தலை நீட்டக்கூடாது. பத்திரம்— என்று ஆத்திரத்துடன் படபடவென்று கூறிவிட்டு, விற்றென்று போய்விட்டான்.

மரகதம் கெஞ்சிய குரலில், "அப்பா! கோபீ! கோபீ! நீ போய்விட்டால் எனக்கு என்ன கதி? நான் ஏதோ புத்திகெட்டத்தனமாய்த் தவறுதல் செய்துவிட்டதற்கு நீ எப்படியாவது மன்னிக்கக் கூடாதா! இனி, இம்மாதிரி நான் ஒருபோதும் சொப்பனத்திலும் நடக்கமாட்டேன். பார்வதி கூப்பிடுகிறாள். வாயேன்" என்று கூவிக்கொண்டே பின்னால் வந்தாள்.

கோபி ஜேபியிலிருந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து மரகதத்திற்கு முன்பு விசி எறிந்துவிட்டு, "அம்மா! குற்றத்திற்கும் ஒரு எல்லையுண்டு; மன்னிப்பதற்கும் ஒரு வரம்பு உண்டு. இந்த வெட்

கக் கேட்டை என்றால் இனி அரைவிநாடிகூடச் சகிக்கமுடியாது. என்னுடைய இப்போதைய நிலைமையில் என்னுயிரே போய்விடும் போலிருக்கிறது. நீயும் உன் மகளும் எக்கேடாவது கெட்டுப் போங்கள். இனி அவளை அழைத்துக்கொண்டு அந்தப் பக்கம் திரும்பாதே!" என்று வெறுப்புடன் கூறிவிட்டுத் திரும்பிப் பார்க்காமல் நடந்தான்.

அதற்குமேல் மரகதம் என்ன செய்வாள்? பெண்ணின் பரிதாபத்தைப் பார்ப்பாளா! மகனின் கோபத்தைப் பார்ப்பாளா! தன் புத்திகெட்டதனத்தை எண்ணி அழுவாளா! என்னதான் செய்வாள் பாவம்! திரிசங்கு சொர்க்கத்தில் அகப்பட்டவள் போல் தத்தளித்தவாறு உள்ளே சென்றாள்.

தனியறையில் பார்வதி படுத்திருப்பதால் அங்கு இவர்கள் இத்தனை பேசுவதற்குச் சௌகரியமாயிற்று. பார்வதிக்கு, தன்கதி பாழாகிவிட்ட துக்கம் ஒருபுறம், தன்மீதே பழியைச் சுமத்தி அம்மனிதன் பேசிய பேச்சானது அம்புகள் பாய்வதுபோல் ஒரு புறம் துளைக்கிறது. கோபியின் சீற்றம் ஒருபுறம் எரிக்கின்றது. தன்னுடைய உயிரை ஒருகாலத்தில் விலையிலா மாணிக்கம்போல் மதித்துவந்த அண்ணனுக்கு அதே உயிர் விஷமாகத் தோன்றிய விசனம் ஒருபுறம் எல்லாம் சேர்ந்து அவள் இதயத்தை வாள் கொண்டு அறுப்பது போலாகிவிட்டது. இத்தனை அதிர்ச்சிகளும் ஒன்று சேர்ந்ததால், அதைத் தாங்காது அப்படியே மூர்ச்சையாகி விட்டாள்.

மரகதம் திரும்பிவந்து பார்க்கையில், பார்வதியின் நிலைமையைக் கண்டு கதிகலங்கிப்போய், "ஐயோ! பார்வதி! பார்வதி!" என்று கத்த வாரம்பித்தாள். சில விநாடிகளுக்குப்பிறகு பார்வதி சற்றுத் தெளிவுபெற்றுக் கண்ணைத்திறந்தாள். தாயார்புலம்புவதைக் கண்டு சகிக்காமல், அவள் கைகளைப்பிடித்துக்கொண்டு, "அம்மா! மகாபாவியான எனக்காக நீ கண்ணீர் விடாதே! என்னை இனி நீ பார்க்காதே! நான் உதவாக்கரைப் பிண்டமாகிவிட்டேன். என் மனதை நான் பறிகொடுத்து இம்மைக்கும் மறுமைக்கும் அழியா நரகத்தைச் சம்பாதித்துக் கொண்டேன்.

நான் இனி ஒரு பொருளேயல்ல. மகா கேவலமான அழுகக் குப்பை. என்னைப் பார்க்காதே! இனி உனக்குச் சாச்வதம் உன் மகன்தான். அவன் மகா உத்தமன். 'அரசனை நம்பி புருஷனைக் கைவிடுவதுபோல்' அவனை இழக்காதே. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல் என்கதி யாகிவிட்டது.

அம்மா! நீ போய்விடு. இந்த விபசாரியின் எதிரில் நிற்காதே! கோபி போய்விடப் போகிறான். அவனைப் பின் தொடர்ந்து ஓடு. தயங்காதே. தாமதிக்காதே. உன் பார்வதி அற்ப ஆசைக்காகப் பலியாகிவிட்டாள்; இறந்துவிட்டாள் என்று மனந் தேறு. என் தங்கைகளிருவரையும் உலகத்தவரைப்போல் ஒழுங்கான உயர்ந்த லக்ஷ்யத்தில் வளர்த்து அவர்களாலாவது உனக்கு என்னால் நேர்ந்த அவமானத்தையும் மனக் கவலையையும் போக்கிக் கொள்ளு. நிற்காதே! போ! போ! போய்விடு. அம்மா போய்விடு" என்று கண்ணீர் பெருக அலற்றினாள்.

மரகதத்தின் மனம் எப்படித்தான் இருக்கும்? "ஐயோ! பார்வதி! நான் இப்போது என்ன செய்வேன்? உனக்கு நான் போதித்த போதனைக ளெல்லாம் எப்படித்தான் மறந்துபோய் உன்னை இவ்வாறு நீ பாழாக்கிக் கொண்டாய்? பெரிய துணையாய் மாமி இருக்கிறாள், கோமளி இருக்கிறாள் என்று நான் நம்பினேனே! அந்தப் பாவிகளுமா இப்படி நீ நாசமாகிவிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்?"

என்று மரகதம் கூறிமுடிப்பதற்குள், பார்வதி "ஐயோ! இனி அந்த வார்த்தையை எடுக்காதே! அவர்கள் கொலைக்குந் துணிந்தவர்கள். கோமளிக்கு இதுமாதிரி நிலைமைகள் ஏற்பட்டதும், கொலை செய்ததும் கணக்கில்லையாம். அறிவுள்ள நாயாக விருந்தால், எஜமான்சொத்து ஒரு துரும்பையும் விடாது பாதுகாக்கும். அது நரகல் தின்னும் அல்பநாயாக விருந்தால், அதன் நினைவு முற்றும் அமேத்யத்தினிடந்தான் இருக்கும். அதுபோலத்தான் இவர்களின் பாதுகாப்பும்.

அதோடு, "பன்றிக்குட்டியுடன் சேர்ந்த கன்றுக்குட்டியும் பீ தின்னும்" என்ற அருமையான பழமொழி என் விஷயத்தில்

நூறுக்கு நூறும் நிஜமாகிவிட்டது. மகாமோசமான வாழ்க்கையைப் பேரானந்தமாகக் கொண்டு உழலும் அற்பர்களின் துணையை இனி மனத்தாலும் நினைக்காதே. கோபியின் சொல்படியே கேட்டு நட. போ! போ!" என்று புலம்பினுள்.

ஒரு பக்கம் ஆபத்திலிருக்கும் பெண்ணையா விடுவது என்று கூறுகிறது; மற்ருெருபுறம் உன் ஆன்மாவைக் கடைத்தேறச் செய்யும் கர்த்தாவாகிய மகனையா புறக்கணிப்பது என்கிறது; வேருெரு புறம் இரு குழந்தைகளுக்குத் துரோகஞ்செய்து அவர்களின் வாழ்வையும் பாழ்படுத்தாதே. இந்த அபவாதத் தீயினுல் ஒரு பாவமும் அறியாத குழந்தைகளின் வாழ்க்கையை எரிக்காதே!" என்கிறது.

இத்தனை பயங்கரத்தின் மத்தியில் அறிவு மங்கித் தத்தளிக்கும் மரகதம் சற்றுநேரம் ஒன்றும் தோன்ருது திகைத்தாள். பின்னர் கோபியைக் கூப்பிட்டுக் காலையாவது பிடித்துக்கொண்டு கெஞ்சிக் கேட்க வீதிக்கு ஓடி நாற்புறமும் பார்த்தாள். கோபியின் உருவம் மறைந்து எத்தனை நேரமாயிற்று என்று அவளுக்கு என்ன தெரியும்? திகைத்துப் போய்விட்டாள். தான் இப்போது உள்ளே போவதா! வெளியே போவதா! என்ற சஞ்சலத்தில் பரிதவிக்கலானுள்.

17

லீலா அங்கு கூண்டி லடைப்பட்ட மானைப்போல் மருண்ட சமயம் ரத்தினசாமியின் நண்பர்கள் வருவதைப் பார்த்ததும் அவளை ஒரு நடுக்கு நடுக்கியது. "ஐயையோ! இதில் ஏதோ மோசந்தான் இருக்கவேண்டும். என் பாட்டியாவது இங்கு வரவாவது. இது வெறும் ஏமாற்றம்; சூது; மோசமாய் நம்மை அப்பாவே இப்படி அழைத்துக்கொண்டு வந்திருக்கிருர் என்பதில் சந்தேகமே இல்லை.

வாழும் முனீச்வரன்போல் இங்கு உட்கார்ந்திருக்கும் மனிதன் யாராக விருக்கும். எவனுவது சினிமாக்காரனுக இருக்குமோ!

அன்றி, இன்று அவர்கள் பேசிக்கொண்ட ஜமீந்தாரைச் சேர்ந்தவ ளுக விருக்குமோ! ஐயோ! என்ன செய்வேன் ? என் போதாக் காலத்தின் கொடுமையினுல் முன்பின் யோசிக்காமல் பாட்டியின் மீதுள்ள கடும் பிரேமையினுல் வந்து விட்டேனே ?" என்று தனக் குள் எண்ணித் தவித்தபடியே தன் தைரியத்தைக் கைவிடாமல், "அப்பா! பாட்டி எங்கே கூப்பிடுங்கள்" என்ருள்.

அப்போதே அங்கு வந்த சோதாக்கள் கடகடவென்று நகைத் துக்கொண்டு, "ஹி! ஹி! ஹி! ஹி! பாட்டி எங்கே இருக்கா கூப்பிட...பாட்டியா வேணும் ? பாட்டி! இங்கு பாட்டியும் இல்லே ; தோட்டியும் இல்லே. இப்படி வந்து ஜம்ம்னு உட்காரு" என்ருர்கள்.

அதே சமயம், "லீலா! அசடுபோல் அப்படி தூர நிற்காதே. இந்தச் சோபாவில் உட்காரு. இந்தச் சோபாவும் இந்தப் பங்களாவும் இதிலுள்ள சகலமான வஸ்துவும் இனி உன்னுடையதுதான் தெரி யுமா!" என்று ரத்தினம் கூறும்போது, உள்ளிருந்து ஒரு குரல் "ட்ளாக். ட்ளாக். நானுங் கூடத்தான். நானுங் கூடத்தான். லீலா! மை டியர் லீலா!" என்று கத்தி நொட்டைவிட்டுக் கூவிய ஓசை கேட்டது.

இதைக் கேட்டதும் லீலா நெருப்பை மிதித்தவள்போல் திடுக்கிட்டு நடுங்கினுள். வீரபத்திரன்போல் உட்கார்ந்திருந்த ஆசாமி சிரித்துக்கொண்டே, "நம்மாழ்வார்! இருப்பா! இரு. அவ சரப்படாதே! உன் லீலாதான் உன்னைத்தேடிக்கொண்டு வந்திருக் கிருள். நீ அலங்காரத்தை முடித்துக்கொண்டு தயாரா யிரு. பிறகு வரலாம்" என்று கூறினுன்.

"மாமா! மாமா! அலங்கார மெல்லாம் முடிந்துவிட்டது. நீங்கள் சொல்வீர்களே அதே மாதிரி அசல் மன்மதக் குஞ்சு போலே நான் இருக்கிறேன் ; அங்கே வரட்டுமா! என்னெ நீங்க வந்து பாருங்கோ! லீலா! இங்கே வா" என்று உள்ளேயிருந்த படியே நம்மாழ்வார் கூறினுன்.

வெளியிலிருந்த மனிதன் "நம்மாழ்வார்! வாடாப்பா! வா! ஒய்யாரமாய் வா!" என்ருன். உடனே கதவைத் திறந்துகொண்டு

மைனர் ஜமீந்தார் வெகு வெகு சந்தோஷத்துடன் ஒய்யாரமாய் நடந்து வந்தான்.

இந்த வார்த்தைகளை எல்லாம் கேட்கக் கேட்க லீலாவுக்கு, தான் வந்து அகப்பட்டுக்கொண்ட மோசத்தின் மர்மம் தெரிந்து விட்டது. படக் படக் கென்று அடித்துக்கொள்ளும் இதய வேகத்தின் ஓட்டத்தைச் சகிக்கமுடியாது தவித்தபடியே அந்த ஹாலின் ஓரமாக ஒரு பீரோவின் மறைவில்போய் ஒட்டிக்கொண்டு நின்றாள். வெயர்வை வெள்ளம் 'குபீர் குபீர்' என்று பொங்கி வழிகிறது.

அதேசமயம் சுந்தரியும் அவள் சகாக்களும் பெரிதாக நகைத்தும் சந்தோஷத்தினுல் பீரங்கி தொண்டையில் பேசிக்கொண்டே வருவதைக் கண்ட லீலாவின் மனம் பின்னும் துடித்தது. இவர்கள் எல்லோரும் ஒன்றுகூடி இந்தச் சதியாலோசனையைச் செய்திருக்கும் ரகஸ்யம் லீலாவுக்கு வெட்டவெளிச்சமாய்த் தெரிந்ததும் ஆத்திரமும் கோபமுங் கொண்டு பல்லைக் கடித்துக் கொண்டு நின்ற சமயம் அவர்களும் அந்த ஹாலுக்குள் நுழைந்தார்கள்.

அதே சமயந்தான் கதவைத் திறந்துகொண்டு நம்மாழ்வார் வெகு முடுக்காக அந்த ஹாலில் நுழைந்தான். அலங்கார சுந்தரிகளாய்—நவநாகரிக நாரீமணிகளாய்—வரும் அந்த ஷோக்கு சிங்காரிகளைப் பார்த்ததும், நம்மாழ்வார் அபரிமிதமாக நகைத்துக் கொண்டு, அவர்கள் முன்பு ஓடிவந்து, "நீங்களா லீலா! நீங்களா லீலா!" என்று ஒவ்வொருவரையும் கேட்க வாரம்பித்தான்.

மத்தியிலுள்ள மனிதன் சடக்கென்று நம்மாழ்வாரைப் பிடித்துக்கொண்டு, "நம்மாழ்வார்! இவர்களெல்லாம் உன் மாமியார்கள். உன் ஆசைக் கண்மணி லீலா அதோபாரு! புதுக்கல்யாணப் பெண்ணுகையால் வெட்கம். அதான் தூர நிற்கிருள். நீயும் தூரவந்து உட்காரு" என்று இழுத்தான்.

நம்மாழ்வார் :—(சிரித்துக்கொண்டே) "ஓஹோ! அப்பவே எனக்குத் தெரியுமே! முதல்லே லீலா என்று நினைத்தேன். கிட்ட வந்து பார்த்ததும் அம்மாமிமாதிரி பெரிய மூஞ்சியா இருந்தது. சரிதான். லீலா! லீலா! மைடியர் லீலா! கமான். கம் ஹியர். கம்மலாங்" எனக் கூவிக்கொண்டே அவளிருக்குமிடம் சென்றான்.

இதற்குள் அந்தமனிதன் பெரிய அட்டகாஸமாக நகைத்துக் கொண்டே, "அடாடா! என்ன ஆசை! என்ன அன்பு. கல்யாணப் பெண்ணைப் படத்தில் பார்த்த அன்றுமுதல் அதே நினைவுதான். லீலாவின் பஜனைதான். அதனால்தான் இத்தனை ஆர்வத்துடன் அவளிடம் ஓடுகிறான். வாப்பா! வா! நம்மாழ்வார்" என்று அழைத்தான்.

சுந்தரி, இந்த இளைய ஜமீந்தார் பேசுவதும் பார்ப்பதும் அவனுக்குள்ள அழகான பெயரைக் கேட்டதும் அவளை மீறிய கவலையும் அதிர்ச்சியும் உண்டாகித் திகைத்துவிட்டாள். "நம்மாழ்வாரா!...இதென்ன பெயர்? இக்காலத்தில் இம்மாதிரி வைத்துக் கொள்வதுண்டா? பையன் மட்டும் ராஜாவைப்போல் இருக்கிறான். இவனுக்கா நம் லீலாவைக் கொடுப்பது?" என்று அவள் தனக்குள் எண்ணியபடியே திகைத்து நிற்பதை அந்த மனிதன் பார்த்துவிட்டான்.

"ஏனம்மா! கல்யாணத்திற்கு முன்பே இப்படி மாப்பிள்ளை நடக்கிறாரே! என்று ஆச்சரியப்படுகிறீர்களா அல்லது தற்கால நாகரிகத்தின்படி அழகான பெயர் இல்லையே என்று யோசிக்கின்றீர்களா! நாகரிகப் பெயர் வேண்டுமானால் இனிமேல் ஒன்று நீங்கள் வைத்துக் கூப்பிடலாம். இந்த ஜெமீன் வம்சத்திலேயே இவர்களுக்குக் குழந்தை இல்லாது வெகுவாய்க் கஷ்டப்பட்டார்கள். மூன்று தலைமுறைக்கு ஸ்வீகாரமே எடுக்கும்படியாக ஆகிவிட்டது. இந்தப் பிள்ளையின் தகப்பனாரும் ஸ்வீகாரந்தான்.

அவருக்கு ஒரு குழந்தை பிறப்பதற்காக வேண்டாத பிரார்த்தனை இல்லை; சுத்தாத கோவில் இல்லை. எத்தனையோ அன்னதானம் எத்தனையோ கோதானம். பூதானம். கணக்கு வழக்கில்லை. ஒரு பெரியவர் வந்து இந்தத் தம்பதிகள் ஆழ்வார் திருநகரி என்ற ஊரில் தாம்பிரபரணி தீர்த்தத்தில் ஒருமண்டலம் தீர்த்தமாடி ஆழ்வாருக்குச் சேவை செய்து வேண்டிக்கொண்டால், அந்த ஆழ்வார் கிருபையால் சந்தானம் உண்டாகும்" என்று கூறினர்.

அதேபோல் ஜமீந்தார் குடும்பத்துடன் சென்று சேவை செய்த தன் பலன் உடனே அந்தம்மாள் கர்ப்பவதியாகி, அதே ஊரில் ப்ரஸ

வித்து, அந்த ஆழ்வாரின் பெயரையே இக் குழந்தைக்குச் சூட்டி அதையே வாயார அழைத்து வந்தார்கள். அதே வழங்கிவிட்டது. வேண்டுமானால், நீங்கள் இந்துகுமார், ப்ரேம்குமார், வத்ஸகுமார், சம்பத்குமார், நந்தகுமார் என்ற பெயர்களில் எது லீலாவுக்குப் பிரியமோ அதை வைத்துக் கூப்பிடட்டும்" என்று முடித்தான்.

நம்மாழ்வார் :—ஆமாம்! இந்த நம்மாழ்வாரும், மணவாள மாமுனியும் எனக்குக்கூட பிடிக்கவே இல்லை. ஜோரானபேர் வைத்துக் கூப்பிட்டால்தான், இனிமே நான் ஏன்னு கேட்பேன். லீலா! உனக்கு எந்தபேர் இஷ்டம்?—என்று கேட்டுக்கொண்டே லீலா இருக்குமிடம் மீண்டும் போனான்.

லீலாவின் வெறுப்பும் ஆத்திரமும் கூறத்திறமில்லை. அந்த ஜமீந்தாரை ஏற இறங்க இருமுறை பார்த்தாள். பல்லைக்கடித்துக் கொண்டு, "ஐயா! ஆழ்வார் ஸ்வாமிகளே! தயவுசெய்து அந்தப் பக்கம் போய் உட்காரும். இங்கு உமக்கு வேலை இல்லை" என்று கூறிக்கொண்டே அப்புறம் திரும்பிப் பின்பக்கம் இருந்த அறைக்குள் சென்றுவிட்டாள்.

இதற்குள் அந்த மனிதன் எழுந்துவந்து நம்மாழ்வாரைக் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு வந்து, சோபாவில் உட்கார வைத்தான். சுந்தரிக்குமட்டும் மனம் சமாதானமாகவில்லை. ஒரு பக்கம் வேதனை செய்கிறது. முகம் மாறிவிட்டது. மெல்லவும் மாட்டாது விழுங்கவும் மாட்டாது தவிக்கிறாள். பெண்ணைக் கொடுக்க முடியாது என்று கூறிவிட்டுப் போய்விடலாமா என்றும் தோன்ற வாரம்பித்தது.

சுந்தரியின் மனக்கலவரத்தை யறிந்த அம்மனிதன் பையனின் அசட்டுத்தனத்திற்காகத்தான் வருத்தப்படுகிறாள் என்று நிச்சயித்துக்கொண்டான். அவன் மஹா கெட்டிக்காரனாகையால் உடனே சுந்தரியிடம் வந்து, "அம்மணீ! இந்தச் சொத்து பூராவும் உங்களுடைய பெண்ணின் சொத்து. பெண்ணுடையதானால் உங்களுக்கும் சேர்ந்த தன்றோ? இப்படி வாருங்கள். எல்லாவற்றையும் காட்டுகிறேன். மீனாக்ஷீ! இங்கு வா! அம்மா அவர்களெல்லாம் வந்திருக்கிறார்கள் பாரு!" என்றான்.

உடனே 50 வயது மதிக்கக்கூடிய ஒரு பெரியம்மாள் வந்தாள். அந்தம்மாளும் அம்மனிதனுமாக சுந்தரியையும் மற்றவர்களேயும் அழைத்துச்சென்று அந்தப் பங்களா முற்றும் சுற்றிக்காட்டியவாறு, "இதுதான் பெரிய ஜமீந்தாரிணியம்மாளின் பழய காலத்து நகைகள். இவைகளின் மதிப்பு சுமார் ஒன்னரை லக்ஷம் ரூபாய் பெறும். இதை எந்தக் காலத்திலும் விற்கவோ அழிக்கவோ கூடாது. அப்படியே இருக்கவேண்டுமென்று பெரிய ஜமீந்தார் காலம் முதல் பரம்பரை சொத்தாக இருந்து வருகிறது.

இவைகள் பரம்பரையாய் இருக்கும் புடவைகள், துப்பட்டாக்கள், சால்வைகள், வேஷ்டிகள் முதலியன. இவைகள் பாதிக்கு மேல் அசல் வெள்ளி சரிகை; மற்றவை தங்க சரிகை. சுமார் ஐம்பதாயிரம் ரூபாய்க்குமேல் மதிப்பாகும். இவைகள் முற்றும் தங்கப் பாத்திரங்கள். இவைகள் வெள்ளிப் பாத்திரங்கள்" என்று விலே உயர்ந்த சாமான்கள் ஒவ்வொன்றையும் காட்டினன்.

ஜமீந்தாரின் வம்ச பரம்பரையான மனிதர்களின் படங்களே எல்லாம் காட்டி ஒவ்வொருவராய் பேர் ஊர் சொல்லும்போது "இவர்கள்தான் இப்போதுள்ள இளேய ஜெமீந்தாரின் தாய்தந்தையர்கள். அழகிலும் அறிவிலும் இந்தத் தம்பதிகள் நிகரற்று விளங்கினர்கள். அவர்களேப்போலவேதான் மகனும் வெகு சுறுசுறுப்பாயும் புத்திசாலித்தனமாயும் படித்துவந்தான். அவருடைய 12-வது வயதில் டைபாயிட் ஜுரம் வந்து சற்று மூளேக் கோளாறு உண்டாகிவிட்டது. தாய்தந்தையர்கள் பார்க்காத வைத்தியமில்லே. அதே கவலேயில் ஒருவர்பின்னெருவராய் இருவரும் போய்விட்டார்கள். பையன்மட்டும் பழயபடி அசல்மாதிரி உண்டாகவில்லேயேயன்றி எந்தவிதமான துஷ்டத்தனமும் தெரியாது. அடியோடு இந்த ஜமீன் வம்சமே பாழாகிவிடுகிறதே என்ற வயிற்றெரிச்சல் சொல்ல முடியாது. எது எப்படி இருந்தாலும் கல்யாணமாகியதும் கட்டாயம் நான்கு குழந்தைகள் 8 வருடத்திற்குள் பிறக்குமென்றும் அவர்களால் வம்சவிருத்தியாவதோடு, இத்தனே நாள் இந்த ஜமீன் இருந்த மேன்மையைவிட ஆயிரம் பங்கு பரிமளிக்கும் என்றும் சிறந்த ஜோஸ்ய நிபுணர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

வீணாக பங்காளிகள் அடித்துக்கொண்டு போகக் காத்திருக்கிறார்கள். அவர்கள் கொண்டுபோவதில் வம்ச விருத்தியுமற்று, சொத்தும் சிதறிப்போய் யாவும் நிர்மூலமாகி இளைய ஜமீந்தாரை ஓட்டாண்டியாய்ப் பிச்சைக்காரனாக்கி விடுவார்கள். ஆகையால் கல்யாணத்தைச் செய்து, ஒரு வார்ஸை ஏற்படுத்திவிட்டால் நல்லது என்று சாகுந்தறுவாயில் அவருடைய தாயார் கூறினார்கள். நான் அப்படியே செய்வதாக அவருக்கு வாக்குக்கொடுத்தேன். சொத்தையும் ஜமீனையும் வகையாக வைத்துப் போஷிக்கும் திறமை உங்கள் மகளுக்கு இருப்பதால், அவளையே மணஞ் செய்விக்க வேண்டுமென்று தீர்மானித்துவிட்டேன். பணத்திற்காக எத்தனை பேர் பெண் கொடுக்கப் போட்டியிடுகிறார்கள் தெரியுமா!

அதோடு இன்னொரு ரகஸ்யம் என்னவென்றால், இந்தப் பிள்ளையின் தகப்பனருக்கு முதல் இரு தாரங்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கும் குழந்தை இல்லாததால் மூன்றாவதாக இவருடைய தாயாரை மணந்தார். ஏதோ கடவுள் கிருபையால் சந்ததி உண்டாயிற்று. அவர்களுக்கு இல்லாது இளையாளுக்குப் பிறந்துவிட்டதால், அவர்கள் வயிற்றெரிச்சலால் குழந்தைக்கு ஏதேனும் தீங்குசெய்து விடுவார்களோ என்ற பயத்தால் எஜமானரே அவர்களுக்கு ஏராளமான சொத்தைக் கொடுத்துத் தனியாக வைத்துவிட்டார்கள். அவர்களும் இப்போது இங்கு நுழைய சமயம் பார்க்கிறார்கள்.

ஆகையால், இனி உங்கள் மகளுடைய சாமர்த்தியத்தினால்தான் இந்த ஜமீனின் விளக்கு ப்ரகாசிக்கவேண்டும். என்ன குறைந்தாலும் இந்த ஜெமீனைச் சேர்ந்த சொத்துக்கள் குறைந்தது ஒரு கோடிக்குமேல் செல்லுமேயன்றிக் கீழ்நோக்காது. அதிர்ஷ்ட தேவதை ஒருவரைப்போய் அடைவதென்றால் அவர்கள் எத்தனை புண்ணியஞ் செய்திருக்கவேண்டும்?" என்று சரியானபடி தூபத்தைப்போட்டுக் கொண்டே இருவரும் பேசிமுடித்துப் பின் ஒரு மஹாலை யடைந்தார்கள்.

இவர்களுடன் கட்டாயத்தின் நிமித்தமும், அவைகளைப் பார்க்க வேண்டுமென்கிற ஆவலுடனும் சுந்தரி லீலாவையும் இழுத்துச்சென்று காட்டினாள். லீலா நடைச்சவம்போல் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டும் கேட்டபடியும் நடந்தாள்.

அந்த மஹாலில் வெற்றிலைப்பாக்கு, சீர்வகைகள் ஒரு தட்டு நிறைய நகைகள் புடவைகள் எல்லாம் கல்யாண வீடுபோல் எடுத்து வைத்திருந்தன. இதைப் பார்த்தவுடனே லீலாவின் வயிற்றில் புளி கரைத்தது. சுந்தரியின் மனத்தில் மறைந்திருந்த மேக இருள் நீங்கி துலாம்பரமாகிச் சந்தோஷ மந்தமாருதமும் வீசத் தலைப் பட்டு விட்டது.

இத்தனை சொத்துக்களுக்கும் தன் மகள்தான் உரிமையான வள் என்றதை நினைக்க நினைக்க சுந்தரியின் மனம் பொங்கிப் பூரிக்க வாரம்பித்ததோடு, ஏதேதோ எண்ணங்களில் அலையத் தொடங் கியது. அதாவது, தன்னைச் சுற்றிலும் இதில் நூற்றில் ஒரு பங்கா வது பணக்காரர்கள் இருக்கிறார்களா என்றால் கிடையாது; தகப் பனாரோ கேவலம் சாதாரணம். தங்கையோ சினிமாராணி. மைத் துனனோ அநியாய வட்டிக்குப் பணம் சேர்க்கும் லோபி; நாத்த னாரோ, அவள் புருஷன் லஞ்சம்வாங்கி சிறையிலிருக்கிறான் என்ற இழிவான பட்டத்தைப் பெற்றிருக்கிறாள். கூடப்பிறந்த ஒரே அண் ணனும் நாடோடியாய் ஓடிவிட்டான். மருந்துபோலிருக்கும் ஒரு தாய் மாமனும் கொலைக்கேஸில் சம்பந்தப்பட்டுத் தீபாந்திர சிக்ஷை யடைந்துவிட்டான்.

விரல்விட்டு எண்ணினால் ஒருவர் என்றால் ஒருவர்கூட கண்ணியமானவர்கள் இல்லை. இன்னுமுள்ள சுற்றுப்பட்ட சில உறவுக்காரர்களும் ஒருவர் சோடாக்கடையும், ஒருவர் பலகார ஓட்டலும், ஒருவர் க்ஷவரக்கடையும், ஒருவர் கல்யாணத் தரகரும் ஒருவர் பிணந்தூக்குகிறவருமாக விருக்கிறார்கள். இந்தச் சனிகளை எல்லாம் கண்ணால் பார்க்கவும்; அவளுக்குப் பிடிக்கவில்லை.

ஜமீந்தார் என்றால் இலேசனதா! நம் லீலாவாவது அத்தகைய பெரிய அந்தஸ்திலிருந்து, அவளால் இந்தச் சந்ததி விளங்கி வாழட்டும்! பையன் சற்று அசடேயன்றிக் குரூபியல்ல. ராஜாபோ லிருக்கிறான். லீலாவோ படித்த கெட்டிக்காரி. குடும்பத்தை நடத்த முடியும். நாம்தான் இருக்கிறோம்......இதுபோன்று கணக்கற்ற எண்ணங்கள் அவள் மனத்தில் தோன்றி பழைய தயக்கத்தை அடியோடு மாற்றித் தீரமான முடிவைக் கொடுத்துவிட்டன.

ரத்தினத்தைப்பற்றிக் கூறவேண்டுமா? வெகு சந்தோஷம் என்பதை முகமே காட்டிவிட்டது. உடனே அந்த மனிதன் ரத்தினம் சுந்தரி இருவரிடமும் அந்தச் சீர்வரிசைகளைக் கொடுத்து, அதோடு 5,000 ரூபாய் அசல் நோட்டுக்களையும் எண்ணிக் கொடுத்து, "சார்! இவைகளை அங்கீகரிக்கவேண்டும். இன்னும் 15 தினங்கள் இருக்கிறது இவருடைய தாயார் திதி. அதை முன்னிட்டு விவாகம் செய்யக்கூடாது என்றும், திதி முடிந்ததும் முகூர்த்தம் வைக்கலாம் என்றும் புரோகிதர் சொன்னார்.

இவைகளைக் குழந்தைக்குக் கொடுங்கள். இந்த நகைகள் எல்லாம் கர்நாடகம் பிடிக்கவில்லை என்றால், வேறு பிடித்தமாதிரி உடனே செய்துவிடவும். 5,000 ரூபாய் அதற்குத்தான் கொடுத்தேன்; போதவில்லை என்றால் இன்னமும் தருகிறேன்" என்று கூறி, தட்டை எடுத்து ரத்தினத்தினிடம் நீட்டினான்.

லீலாவின் தேகமே பத்தி எரிவதுபோல் தாங்கமுடியாத வேதனை செய்கிறது. "ஐயோ! வாக்குக்கொடுக்காதே, வாங்காதே; என்னைப் பாழக்காதே!" என்று கத்திவிடலாமாவென்று லீலா துணிந்தாள். "கண்ணுமண்ணு தெரியாத வெறிபிடித்த மோகத்தில் நிரபராதியான ஒருமனிதனின் கண்களை அவியும்படி அடித்துக் குடும்பத்தையும் சிதறச் செய்த மகாபாவி எதைத்தான் செய்யத் துணியமாட்டார்? இந்தச் சமயம் அவருக்குள்ள விபரீத ஆசையின் வேகத்தில் என்னை ஒரே வெட்டு வெட்டினாலும் வெட்டுவார்... அப்படிக் கொன்றாலும் கொல்லட்டும். இந்த விபரீத காரியத்தை மட்டும் நடத்தாது நிறுத்தினால் போதும்" என்று தனக்குள் எண்ணித் துணிவுடன், "அப்பா! அப்பா! இந்தப் பணத்தை வாங்க வேண்டாம். இதைத் தொடவேண்டாம்" என்று தன்னை மீறிய குரலில் பெரிதாகக் கத்தினாள்.

அதே நிமிடம் ரத்தினம் லீலாவை ஒரு முழி முழித்துப்பார்த்துக்கொண்டே நோட்டுக்களை ஜேபியில் போட்டுக்கொண்டான். அப்பொழுதே தட்டுக்கள் முற்றும் ஆள்கள் மூலம் வீதியிலுள்ள காரில் போய்ச் சேர்ந்தன. சுந்தரியும் மற்றவர்களும் லீலாவின் வாயைக் கெட்டியாகப் பொத்தி அவளை தாமாக நடத்திக்கொண்டு

வந்து காரில் ஏற்றினூர்கள். அடுத்த நிமிடமே கார், தனது இயற்கையான இரைச்சலுடன் கிளம்பிவிட்டது. அதன்பின்னுல் இன்னும் இரண்டு கார்களும் வரும் ஓசை கேட்டது. பேதைப் பெண்ணின் மனம் எப்படித்தான் இருக்கும்?

18

தன் பிள்ளையும் மருமகளும் தன்னை விரட்டுவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டு மனம் கொதித்த தங்கம்மாள் "என் வயிற்றில் பிறந்த மக்களே 'எனக்கு வேண்டாம் பூஷணிக்காய்' என்று பந்தாட்டம் ஆடினுல் இனி இந்தக் கிழப்பிராணனை வைத்து ரக்ஷிக்கக்கூடியவர்கள் யார்தானிருக்கிறூர்கள்? அடாடா! வயதாகிவிட்டாலே அந்த ஆத்மாவுக்கு உள்ள மகிமையே குறைந்து வெறும் மாமிச மூட்டையாகவன்றோ மதிக்கின்றூர்கள்! என்ன விருந்தாலும் கிழங்களுக்குள்ள அனுபவம் சிறியவர்களுக்கு வருமா? உம். அனுபவத்தையும் நியாயத்தையும் யார் கேட்கிறூர்கள்? அவர்களாக 'நீ எங்காவது போய்விடு' என்று வாய்திறந்து சொல்லும்வரையில் நாம் இங்கு பேமானித்தனமாக இருப்பதும் தின்பதும் நாயைவிடக் கேவலமான பிழைப்பாகவன்றோ தோன்றும். ஐயோ! ஈச்வரா! நான் என்னசெய்வேன்?" என்று துடித்தாள். எந்த வகையில் யோசனைசெய்தும் அவளுக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

இப்படியே தவித்தவாறு சில நாட்கள் சென்றன. ஒரு தினம் முத்துச்சாமி தன் மனைவியின் உபத்திரவத்தைத் தாங்காமல் தாயாரை நோக்கி "அம்மா! கோடிவீட்டு கோதண்டத்தின் பெண்ணுக்குக் கல்யாணமாம். இந்த வீட்டில்தான் சம்மந்திகளை இறக்க வேண்டுமாம்; இடங்கேட்கிறூர். கொடுப்பதாக வாக்குக்கொடுத்து விட்டேன். அதிகக் கூட்டம்வரும். ஒருவாரம் இங்கிருப்பார்கள், அதுவரையில் நீ ரத்தினத்தினிடமாவது மரகதத்தினிடமாவது போயிருக்கிறுயா? ஏனெனில் உனக்குத் தக்கபடி இங்கு இருக்க

முடியாது; ஏதாவது அனுசாரமாயிருக்கும் என்று நினைக்கிறேன்" என்று ஆரம்பித்தான்.

ஏற்கெனவே விஷயந்தெரிந்த தங்கம்மாளுக்கு "உம். அடித்துத் துரத்துவதற்கு இதோர் மார்க்கமா?" என்று தனக்குள் நினைத்தாள். "ஏண்டாப்பா! முத்தூ! கல்யாணமென்றால் யாருக்குத்தான் சந்தோஷமாயிருக்காது. என்பாவிக் கண்ணால் கல்யாணத்தைப் பார்த்து நானும் களிக்கக் கூடாதா! இத்தனை பெயர்கள் இருக்கும் வீட்டில் என் ஒருத்திக்குமட்டும் இடமில்லாது போய் விட்டதா! பத்துபேருடன் பதினோருவது பேராய் நானும் இருந்துவிட்டுப் போகிறேன். கல்யாணத்தைக் கண்ணால் பார்த்து எத்தனையோ காலமாகிவிட்டது. எனக்காக ஒருதனி ஆசாரமும் வேண்டாம். என்னால் என்னடாப்பா கஷ்டம்?" என்றாள்.

வாசற்படிக்கு அப்புறம் நிற்கும் மருமகளுக்கு இதைக்கேட்டதும் கோபம் பிய்த்துக்கொண்டு வருகிறது. "இந்த அட்டை எங்காவது விட்டுப்போகுமா? ஒட்டிக்கொண்டல்லவா குடலை யறுக்கும்?" என்று தனக்குள் எண்ணியபடி, உள்ளே வயிறெரிய உதடு பழம்சொறிய என்ற பழமொழியைப் போல், "இல்லையம்மா! அந்த சம்பந்தி வீட்டுக்காரர்கள் ஒருமாதிரியாம். "எதிரே விதவை வந்தாள்; சகுனத்தடையாகிவிட்டது. அப்படி! இப்படி!" என்று ஒரு அல்ப வார்த்தை சொல்ல நீங்களேன் இத்தனை வயதான பிறகு கேட்கவேண்டும்? உங்களுக்கென்ன தலையெழுத்து? அதனால்தான் 10 நாளாவது அக்கா வீட்டுக்குப் போய்வாருங்கள் என்று சொல்லுகிறோம்" என்று பழய சாதத்தில் வைத்த வெண்ணெயைப்போல் உருகியவாறு கூறினாள்.

இந்த வார்த்தைகள் தங்கம்மாளின் மனப்புண்ணை இன்னும் கிளறிவிடுவதுபோல் தோன்றின. "இந்த மகாராஜி சொல்லும் வார்த்தைகளைவிடவா அவர்கள் சொல்லப்போவது இவளுக்குப் பொத்துக்கொள்ளுகிறது? அடாடாடா! என்ன சாகஸம்! என்ன மாமாலம்?" என்று தனக்குள் எண்ணியபடியே "அம்மா! ஸாவித்திரி! இந்த ஊருக்கு முற்றும் நான் ஒருத்திதான் அபசகுனத்திற்கு ஆதி மனுஷியா? கல்யாணப் பிள்ளையின் வீட்டில் ஒருத்திகூட இம்மாதிரியான மனுஷியே கிடையாதா?"

என்று கூறுவதற்குள் முத்து "என்னும்மா! இப்படி விவகாரந் தெரியாமல் பேசுகிருய்! அவாவா வீட்டு விதவைகள் அவாள வாளுக்குச் சகஜம். அவா வீட்டில் யாருமே இல்லை என்றுதான் கோதண்டம் சொன்னுன். நீதான் மரகதத்தின் வீட்டுக்குப்போய் வந்துவிடேன். உனக்கதனுல் என்ன கஷ்டம்?" என்ருன்.

அதற்குமேல் தங்கம்மாளுக்கு ஒன்றும் சொல்வதற்கு முடிய வில்லை. மனம் வெறுத்துவிட்டது. "இவர்களுக்கு விஷமாக விருக்கும் நாம் இங்கிருந்து அவஸ்தைப்படுவதைவிட பெண்ணிடந்தான் போய் பார்க்கலாம்" என்று மனம் முறிந்துவிட்டதால், "சரிப்பா! என்னை ரயிலிலடிக்கு வந்து அழைத்துப் போகும்படி எழுதிவிடு" என்று தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் கூறிவிட்டு குடத்தையும் பாத்திரங்களையும், ஒரு மூட்டை துணிகளையும் எடுத்துக்கொண்டு அந்த கிராமத்தில் அரைமைலுக் கப்பாலுள்ள ஏரிக்கு வழக்கம்போல் சென்ருள்.

இவளைப்போல் ஏரிக்கு இன்னும் பல பெண்கள் வந்து பாத்திரம் தேய்த்துக் கொண்டும், துணிகளைக் கசக்கியவாறும், அலசிப் பிழிந்த வண்ணமும் தங்கள் உடம்பை ஈரத் துணியால் இழுத்து அழுக்கு போகத் தேய்த்தபடியும் அவரவர்களுக்கு ஸ்வாரஸ்ய மான விஷயங்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

தங்கம்மாள் அங்கு போகும்போது அவர்கள் சம்பாஷணை கோதண்டத்தின் வீட்டுக் கல்யாணப் பேச்சாகவே இருந்தது. ஒரு அம்மாள் ஆச்சரியத்துடன் மற்றவர்களை நோக்கி "ஆச்சரியத்திலும் ஆச்சரியந்தான். முத்துசாமி கூட கல்யாணத்திற்கு இடம் விடுகிருன் என்ருல் வேறென்ன வேண்டும்." என்ருள்.

மற்ருெ :—ஆமாம். சோழியன் குடுமி சும்மா ஆடாது. வாடகை இருபக்கத்திலும் கறந்து விடுவான். வீட்டில் கல்யாண தடபுடல் சாப்பாடு ஒருவாரமாவது தள்ளிவிடும். சாமான்களும் அப்படியும் இப்படியுமாய் அவாகுழந்தைகளே சேகரித்துவிடுங்கள். தேங்காய், வெத்திலே பாக்கு, பக்ஷணம், தக்ஷிணை இல்லையா! இந்த வருமானத்தை எல்லாம் உத்தேசித்துத் தான் விட்டிருப்பான்.

இன்ஞெ :—அதெல்லாம் ஒரு பக்க மிருக்கட்டும். அந்த வேதாந்தப்பழம் போன்ற தங்கத்தின் வயித்தில் இப்படிப்பட்ட

தூமகேதுகள் வந்து பிறந்திருக்கவே கூடாது. அவள் செய்யும் தெய்வ பக்திக்கும், ஒழுக்க சீலத்திற்கும் இந்த ப்ராரத்தங்கள் எப்படித்தான் பிறந்ததோ! இதுகாறும் அந்த முத்துச்சாமி செய்த அக்ரமங்கள் எல்லாம் போதாமல் இப்போது புதிதாக ஓர் பெரிய கொலைக்கும் ஒப்புக்கொண்டிருக்கிறானும். அந்த பயங்கரத்தைக் கேட்டாலே குலை நடுங்குகிறது. மூன்று தலை முறைத் தலைச்சன் வர்க்கத்திலுள்ள ஒரு பூர்ணகர்ப்பிணியை எந்த கட்டேலெ போறவனுக்கோ பிடித்துக் கொடுக்க ஒத்துக் கொண்டு ஆயிரம் ஆயிரமாய் பணம் வாங்கியிருக்கிறானும். கல்யாண சந்தர்ப்பத்தில் வந்திருப்பவர்களை எல்லாம் விசாரித்து கர்ப்பிணியைத் தேடுவதற்குத்தான் இடம் விட்டிருக்கிறான்...

என்று அவள் கூறி முடிப்பதற்குள் அருகிலிருந்தவர்கள், "ஐயோ! ஐயோ! என்ன! தலைச்சன் கர்ப்பிணியர! இதன்ன அக்ரமம்! சூன்யம் வைப்பதற்காக மந்திரக்காரனும், குடுகுடுப்பாண்டியும் தலைச்சன் குழந்தை இறந்துவிட்ட சவத்தைப் புதைத்த இடத்திலிருந்து தோண்டி எடுத்துக் கொண்டு தங்கள் காரியத்திற்கு உபயோகித்துக் கொள்வார்கள் என்பதை மட்டும் கேட்டிருக்கிறோம். ஐயையோ! இந்த அனியாயம் எந்த ஊரில் அடுக்கும்? இந்த அக்ரமத்தை நீ எப்படி அறிந்தாய்?" என்று திகிலும் வியப்பும் வடிவாய்க் கேட்டார்கள்.

இந்த வார்த்தை தங்கம்மாளின் காதில் விழுந்ததுதான் தாமதம், அவள் தன் காதுகளையே நம்பாது துடித்தாள். "என்ன! என்ன! மூன்று தலை முறைத் தலைச்சன் கர்ப்பிணியைப் பிடித்துத் தரப்போகிறானு! ஐயையோ! அனியாயக் கொள்ளையே! இந்த பாவத்தை எத்தனை ஜன்மம் எடுத்தாலும் துலைக்க முடியாதே. இப்படியுமா ஒரு புத்தி தோன்றும்? ஐயோ! இதற்காகத் தானு என்னை விரட்டுகிறார்கள்?" என்று தீயை மிதித்தவள் போல் துள்ளினாள்.

என்றைக்கும் தங்கம்மாள் ஊர்வம்பு விஷயத்தில் கலந்து கொள்வது வழக்கமே இல்லையானாலும் இன்று மட்டும் இவர்கள் என்னென்ன சொல்கிறார்களோ யென்பதை யறியும் பொருட்டு அவர்களுக்குச் சமீபமாகவே நகர்ந்தாள்.

தங்கம்மாளைப் பார்த்த உடனே அவர்கள் அந்த வார்த்தையை அடியோடு விட்டு விட்டு, "கோதண்டத்தின் பெண்ணை இளையாளாய்த்தான் கொடுக்கிறான். சொத்து கிடக்கிறதாம். மூத்தாளுக்கு ஒரு பெண் குழந்தை 5 வயதிலிருக்கிறதாம். மாப்பிள்ளையின் அக்கா ஒருத்தி பாலியத்திலேயே விதவையாகி கொஞ்சம் சொத்துடன் தாய் வீடு வந்தவளாம். அவள்தான் அந்த பெண்ணை வளர்க்கிறாளாம். கல்யாணப் பிள்ளையின் தகப்பனார் நாலு வருடத்திற்கு முன்புதான் போய்விட்டாராம். தாயார் இருக்கிறாளாம்.

மாப்பிள்ளையின் பெரிய தாயார் ஒரு விதவையாம். குழந்தை குட்டி இல்லையாம். அத்தையும் ரெண்டுபேர் அதே மாதிரியாம். அந்த மூன்று விதவைகளின் சொத்தும் இந்த பிள்ளைக்கேதான் சேரப்போகிறதாம். அதனால்தான் கோதண்டம் கையில் வேறு பணங்கொடுத்து பெண்ணைக் கொடுக்கிறான்." என்று ஒரு பாட்டி சொன்னாள்.

அதற்குள் இன்னொரு பாட்டி நகைத்துக்கொண்டே, 'ஏண்டியம்மா! நீ சொல்வதைப் பார்த்தால் கல்யாண வீட்டில் பெண்ணுக்கும் பிள்ளைக்கும் நலங்கிட்டு ஆரத்தி சுத்தவும் லக்ஷ்மி கல்யாணம் பாடவும் ஒரு சுமங்கலி கூடக் கிடையாதுபோலிருக்கிறதே! எல்லோரும் மாஜி சுமங்கலிகள்தானா?" என்று குறும்பாய்க் கேட்டாள். கூடயிருந்தவர்கள் கொல்லென்று சிரித்தார்கள்.

அதற்குள் முன்னவள் பேசத்தொடங்கி, "இல்லெ பாட்டி! இத்தனை மாஜி சுமங்கலிகளின் பணம் சேருகிறதென்று சொன்னேன். இன்னும் வேண்டிய பேர் சுமங்கலிகளும் வருவார்கள். பெண்ணின் தங்கைகள் ரெண்டுபேர், சித்திமார்கள் நாலு பேர் எல்லாம் வருகிறார்களாம்" என்று கூறிய வார்த்தைகள் முற்றும் தங்கம்மாளின் காதில் விழாமலில்லை.

தன்னை கிளப்புவதற்காகத்தான், 'கல்யாண வீட்டில் விதவையே இல்லை' என்று கூறியவர்கள் செய்துள்ள சூழ்ச்சி வார்த்தைகளை எண்ணி மனங்குமுறினாள். இதைவிட அவர்கள் பேசிய முதல்

விஷயந்தான் அவள் நெஞ்சையள்ளித் தின்றது. "இதை எப்படி யறிவது? இந்த பெரிய விபரீதமான கொலைப்பாதகத்தினின்றும் எவ்விதம் தப்பச் செய்வது?" என்ற பெருந்திகிலும் கலக்கமுங் கொண்டு தவித்தபடியே தன் வேலையை முடித்துக்கொண்டு வீடு வந்து சேர்ந்தாள்.

இவள் வருவதற்குள் கல்யாணக்காரர்களுக்காக வீட்டை ஒழித்து ஏறக்கட்ட வாரம்பித்து விட்டார்கள். 'எந்த விதமாக இந்த விஷயத்தையறிவது?' என்று தங்கம்மாள் யோசித்துக்கொண்டிருந்தாள். அன்றையபோது செல்ல மறுநாள் முத்துசாமி தங்கம்மாளை நோக்கி "அம்மா! மரகதத்திற்குக் கடிதம் எழுதிவிட்டேன். இந்த வண்டியில் நீ கிளம்பு" என்று கடுமையான தொனியில் கூறினான்.

இவன் சொல்லி முடிப்பதற்குள்ளேயே கிழவியின் புடவை, புத்தகம், கைத்தடி எல்லாம் வாசத்திண்ணைக்கு தயாராக வந்து விட்டன. தங்கம்மாளின் மனமென்னவோ தவிக்கிறது. முத்து அந்த மடிசஞ்சிமூட்டையுடன் வீதியிலும் இறங்கிவிட்டான். சாவித்திரியும் தந்திரமாய் "அம்மா! அக்காவை நான்கேட்டதாக சொல்லுங்கோ!" என்று கூறினாள். இதற்குள் முத்து தெருக் கோடியில் போய்விட்டான்.

தங்கம்மாள் கண்ணில் நீர்ததும்ப நடந்தாள். ஸ்டேஷனுக்கு சுமார் ஒன்னரைமைல் தூரம் இருக்கிறது. நடக்கும்போது மகனிடம் பேச்சுக்கொடுக்க எண்ணி "ஏண்டாப்பா முத்தூ! உலகத்தில் மனிதர்களுக்கு பாவம், புண்ணியம் என்ற இரண்டுதானே கடவுள் காட்டியிருக்கிறார். அதில் முக்யமானது எதுடாப்பா?" என்றாள்.

முத்து:—சரி! உன் கிழத்தொணப்பை ஆரம்பித்துவிட்டாயா! ரயில் வருவதற்கு நேரமாகிவிட்டது. பாவத்தையும், புண்ணியத்தையும் கண்டது ரொம்பபேர்கள். உன் மருமகன் லஞ்சம் வாங்கியது எந்த புண்ணியத்தில் சேர்ந்தது? உன் சின்னபிள்ளை ஊரை ஏமாற்றிப் பிழைக்கிறானே அது எந்த புண்ணியத்தில் சேர்ந்தது? நான் வட்டி வாங்குவதுமட்டுந்தானா உனக்குப் பொத்துகிறது?

தங் :—அது இல்லெடாப்பா! நீ எதோ பெரிய விபரீதமான காரியத்தில் தலையிட்டுக்கொண்டிருக்கும் அக்ரமத்தை ஊர்முற்றும் பேசிக்கொள்கிறார்கள். கொலைசெய்தல் என்ற பதத்தை வாயால் சொல்வதே எத்தனையோ பாவம். பூர்ணகர்ப்பிணியாவது தலைச்சனுவது இதெல்லாம் என்ன காரியமடா! குலநாசமாய்ப் போய் விடுமே. உன் மனைவியும் இப்போது கர்ப்பிணியாயிருக்கையில் நீ இம்மாதிரி வார்த்தை மனத்திலாவது நினைக்கலாமா?...

என்று அந்த வார்த்தையை எடுத்ததுதான் தாமதம். முத்துச் சாமிக்கு இடி இடித்தது போலாகிவிட்டது. "இந்த ரகஸ்யம் நம்மைத் தவிர ஈச்வரனுக்குக்கூடத் தெரியாதென்று நினைத்திருந்தோமே! இது எப்படி இந்தக் கிழப்பிணத்திற்குத் தெரிந்தது? ஐயயோ! குடிமுழுகிவிட்டதே. என்ன செய்வது?" என்று நடுங்கினான்.

அடுத்த நிமிடமே அதை யடக்கிக்கொண்டு பாம்பை விடக் கொடிய சீற்றத்துடன் சீறிவிழுந்து "எந்தக் கம்மனாட்டி தடியன் உனக்கந்தமாதிரி சொன்னது? எந்த கட்டேலே போறவன் இந்த மாதிரி சொல்லியது. தின்றுவிட்டு சிவனே என்று வீட்டுடன் கிடக்காமல் திறந்தவீட்டில் நாய் நுழைவதுபோல் வீடுவீடாய் ஏறி இறங்கி வம்பளந்து வீண்பொழுது போக்கி இந்தமாதிரியான விபரீத விஷயங்களை மூட்டைகட்டவா நீ இங்கு வந்தாய்? உன் விஷமபுத்தியின் கற்பனைக் கூத்தா! இம்மாதிரி இனிமேல் ஊர்க் கழுதைகளின் வார்த்தையைக் கேட்டு உளருதே"...என்று கூறிக் கொண்டே முத்துசாமி தந்திரமாய் மூட்டையுடன் தங்கம்மாளுக்கு முன் பத்துகஜ தூரத்தில் ஓடவாரம்பித்தான்.

அருகிலிருந்தால் பேச்சுக்கொடுப்பதற்குப் பதில் சொல்ல வேண்டி வருமே என்கிற பயத்தால் முத்துசாமி ஓடிவிட்டான் என்பதை நொடிப்பொழுதில் தெரிந்துகொண்டு, தன் விதியை எண்ணி அவசர அவசரமாய் அவன் பின்னால் நடந்து சென்றாள். தன் மகனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்துக் காப்பாற்று என்று பகவானை வேண்டியபடியே ஸ்டேஷனை யடைந்தாள்.

இதற்குள் முத்து டிக்கட்டுவாங்கித் தயாராக வைத்திருந்தான். தங்கம்மாள் வந்ததும் "இந்தா! ரயில் வந்ததும் ஏறிக்கொண்டு

போ! எனக்கு வேலை இருக்கிறது. நான் போகிறேன்" என்று கூறிக்கொண்டே பதிலுக்கு சிறிதும் எதிர்பார்க்காமல் போய் விட்டாள்.

தங்கம்மாளுக்கு துக்கம் தொண்டையை அடைத்து விட்டதால் அவளால் பதிலே பேச மாட்டாது கண்ணீர் முட்டி விட்டது. இந்த டிக்கட்டைத் தவிர ஒரு காலணு காசுகூட தன்னிடம் கொடுக்காமலும், பெத்த தாயார் என்ற பாசத்துடன் "அம்மா! போய்விட்டு வா!" என்ற வார்த்தைகளைக் கூடப்பேசாமலும் கல்லினுங் கடின சித்தத்துடன் போய்விட்டதானது அக்கிழவியின் நெஞ்சை அள்ளித்தின்றது.

எத்தனை வயதான போதிலும் தனது கணவர் உயிருடனிருந்தால் தன்னை இப்படி நிராகரிப்பாரா! தன் பாட்டியும் தாத்தாவும் 85 வயதுக்குமேலும் சிற்றின்ப உணர்ச்சியற்ற, பரிசுத்தமான இதய பூர்வமாய் உதிக்கும் ப்ரேமையுடன் எத்தனை அன்யோன்யமாக விருந்தார்கள்? அக்காலையில் அவர்களைக் கண்டு நான் அறியாமையால் ஏளனமாயும், பரிகாஸமாயும், எண்ணிச் சிரித்து எதிரிலேயே கேலி செய்தேனே! அந்த அருமை இந்த ஒண்டிக்கட்டையான காலத்திலல்லவா தெரிகிறது. எத்தனை இருந்தாலும் தன் புருஷன் நன்ருயிருக்கையில் ஸ்திரீகள் செத்தால்தான் உண்மையான அன்புடனும், மதிப்புடனும் காலம் கழியும். இல்லையேல் இந்த கதிதான்."

என்று தன் பழங்காலத்துக் கதைகள் ஒவ்வொன்றையும் எண்ணி பரதேசியைப்போல் உட்கார்ந்திருந்தாள். அது மிகவும் சிறிய ஸ்டேஷனுகையால் அதிக ஜனமே இல்லை. கிழவி கண்ணீரும் கம்பலையுமாய் இருக்கும் கண்ராவியைத் தாங்காது வானமும் கண்ணீர் விட்டு அழுவதுபோல் தடதட வென்று முன்னெச்சரிக்கை எதுவும் இல்லாது மழை வந்து விட்டது. கிழவி என்ன தான் செய்வாள்! பாவம்! வெட வெட வென்று குளிர் நடுக்குகிறது. சொட்டச் சொட்ட நனைந்து தெப்பமாகி விட்டாள்.

கையிலிருந்த மடிசஞ்சி நன்ருக நனைந்து விட்டது. இவளைப் போல் இன்னும் இரண்டொருவர், ரயிலுக்காகக் காத்திருந்தவர்கள் "பாட்டீ! ஏன் மழையில் நனைகிருய்? இப்படி கட்டிடத்துக்

குள் நில்லேன்" என்று சொன்னார்கள். இதற்குள் வண்டி வரும் அடையாள மணி யடித்து விட்டது. காற்றும் மழையும் கிழவியைப் போட்டு வாட்டி உருட்டி யடிக்கிறது.

ரயிலும் தன் பேரிரைச்சலுடன் வந்து விட்டது. திக்கற்ற கிழவி, இடம் பார்த்து ஏறுவதற்குத் தடுமாறியபடியே மழையின் வேகத்தில் நிதானமே புரியாமல் ஏதோ ஒரு வண்டியைத் திறந்து சொட்டச் சொட்ட அதில் ஏறிக்கொண்டாள். மறு விநாடியே வண்டி ஊதிக்கொண்டு, கிளம்பிவிட்டது.

கிழவி ஏறிய வண்டி இரண்டாவது வகுப்பு வண்டி என்பது அந்த இருட்டிலும் மழையிலும் அவளுக்கெப்படி தெரியும்? வண்டிக்குள் ஒரு துரையும் துரைசானியும் உல்லாசமாக உட்கார்ந்திருப்பதையும், விளக்கும், விசிறியும், மெத்தையும் தடபுடலாக விருப்பதையும் பார்த்த பிறகே கிழவி திடுக்கிட்டாள். அதே நிமிடம் அந்த துரைசானியின் குச்சு நாய் வௌ்ளு வௌ்ளு வென்று குரைத்துக்கொண்டே கிழவியின் மீது பாயவந்தது.

திகைத்து நடுங்கிப்போய் விட்ட கிழவியைப்பார்த்து அந்த துரையும் துரைசானியும் 'இவள் மூன்றாவது வகுப்புப் பிரயாணி தான்' என்றறிந்துகொண்டு, "கெட்டவுட். இது ரெண்டாவது வகுப்பு வண்டி. கோ! கோ!" என்று இன்னும் ஏதேதோ வசவுகளைத் தமது பாஷையில் கொட்டி யளந்து கிழவியைத் தள்ளவும் வந்துவிட்டார்கள். ஓடும் ரயிலில் தடுமாறும் கிழவி என்ன தான் செய்வாள்? ப்ரமை பிடித்தவள் போல் பதறி நின்று விட்டாள்.

மூன்றும் பதிப்பு ! வெளிவந்து விட்டது !!

ஸரஸ்ராஜன்

சில்வானம் விற்றுப் புருஷருக்குத் தெரியாமல் பணம் சேர்த்து, நகைப்பித்து பிடித்துத் தறிதலைகளாய்த் திரியும் பெண்களின் கதி என்னவாகும் என்பதை நன்கு விளக்கிக் காட்டும் சிறிய நாவல். விலை அணா 4 தான்.

ஆஸ்பத்திரியை விட்டு வெளியேவந்த கோபிக்கு அவமானத்தினல் தேகம் குன்றிப்போய் விட்டது. ஆத்திரத்தினல் மனம் வெடித்துவிடும் போலிருக்கிறது. அங்கு பிடித்த நடையை ரயிலடியில் வந்து முடித்தான். தான் எங்கு செல்வது! எந்த இடத்திற்கு டிக்கட்டு வாங்குவது என்பது தெரியாது தியங்கினன். ஊரில் வேலைக்காரியிடம் விட்டுவந்த தன்னிரு தங்கைகளின் ஞாபகம் வந்தது. உடனே தன் ஊருக்கு டிக்கட்டு வாங்கிக்கொண்டு வண்டி ஏறினன்.

வண்டி புகைந்துகொண்டு ஓடுவதைவிட அவன் மனம் புகைந்து வெந்து வேதனை செய்வதுதான் பலமாக விருந்தது. தகப்பனுரால் ஏற்பட்டுள்ள அவமான வடுவே இன்னும் ஆருமலிருக்கையில் அதனினும் பெரிய ராஜரணத்தைப்போல் விபரீதமான அவமானத்தை உண்டாக்கிவிட்டாரே கடவுள்! இந்த அவமானத்தை எப்படித்தான் ஆற்றப்போகிருர்? என்ன செய்வேன்? என் நண்பன் ராஜுவுக்கு அவளை விவாகம் செய்துகொடுக்க நாங்கள் ஏற்பாடு செய்திருக்கையில் அவள்கதி இப்படியாகிவிட்டதை அந்த நண்பனறிந்தால் அவன் என்ன நினைப்பான்? என் மீது இனி எப்படி நல்லபிப்ராயம் இருக்கும்?

அன்று பந்தயம்வைத்த நண்பனுக்கு நான் என்ன பதில் சொல்வேன்? 'நான் தோற்றுவிட்டேன். தோற்றுவிட்டேன்' என்றதை ஆயிரந்தரம் வேண்டுமாயினும் சொல்லி பந்தயப் பணத்தைக் கட்டக் கடமைப்பட்டுவிட்டேன். எனது தினசரிவாழ்க்கைக்கே நான் லாட்டரியடிக்கையில் ஆயிரம் ரூபாய்க்கு நான் எங்கு போவேன்? திருடப்போனல்கூட எனக்கு அதிர்ஷ்டம் சப்பைதான்" என்று தனக்குள் பலவிதமாக எண்ணியபடியே ரயிலில் உட்கார்ந்து ஜன்னலால் வெளிவானை நோக்கியபடியே சென்ருன்.

இவன் உட்கார்ந்திருக்கும் பலகைக்கு எதிர்ப்பலகையில் உட்கார்ந்திருந்த ஒரு தம்பதிகள் சினிமாவில் தங்கள் பெண்ணைச்

சேர்த்துவிட்டுப் பட்டபாட்டைப்பற்றியே பேசி சினிமாக்காரர்களைக் கண்டபடி திட்டிக்கொண்டுவந்ததும் கோபியின் காதில் விழாமலில்லை. அவர்களுடன் தானும் சேர்ந்துகொண்டு சக்கையாகத் திட்டினன்.

அதே ரயிலில் சினிமாவில் சேருவதற்குத் தயாராய்க் கும்மாள மடித்துக்கொண்டு பெரிய எதிர்பார்ப்புடன் பேசியவாறு செல்லும் மனிதர்களும் இருந்தார்கள். அவர்களின் பேச்சைக் கேட்ட கோபி முதலியவர்களுக்கு ஆத்திரம் பத்திக்கொண்டது. அந்த எதிர்பார்ப்புக்கார அப்பாவிகள் கூப்பிடாமலேயே அவர்களுடன் கலந்துகொண்டு சில சினிமாக்கம்பெனிகளில் நடக்கும் அக்ரமங்களை எடுத்துக் கூறி "இந்தப்பாழும் படுகுழியில் விழுந்து நாசமாய்ப்போக வேண்டாம்." என்று ஆத்திரந் தீரக் கூறினர்கள்.

ரயில் பிரயாணத்தை முடித்துக்கொண்டு கோபி வீட்டிற்கு வரும்போது, "அம்மா! அண்ணு!" வென்று அழுதுகொண்டிருந்த இரு சிறுமிகளும் இவனைப் பார்த்ததும் ஓடி வந்து காலை கட்டிக்கொண்டார்கள். இயற்கையாயுள்ள ப்ரீதியின் வேகம் ஒருபுறம் கோபியின் மனத்தை இழுத்தது. தங்கைகளை வாரியணைத்துக் கொண்டான்.

அவர்கள் "அம்மா எங்கே? அக்கா எங்கே?" என்று கேட்டார்கள். அவர்களைச் சமாதானம் செய்து பேசுகிறனே யன்றி அவர்களின் தலை சிங்காரமும், உடையலங்காரமும் அவன் கண்களைக் குத்துவதுபோலிருந்தன. ஆத்திரம் உச்சத்தை எட்டிவிட்டது. ஏதோ யோசனை செய்தான். உடனே இரு குழந்தைகளையும் அழைத்துக்கொண்டுபோய் ப்ரார்த்தனை மொட்டையைப் போல் அழுந்த மொட்டையடித்து அழ அழ இழுத்துக் கொண்டு வந்தான்.

"ஏண்ணு தலையை மொட்டையடித்து விட்டாய்! விகாரமாயிருக்கிறதே. பள்ளிக்கூடத்தில் எல்லோரும் பரிகாஸம் பண்ணுவார்களே!" என்று அழுதார்கள். அதற்கு கோபி "கண்ணு! அழாதேங்கோ! ராத்திரி சொப்பனத்தில் சாமி வந்து உங்கள் தலையை மொட்டையடிக்காவிட்டால் உங்களை விழுங்கிவிடுவேன்

என்று சொன்னார். அதனால்தான் ஊரிலிருந்து அவசரமாய்வந்து மொட்டை அடித்துவிட்டேன். இனிமேல் பயமே இல்லை" என்றான்.

ச்வாமி என்றால் குழந்தைகளுக்கு இயற்கையாயுள்ள பயமும் பக்தியும் அவர்களுக்கும் வந்துசூழ்ந்துகொண்டது. அதோடு யாருக்கும் சாவென்றால் அதைவிடப் பயங்கரமானது வேறுண்டா? முற்றுந்துறந்த முனிவர்கள்கூட தமது மரணத்தை நினைத்தால் க்ஷணநேரம் நடுங்குவார் என்று கூறுகிறார்கள். அங்ஙனமிருக்க குழந்தைகளுக்கு, சாமி தங்களை விழுங்குவதென்றால் சாக மனம் வருமா! அதோடு அவர்கள் தங்கள் மொட்டையின் கவலையையே அடியோடு விட்டுவிட்டார்கள்.

கோபிக்கோ, இவர்களைச் சரியானபடி நல்முறையில் கல்வி போதனையுடன் வளர்க்கும் மார்க்கத்தைத் தேடவேண்டு மென்ற எண்ணம் ஊர்ஜிதமாகிவிட்டது. அதற்குத் தக்க இடம் எது? இரண்டுமாமனும் இரண்டு வழியாகிவிட்டது. தள்ளாதகிழவியிடம் விட்டு வைப்பதென்றால் அதற்கு அவளுக்குச் சக்தியுமிருக்காது. நமக்குக் குடும்பம் நடத்த ஐவேஜும் இல்லை. என்ன செய்வது?" என்று யோசித்தான்.

எப்படியாவது அவர்களைத் தனியாக வளர்ப்பதே சரி என்ற முடிவிற்கு வந்து விட்டானாகையினால் எங்காவது அனாதை நிலையங்களில் விட்டு விடலாமா என்று நினைக்கும் போது அவனுக்கு தன்னுடன் காலேஜில் படித்த ஸௌம்யா என்கிற மாணவியின் ஞாபகம் வந்தது. ஏனெனில் அவளுடைய சகோதரிகள் இருவரையும் வசுந்தரா தேவியின் மேற்பார்வையிலுள்ள அனாதாச்ரமத்தில் விட்டிருப்பதை அவள் கூறக்கேட்டது நினைவிற்கு வந்தது.

அவள் மூலமாகவே இவர்களையும் அதே ஆச்ரமத்தில் சேர்த்து விடலாம் என்ற தெம்பும் சந்தோஷமும் உண்டாகியது. உடனே ஸௌம்யாவுக்கு ஒரு கடிதம் எழுதி அன்றைய தபாலுக்கே அனுப்பிவிட்டான். ம[illegible] மூன்றாவது நாள் இவன் எதிர்பார்த்த பதில் [illegible]து. [illegible]லுடன் அதைப் பிரித்துப் படிக்க[illegible]ரம்பித்தான்.

182035

மகத்தான ஆரம்ப விழா !

ஆகஸ்டுமீ 4-ம் தேதி

டெக்கான் பில்ம்ஸாரின் பயங்கர ஸடண்ட் காக்ஷி

வீர கர்ஜனை

அல்லது

ரிவெஞ்ஜ்

தமிழ்

ஒரே சமயத்தில் கீழ்க்கண்ட இடங்களில் வருகிறது :

கோவை	—	எடிஸன் டாக்கீஸ்
புதுக்கோட்டை	—	பிரஹதாம்பாள் டாக்கீஸ்
வேலூர்	—	ஆபரா டாக்கீஸ்
பெங்களூர்	—	ஆபரா டாக்கீஸ்
கும்பகோணம்	—	டைமண்ட் டாக்கீஸ்
காஞ்சீபுரம்	—	முருகன் டாக்கீஸ்
சிதம்பரம்	—	நடராஜா டாக்கீஸ்

மதுரை, திருச்சி, சேலம், திண்டுக்கல், திருநெல்வேலி, சென்னை, தஞ்சாவூர் இன்னும் இதர இடங்களிலும், சீக்கிரம் வரும்.

முடியும் தறுவாயிலிருக்கிறது :

நீலமலைக் கைதி

ஜெயமுழக்கத்துடன் ஓடும் படங்கள்

மின்னல் கொடி

பாக்ய லீலா

(தமிழ்)

டெக்கான் பிலிம்ஸ் டிஸ்டிரிபியூடர்ஸ்,

பெங்களூர் ஸிடி, : : ஹைதராபாத்.

Tel : INDAR.

"JAGANMOHINI" Vol. XVI No. 8 Regd. No. M. 1

தலைவலிக்கு

ஆஸ்பிரினை விலக்குங்கள்
இருதயக் கோளாறுகளையும்
விலக்குங்கள்

அம்ருதாஞ்சனை
உபயோகியுங்கள்

எல்லா வலிகளையும், சுளுக்குகளையும்
சொஸ்தப்படுத்துகிறது.

அம்ருதாஞ்சன் லிமிடெட்.,

சென்னை கல்கத்தா பம்பாய்

Printed & Published by V. M. Parthasarathy
at " Jaganmohini " Press, 26, Car St, Triplicane, Madras.